என்றும் உங்களுடன்

ங்கையர் மலர்

டெம்பர் 2010 | MANGAYAR MALAR | 256 பக்கங்கள் ரூ.20/-





இந்தியாவின்
நாகரிக நங்கையர்கள்
விரும்பி அணிவது VBJ
VB
SINCE 1900
மோகம்
உன்னதமான. தூய்மையான மற்
நேர்த்தியான வைரங்களால் உருவாக்
கண்கவர் வைர நகைகள். உங்க
தனித்துவத்தை வெளிப்படுத்த
நீங்கள் தேர்ந்தெடுக்கும் சரியான இட



RmKV
Wedding Silks
பிரைடல் செவன்
உங்கள் திருமணத்தின் நிச்சயதார்த்தம் முதல் கிரஹப்பிரவேசம் வரையிலான ஏழு சுபமுகூர்த்தங்களையும் கொண்டாடுங்கள், ஆரெம்கேவியின் பிரைடல் செவனோடு!
உங்களுக்காகவே ஆரெம்கேவியின் கைதேர்ந்த நெசவாளர்களால் உருவாக்கப்பட்ட அற்புதப் படைப்புகள் என்றென்றும் உங்கள் திருமணத்தை மகிழ்வோடு மனதில் நினைக்கச் செய்யும்.
இந்த சிறந்த பிரைடல் செவன் கலெக்ஷன் மெல்லிய பட்டிழைகளால் வினோ லைட் வெயிட் எனும் நுட்பத்தில் நெய்யப்பட்டு 100% இயற்கையான முறையில் சாயமேற்றப்பட்டு நுணுக்கமான எம்பிராய்டரி வேலைப்பாடமைந்த காஞ்சிபுரம் பட்டுப்புடவைகள்.
சென்னை | பனகல்பார்க்
கோயம்புத்தூர் | ப்ரூக்-பீல்ட்ஸ்
திருநெல்வேலி | வண்ணார்பேட்டை
toll free no 1800 425 3105
(applicable within India only from 10 am to 9 pm)
to know more about our new Bridal Seven collection
SMS Bridal7 to 53636
purchases online at
www.rmkv.com
subrata bhowmick design



தூரிகை ட்யூஷன்!



ஜெயஸ்ரீ ராஜ் நினைவுச் சிறுகதைப் போட்டி

ரூ. 7,500 பரிசுக் கதை!

கொலு டிப்ஸ் 64! தொகுப்பு சுதா ரங்கநாதன்

முதலில் படிக்க...

ஒரு வார்த்தை... 5

அன்பு வட்டம் - 180

குஷி பக்கங்கள்

என் செல்லமே - 20

சந்தித்தோம்... சிந்தித்தோம்... சந்தோஷித்தோம் - 56

கோலம் - 120

சொல்ல விரும்புகிறோம் - 170

விழிப்புணர்வு

ரேஷன் கார்டு பெறுவது எப்படி? - 40

சமையல்

தலை வாழை சமையல் - 76

திருமண மலர் - 145

ஆன்மிகம்

அழகன் முருகனிடம்... - 98

செப்டெம்பர் மாதம் எப்படி - 105



மிரட்டும் மெகா சைஸ் கொலு - 8

வந்தாள் மகாலக்ஷ்மி - 18

அன்பை வேண்டுவோம் - 25

பிள்ளையார் கையில் மோதகம் ஏன்? - 36

சிக்குபுக்கு ரயிலில் நவராத்திரி! - 50

அம்மன் தரிசனம் - 52

நைவேத்ய பாயசம் - 54

மைசூர் டு தொட்டியம் - 60

விநாயகர் சதுர்த்தியும் வித வித பிள்ளையார்களும்! - 64

மை டியர் மைண்ட் பவர், வாங்க தொழிலதிபர் ஆகலாம், நியூஸ்மார்ட் பகுதிகள் அடுத்த இதழில்...





ரோஜா மலரே, ராஜகுமாரி!



குக்கரி க்வீன்!



அட்டையில்: கீர்த்தி சாவ்லா
வண்ணப்படம்: 'சன்ஷைன்' மனோஜ் கிருஷ்ணா

பண்டிகை ஸ்பெஷல்-2

அகிலாண்ட நாயகி வாரப்பதிகம்! - 68

நாயகர் சதுர்த்தி லட்டு - 70

ப்பனே... அப்பனே
பிள்ளையார் அப்பனே! - 74

ளபாக்யம் தரும் சிவசக்தி சக்கரம் - 90

ண்டியா ஆட்டமும் ஆட - 102

ப்பெரும் தேவியர் அகல் - 112

ஸ லீலை - 114

ாலுவில் ஒரு உடையாத பொம்மை
- சிறுப்புச் சிறுகதை - 116

யச அகராதி - 122

ட்டன் கிருஷ்ணா, லவ்லி ராதா! - 126

யல் நாட்டில் நவராத்திரி - 128

நவராத்திரி டிட்பிட்ஸ் - 130

சகலமும் தரும் ஸ்ரீ ஸூக்தம் - 148

குழித்துறை மகாலக்ஷ்மி - 164

பிள்ளையார் தயிர் சாதத்துக்கு உப்பு எதற்கு ? - 166

ஆசைகளை நிறைவேற்றும் ஆஷாபூரா அம்மன் - 178

உங்களோடு ஒரு ஜாலி மீட்டிங்! - சிறு இடைவேளைக்குப் பிறகு உங்களைச் சந்திக்க வருகிறோம் (ஆ-ர்)

ிர் மாத இதழ்!

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்

மலர் : 30 இதழ் : 8 செப்டெம்பர் 2010

மனேஜில் எனக்கு நவராத்திரி கொலு என்றாலே அலர்ஜி!

"படிக்க விடாமல், பிரைவஸி இல்லாமல், ஒரே கலாட்டா செய்கிறார்களே!" என்று வெறுப்பாக இருக்கும். அன்றாட வேலை அதிகமாகி விடும்; வீட்டு ஹாலின் பெரும் இடத்தை கொலுப்படி அடைத்துக் கொள்ளும் என்பதாலும் பல சமயம் நியூசென்ஸாகக் கருதுவேன்.

'ஸ்ரீ சக்ர ராஜ', 'கற்பூர நாயகியே', 'மாணிக்க வீணை ஏந்தும்' என்று எல்லா வருடமும் ஒரே பாடலைப் பாடும் பெண்களுக்கு, அவர் தம் முத்திரைப் பாடல்களை வைத்து, 'வீல்ஸ்', 'கற்பூரம்', 'டொய்ங்... டொய்ங்' என்று பட்டப் பெயர்கள் சூட்டிச் சிரிப்போம். மொத்தத்தில் கொலு வைப்பது ஒரு ஏ.வ.ப! (ஏண்டா வருகிறது பண்டிகை!)







ஒரு வார்த்தை!

ஒருமுறை, என்னுடைய அப்பா, கொலு வைப்பதன் தாத்பரியத்தை விளக்கினார்.

"இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் முதல் தேவை, உயிர் பிழைத்தல்தான்! அதாவது survival. அதற்கு நீரும், உணவும் தேவை.

அடுத்த தேவை... ஆடை, வீடு, அணிகலன், வாகனம் போன்றவை. அதாவது growth. அதற்கு தொழில் நுட்ப அறிவும் பணமும் தேவை.

அடுத்த தேவை... உயர்நிலை. அதாவது Sublimity. உயிரும் பொருளும் பெற்றதோடு நில்லாமல், ஞானத்தை அடையவும் முயற்சித்து, அதை எட்டும் போதுதான் அவன் முழு மனிதனாகிறான்.

இதன் அடிப்படையில்தான் நவராத்திரி கொலுவின் ஒன்பது படிகளும் வைக்கப்படுகின்றன.

கீழே உள்ள மூன்று படிகளில் உயிர் வளர்க்கத் தேவையான அடிப்படைப் பொருள்களைக் காட்சிக்கு வைக்கிறோம்.

(மண், வயல், நதி, உழவன், கறவை, பறவை, தானியம், காய்கனி போன்றவை)

நடுவிலிருக்கும் மூன்று படிகளில் நமது வளர்ச்சியையும் பாதுகாப்பையும் எடுத்துக்காட்டும் பொருள்கள் இடம் பிடிக்கின்றன.

(நவீன வீடுகள், நாணயங்கள், வாகனங்கள், நூதனப் பொருள்கள், நாகரிக மனிதர்கள், ராஜாராணி, சிப்பாய்கள் போன்றவை.)

மேலே உள்ள மூன்று படிகளில்

கல்கி

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்
தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்!

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

பொறுப்பாசிரியர் : அனுராதா சேகர்
வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்
தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8877
mangayarmalar@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.mangayarmalaronline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.250/-
வெளிநாடு : ரூ.2,200/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஞானத்தைக் குறிக்கும் கலையை வளர்க்கு அம்சங்கள், தெய்விகக் குறியீடுகள் வைக்கப் ப கின்றன.

(கலைஞர்கள், மகான்கள், கடவுள் சிலைக போன்றவை)

உயிர்களை ஜனிக்க வைப்பவள் துர்க்கை.

பொருள் வளம் தருபவள் லக்ஷ்மி.

ஞானம் தருபவள் சரஸ்வதி.

இதன் அடிப்படையில்தான் முப்பெரு தேவியரை வணங்கி, மூன்று சக்திகளுக்கு மூன் ராத்திரிகள் என நவராத்திரி கொண்டாடி மகிழ றோம்!' என்று என் தந்தை சொன்ன போதுகூ நான் அதை ஏதோ ஒரு கதை போலத்தா கேட்டுக் கொண்டேன்.

சில வருடங்கள் கழித்து, கல்லூரியில் பட கும்போது ஆல்ஃபிரட் மார்ஷல், ஹெர்ஸ்பெர் மாஸ்லோ போன்ற பொருளாதார, மனவிய நிபுணர்களின் தியரிகளைப் படித்தபோது, அவ நமது நவராத்திரிக் கோட்பாடுகளுடன் அச்சு அ லாக ஒத்துப் போவதைக் கண்டு அசந் போனேன்.

முதலில் உயிர் பிழைத்தாலே போதும் என் கீழ்நிலை. பிற்பாடு, வசதிகளைப் பெருக்கி கொள்ளும் ஆர்வம். கிடைத்த செல்வத்தை பாதுகாக்கும் முயற்சிகள்... எல்லாம் ஓரள கிடைத்தபின், கலை, இலக்கியத்தில் நாட்டம் அதைத் தொடர்ந்து ஞானமும் மோனமும் வே டும் உயர் நிலை. அதைப் பெறவே... இ மனிதப்பிறவி. எல்லாமே படிப்படியான உயர்

நமது வாழ்வின் நோக்கத்தை, மரபி மாண்பை, சிறு பொம்மைகளை வைத்தே. இ விட எளிமையாகச் சொல்லித் தர நமது மு னோர்களைத் தவிர வேறு யாரால் முடியும்?

அந்தப் பிறவி ஞானஸ்தர்களை வணங் கொண்டாடுவோம்...

அனுஷா நடராஜன்



தீராத ARTHRITIS வலியிலிருந்து விடுதலை
அறுவை இல்லா நவீன சிகிச்சை
PEMF
treatment
works
to stop
the pain ..
வலி இல்லை
அறுவை சிகிச்சை இல்லை
நீண்ட நாட்கள் மருந்து இல்லை
குறைந்த கால சிகிச்சை
பக்கவிளைவுகள் இல்லை
மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற வேண்டிய அவசியம் இல்லை.
NEOMED HOSPITAL
SPECIALITY & RESEARCH CENTER
Chennai : 2181, L-Block, 12th Main Road, Anna Nagar, Ph : 044-2620 1147 / 2620 0882. Fax : 2620 0631
Madurai : 11, Lakeview Road, Opp. Sundaram Theatre, K.K. Nagar, Ph : 0452-2581414, 2581515.
Salem : 127 / 1, Varalakshmi Towers/ Gandhi Road, Ph : 0427-2311818, 2311819.
Trichy : No. 52, Central Bazaar Street, Tennur, Trichy. Ph : 0431-2791051, 2791052.
www.neomedhospitals.com



எல்லா வளங்களையும் தரும் அஷ்டமங்கள கலசம், சூர்ய, சந்திரப் பிரபைகளின் வழியே உள்ளே நுழைய வைக்கும் வெங்கடேஸ்வரா ஆலயம், ஏழு மற்றும் நான்கு குதிரைகள் பூட்டிய சதங்களில் பிரம்மாண்டமாய் சூரிய, சந்திரர்கள் என்று வெளிப்புறமே பிரமிக்க வைக்கிறது.

மிரட்டும் மெகா சைஸ் கோவில்!

கைலாயம், பிரம்மலோகம், ஸ்ரீவை குண்டம், நாகலோகம், பாதாளலோகம் இவற்றையெல்லாம் பிரம்மாண்ட சைஸில் பார்க்க வேண்டுமா... ஹைதரா பாத் நகரிலிருந்து சுமார் அறுபது கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சுரேந்த புரிக்கு வாங்க!

ஆந்திராவைச் சேர்ந்த சத்யநாராயணா, தமது மகன் சுரேந்தரின் நினைவாக 'குந்த சத்ய நாராயணா கலாதாமம்' என்ற பெரிய மியூஸியத்தை சென்ற இரண்டு வருடங் களாக பொது மக் கள் பார்வைக்கு நிறுவியுள்ளார்.



சுமார் அறுபது அடி உயரத்தில் பஞ்ச முக ஆஞ்சநேயர்... ராவணனை சம்ஹாரம் செய்ய 'கதை'யோடு காட்சி அளிக்கிறார்.

ஸ்ரீ கிருஷ்ண பகவானின் விஸ்வரூப தரிசனம் காண, கண்கள் நிறைந்துவிடுகின்றன. மயன்

அமைத்த தங்க மாளிகை ஓர் அரங்கில்... அதைச் சுற்றி வர கண்ணாடிகள் ஜொலிக்க, நீரென்று நினைத்து விழும் துரியோதனைப் பார்த்து உப்பரிகையில் சிரிக்கும் திரௌபதி... 60 அடி உயர இமய மலையின் மேலிருந்து கங்கை பகீரதன் தவத்துக்கு நதியாகி வருகிறாள்... இப்படி எதையும் விடாமல் பார்த்து வர உதவும் வகையில் கீழே தரையில் அம்புக் குறியிட்டு வழி காட்டப்பட்டிருக்கிறது.

கஜேந்திர மோட்சம், காளிங்க நர்த்தனம் எல்லாம் கண்டு வியந்தபடி செல்லும் நாம் இறுதியாக மாட்டிக் கொள்வது பத்மவியூகத்தில்... உயிருள்ள குதிரைகளைப் போன்ற நூற்றுக்கணக்கான குதிரைகள், வீரர்கள் நடுவே மாட்டிக்கொண்டு சுற்றிச் சுற்றி வந்தால்... நடுவில்... பல பேரால் தாக்கப்படும் அபிமன்யுவைக் கண்டு திகைத்துப் போகிறோம். நல்லவேளை... பத்மவியூகத்திலிருந்து நாம் வெளியே வர வழியிருக்கிறது.

இது தனியார் மியூஸியம் என்பதால் ஒரு நபருக்கு 250 ரூபாய் நுழைவுக் கட்டணம் வசூலிக்கிறார்கள்.


தொகுப்பு:-
பத்மினி பட்டாபிராமன்



சத்ஜோதி, வாசுதேவன், அகோரன், தத்புருஷன் மற்றும் ஈசான்யன் என்னும் பஞ்ச முகங்களுடன் திரிபுரத்தை வெல்லும் கோலத்துடன் காட்சி தரும் பரமசிவனைவிட கங்கையில் கால் நனைத்து கைலாயத்துக்குள் நுழைந்து உயரமான சிவ பார்வதியைத் தரிசிக்கலாம்.



நான்கு வேதங்களும் நான்கு ரிஷிகளாய்... முப்பதடி உயரத்தில் தங்கக் கதவுகள் வரிசையாகத் திறந்திருக்க உள்ளே நுழைந்தால் பாற்கடலில் பள்ளிக் கொண்டிருக்கும் மகா விஷ்ணு.



நாக தேவதைகள் அற்புதமாக சிலை வடிவத்தில் காட்சி தரும் நாகலோகம்...



இந்தியாவிலும் மற்ற நாடுகளிலும் உள்ள புகழ் பெற்ற ஆலயங்களின் கோபுரங்கள், (அந்தந்தக் கடவுள்களுடன்...)



ரிஷிகள் தவம் செய்யும் பாதாள லோகம்... அடுத்து தவறுகளுக்கு என்னென்ன தண்டனைகள் என்று சித்திரங்கள் வடிவிலும் சிலைகள் வடிவிலும் மிரட்டும் எமலோகம்...

இந்த டிஸைன் தான்





எஸ். சரஸ்வதி,
ராயப்பேட்டை,
சென்னை-14

பட்டுப் புடைவையாக உருவாக்கப்பட்டுப் பரிசாக வழங்கப்படும் டிஸைன்!





டி. நித்யா,
திருவான்மியூர்
சென்னை-41

சிறப்புப் பரிசாக ரூபாய் 5,000/- மதிப்புள்ள பரிசுக் கூப்பன் பெறும் டிஸைன்!

…ப்பர்!

போட்டி முடிவுகள்!

அன்புமிக்க கலாரசிகக் கண் மணிகளுக்கு...

வணக்கம். மங்கையர் மலர் ஜூன் இதழில் 'டிஸைன் புதுசு... புடைவை பரிசு' என்ற தலைப்பில் புடைவை டிஸைன் போட்டி ஒன்றை அறிவித்திருந்தோம்.



நெசவுக் கலைஞர்களின் உதவியுடன் சிறந்த பத்து டிஸைன்களைத் தேர்வு செய்து, அந்த டிஸைனுக்கான பிரத்யேக கோட் நம்பரையும் சென்ற இதழில் கொடுத்து, 'உங்களுக்கு பிடித்த டிஸைனைத் தேர்வு செய்து, அதற்கான கோட் நம்பருடன் எஸ்.எம்.எஸ் அனுப்பி வோட்டுப் போடுங்க' என்றும் சொல்லியிருந்தோம்.

சும்மா சொல்லக்கூடாது. வாசகியர் வாக்குகள் அளிப்பதிலும் அசத்தி விட்டார்கள். ஆயிரத்துக்கும் மேல் பதிவான வாக்குகளிலிருந்து இருநூறுக்கும் அதிகமான வாக்குகள் பெற்று, வின்னர் இடம் பிடித்த வாசகி சரஸ்வதி. (டிஸைன் 007...) மிகச் சில வாக்குகள் வித்தியாசத்தில் ரன்னர் இடம் பிடித்த வாசகி நித்யா (டிஸைன் 009...)

பெருவாரியான வாக்குகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சரஸ்வதியின் (007) டிஸைன், 'பாலம் சில்க்ஸ்' நெசவுக் கூடத்துக்குச் சென்று, புடைவையாக உருவாக்கப்படும்.

பொங்கல் திருநாளை முன்னிட்டு பரிசு பெறும் பத்து கலாரசிகர்களும் பாலம் சில்க்ஸ் ஷோரூமிற்கு வரவழைக்கப்படுவர். வின்னர் சரஸ்வதிக்கு புடைவையும், ரன்னர் நித்யாவுக்கு சிறப்புப் பரிசாக ரூ.5,000/- மதிப்புள்ள பரிசுக் கூப்பனும் மற்ற பரிசாளிகளுக்கு ரூ.2,500/- மதிப்புள்ள பரிசுக்கூப்பன்களும் அப்போது வழங்கப்படும்.

டிசம்பர் மாத இறுதியிலோ ஜனவரி மாத முதல் வாரத்திலோ இந்த நிகழ்ச்சி நடைபெறும். பரிசு பெற்றவர்களுக்கு, தனிப்பட்ட முறையில் இது சம்பந்தமான கடிதங்கள், நேரம், தேதி விவரங்களோடு மங்கையர்மலர் அலுவலகத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும். பரிசளிப்பு விழாவிலேயே படுஜாலியாக ஷாப்பிங்கும் செய்யலாம்...

'டிஸைன் புதுசு... புடைவை பரிசு!' என்ற புதுமையான இந்தப் போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி! பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்! வாக்களித்த வாசகியருக்கு அன்பு கலந்த வணக்கம்!

அன்புச் சகோதரி ஜெயஸ்ரீ ரவி

1. ஆர்.சி.இந்துமதி, பெங்களூரு, 2. ஆர்.ராமலக்ஷ்மி, தென்காசி, 3. எச். விஜயலக்ஷ்மி, எர்ணாகுளம், 4. எம். அமுதவல்லி, தஞ்சாவூர், 5. பிரபா சுபராமன், நியூடெல்லி 6. லக்ஷ்மி ராஜாராம், பெங்களூரு, 7. சாந்தி புகழேந்தி, திருச்சி 8. எம். உதயவாணி, சென்னை

ரூபாய் 2,500/- பரிசுக் கூப்பன் பெறும் பரிசாளிகள்!



சுயமதிப்பீடு செய்வதற்கும் என்னை உயர்த்திக் கொள்வதற்கும் இது பெரும் உதவியா இருக்கு. அதோடு நான் என் வாழ்க்கையில் 3+4 என்ற ஃபார்முலாவும் கடைப் பிடிக்கிறேன் என்றார்.

''அது என்ன 3+4''. ''வாரத்தில் மூன்று நாட்கள் ருசிக்காகவும், நான்கு நாட்கள் பசிக்காகவும் சாப்பிடுவதால் உடல் நலத்தை பாதுகாக்க முடிகிறது.

''நாம் நம்முடைய இன்ப துன்பங்களை நாண யத்தில் உள்ள தலைப் பக்கம், பூப்பக்கம் உள்ளது

மூத்தான மூன்று!

சமீபத்தில் எங்கள் சின்ன தாத்தா கிருஷ்ணமாச்சாரி, எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார். தினமும் அவர் இரவு சாப் பாட்டை முடித்தவுடன் பதினைந்து நிமி டங்களுக்கு குறையாமல் டைரி எழுது வார். ஆர்வக்கோளாறு காரணமாக, நான் அவரிடம், ''தாத்தா, நீங்க தினமும் என்ன எழுதறீங்க?'' என்று கேட்டபோது, அவர் தந்த பதில்கள் மிகவும் பயனுள்ளதாக இருந்தன.

''நான் தினமும் காலையில் எழுந்தது முதல் இரவு படுக்கும்வரை செய்ய வேண்டியவற்றை, பட்டியலிட்டு வைத் துள்ளேன். அதற்கு மதிப்பெண்ணும் வரையறுத்துள்ளேன். தினமும் செய்த காரியங்களுக்கு ஏற்றவாறு மதிப்பெண் போடுவேன். என்னை நானே

போல் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒருமுறை தலை விழுந்தால், அடுத்த முறை பூ விழும் என்ற கண்ணோட்டத் தோடு செயல்பட்டால், வாழ்க்கை நம் கையில்'' என்றார். முத்தான மூன்று அறிவுரைகள்... அருமையான கருத் துகள். நாமும் கடைப் பிடிக்க லாமே!

- ஜெயஸ்ரீ எம். சாரி,
மகாராஷ்டிரா



பஜ்ஜி போடும்போது, நான் கைந்து பூண்டு பற்களை அரைத்து ஒரு டீஸ்பூன் சீரகத்தைப் பொடித்துப் போடவும். பஜ்ஜி சுவையாக இருப்ப தோடு வாயுக் கோளாறும் ஏற்படாது.

- பகவதி பிரவீன்,
சென்னை




KCR
AN ISO 9001 COMPANY
அரைச்ச மாவையே
அரைக்காதீங்க.
புதுசா ட்ரை
பண்ணுங்க.
Anantha
GRIND
FORCE
இதுதான் லேட்டஸ்ட்!
இந்தியாவில்
முதல் முறையாக
ஓவர்லோட்
பாதுகாப்புடன்
சிட்ரஸ்
ஜூஸர்
இலவசம்!
Warranty
2 years
grinder
5 years
motor
www.anantha.info

வாசகர் அனுபவம்

கனவு பலித்தது!

சமீபத்தில் விசித்திரமான ஒரு கனவு கண்டேன். ஒரு கோயிலுக்கு நாத்தனாருடன் செல்கிறேன். அந்தக் கோயிலில் 'ஓம் நமோ நாராயணா!' என்று எழுதியுள்ளது. பெருமாள், மனைவியர் இருவருடனும் 'ஜம்' என்றிருக்க துளசி மாலை நிறைய சாற்றியிருந்தது. பரவசத்துடன் சாமி கும்பிட்டுவிட்டு அடுத்தப் பக்கம் வந்தால் இரட்டைப் பிள்ளையாருடன் இன்னும் நிறைய சாமி சிலைகள் இருப்பதையும் கண்டேன். 'பில்லி சூன்யம் இருந்தால் இந்த இடத்துக்கு வந்தாலே எல்லா தோஷங்களும் போய்விடும். இது கல்வெட்டிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. என்று நாத்தனாரிடம் சொல்லிவிட்டு திரும்பி வெளியே வருகிறோம்.

ஒரே காக மாதிரியான இலைகளுடன் கூடிய இலந்தை மரக் காடு எல்லாவற்றையும் பார்த்துவிட்டு வீடு திரும்புவது போல் கனவு. சில நாட்கள் கழிந்தன. எனது தங்கை, ''திண்டுக்கல் அருகே வேடசந்தூர் அருகே தாடி கொம்பு என்ற ஊர் உள்ளது. நாங்கள் குடும்பத்துடன் போகிறோம். நீயும் வருகிறாயா'' என்று ஃபோன் செய்தாள். நானும் சென்றேன்.

பெருமாள் பார்க்கச் செல்லும் படியில் 'நமோ நாராயணா' என்று எழுதியிருந்ததை பார்த்தவுடனேயே உடம்பில் ஒரு சிலிர்ப்பு. உள்ளே இருந்த பெருமாள் நான் கனவில் எந்தக் கோலத்தில் பார்த்தேனோ அப்படியே துளசி மாலை சாற்றியபடி காட்சியளித்தார். ஒரு நிமிடம் என்னை மறந்து 'நமோ நாராயணா' என்று கத்தி அழுது விட்டேன்.

பார்க்கப் பார்க்கத் திகட்டாத பெருமாளைவிட்டு கீழே இறங்கி வந்து தாயார் சன்னிதி முன்னதாக நிறைய தெய்வச் சிலைகள் பார்த்தோம். வெளியே வந்தால் காக காசாக உள்ள இலந்த இலை உள்ள மரக்காடுகள். அந்த இடமும் கனவில் கண்ட இடமும் ஒரே மாதிரி. நான் மூச்சுவிட மறந்து, ஒரு நிமிடம் நின்று, 'பெருமாளே! கனவில் காட்சி கொடுத்து, நேரில் வரவழைத்து விட்டாயே' என்று நினைத்து ஆனந்த கண்ணீர் விட்டேன்.

- வி. விஜயலக்ஷ்மி வேலுசாமி,
உறையூர்



"அத்தைக்கு மீசை முளைச்சா சித்தப்பாவா?'' என்று கேலியாகக் கேட்பார்கள். அது இப்போதெல்லாம் உண்மையாகி விட்டது. அரும்பு மீசையும், அடர் தாடியுமாகப் பல பெண்களைப் பார்க்கிறோம்.

அந்தக் காலத்துப் பெண்கள், தினமும் மஞ்சள் பூசி குளிப்பதால் முகம், கை, கால் போன்ற பகுதிகள் சிறு முடிகூட இல்லாமல், வாழைத் தண்டு போல் பளபளக்கும். இப்போது மஞ்சள் பூசுவது அவுட் ஆஃப் ஃபேஷனாகி விட்டது.

அதனால் இனியாவது மஞ்சள் பூசத் தொடங்குங்க. கப்பு மஞ்சள், கறி மஞ்சள், விரலி மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், கிழங்கு மஞ்சள், மர மஞ்சள் என மஞ்சளில் பலவிதங்கள் உண்டு. கஸ்தூரி மஞ்சள் பொடியைத் தொடர்ந்து பயன்படுத்துங்க. அது ஆடையைப் பாழ்படுத்தாது!

சரி, சின்ன வயதில் மஞ்சள் தேய்த்துக் குளிக்காமல் விட்டு விட்டோம். இப்போது எப்படி என்பதுதானே உங்கப் பிரச்னை?

ஆரஞ்சு டானிக் என்றொரு தைலம் கிடைக்கிறது. இதை முடி வளரும் இடங்களில் பூசி, நன்றாக ஊற வைத்து, பின்னர் எலுமிச்சை, நாரத்தை வேர்களும், சந்தன சேரா போன்ற மூலிகையும் கொண்ட ஆயுர்வேத தூளைப் பூசிக் குளித்தால், முடி நிரந்தரமாகவே கொட்டிவிடும்.

நாடி பிடித்துப் பார்த்து, மாதவிடாய் கோளாறுகள், தைராய்டு, ஹார்மோன், சுரப்பிப் பிரச்னைகள் இருப்பின் அதை சரி செய்யவும். காய்கறிகள், பேரீச்சை, திராட்சை, சாத்துக்குடி பழம் உட்கொள்ளலாம். இது சருமத்தை மிருதுவாக்க உதவும்.



பூசு மஞ்சள் பொடி

தேவை: கஸ்தூரி மஞ்சள், வெட்டிவேர் : தலா ½ கிலோ, வேப்பம்பட்டை : 75 கிராம்

இந்த மூன்றையும் பொடியாக வெட்டி, வெயிலில் காய வைத்து, மிஷினில் அரைக்கவும்.. தினமும் காலையில் ஒரு டீஸ்பூன் தேங்காய் எண்ணெயை உடம்பில் தடவி, பத்து நிமிடம் கழித்து, இந்தப் பொடியைத் தடவிக் குளிக்கவும். கமகமக்கும், குளிர்ச்சி தரும், முடி நீக்கும் பொடி தயார்!



ஆயுர்வேத அழகுக் கலைஞர் மகாலக்ஷ்மி

3



பிரச்னை : தேவையற்ற இடங்களில் முடி வளருதல்

ஏஜ் க்ரூப் : அனைத்து வயதினருக்கும்

நிரந்தரத் தீர்வு: உரோமம் நீக்கும் ஆயுர்வேத சிகிச்சை

என்றும் 16!

ஈஸ்டர்ன்®
குழம்பு மசாலா

ஞாபகம் வருதே... ஞாபகம் வருதே...
ஈஸ்டர்ன் மசாலாவில் குழம்பு செய்தால்
பாட்டியின் கை மணம் ஞாபகம் வருதே!

ஈஸ்டர்ன் குழம்பு மசாலா, தமிழ் நாட்டுக்கே உரிய குழம்பின் அருமையான சுவையை, உங்கள் பாட்டியின் கை மணத்தோடு அப்படியே உங்களுக்குத் தருகிறது! இட்லிக்கோ, சாதத்திற்கோ இதை விட பொருத்தமான ஜோடி இருக்க முடியுமா? காய்கறிக் குழம்பு, வெங்காயக் குழம்பு, வெண்டைக்காய் குழம்பு, வத்தக் குழம்பு, மீன் குழம்பு, முட்டைக் குழம்பு என எது செய்வதாக இருந்தாலும், ஈஸ்டர்ன் குழம்பு மசாலாவையே பயன்படுத்துங்கள்.

செய்வது

ஈஸ்டர்ன் குழம்பு மசாலா - 2 டேபிள் ஸ்பூன்
வெந்தயம் - 1/2 டீஸ்பூன்
சின்ன வெங்காயம் - 10
பூண்டுப் பற்கள் - 10
நல்லெண்ணெய் - 1/2 கப்
புளிக் கரைசல் - 1/3 கப்
கறிவேப்பிலை - 1 ஆர்க்கு

கடாயில் இரண்டு டேபிள் ஸ்பூன் எண்ணெயைக் காயவைத்து, அதில் நறுக்கிய வெங்காயத்தில் பாதி, துருவிய தேங்காய், வெந்தயம் போன்றவற்றை, மெல்லிய தீயில், பொன்னிறமாக வதக்கவும். அத்துடன் ஈஸ்டர்ன் குழம்பு மசாலா சேர்த்து நன்கு அரைக்கவும். மீதமுள்ள எண்ணெயை சூடாக்கி, கடுகு, கறிவேப்பிலை, வெங்காயம், பூண்டு இவற்றை தாளித்து, 1 நிமிடம் வதக்கவும். அத்துடன் அரைத்த விழுதையும், புளிக் கரைசலையும் சேர்த்து 5 நிமிடம் கொதிக்க விடவும். எண்ணெய் பிரிந்து வரும் வரை கொதிக்க விடவும். இட்லி அல்லது சாதத்துடன் சூடாகப் பரிமாறவும்.



பாரம்பரிய
தமிழ் சமையல்



ஈஸ்டர்னின் சிறப்பு ஆதாயம்
தொடர்ந்து 12வது முறையாக, ஈஸ்டர்ன் இந்தியாவிலிருந்து மிக அதிக அளவில் மசாலா பொடிகளை ஏற்றுமதி செய்வதற்காக, இந்திய அரசு வழங்கும் விருதினைப் பெற்றுள்ளது. ஈஸ்டர்ன் நிறுவனம், தனது தயாரிப்புகளின் தூய்மையை உறுதி செய்வதற்காகவே, அரசு அங்கீகாரம் பெற்ற, உலகத் தரம் வாய்ந்த பரிசோதனைச் சாலைகளை அமைத்துள்ளது.

FLAVOUR LOCK PROCESSING
A quality product from Eastern
An ISO 22000, HACCP Certified Company | Email: mktg@eastern.in | Ph: 044 22252939



மஹாராஷ்டிர மாநிலத்தின் நான்கு பகுதிகளான மேற்கு மஹாராஷ்டிரா, மராட்வாடா, கொங்கன் மற்றும் விதர்பா பகுதிகளில் மகாலக்ஷ்மி பூஜை வெகு விமர்சையாக அனுசரிக்கப்படுகிறது.

இரண்டு சகோதரிகள் பிறந்த வீட்டு, புகுந்த வீட்டு வறுமை நிலையை நினைத்துக்கொண்டு மிகுந்த வருத்தத்தோடு ஒரு காட்டின் வழியே சென்று கொண்டிருந்தனர். அப்போது அவர்களுடைய கை, ஒரு நாகத்தின்மேல் பட்டது. நாகமோ பல நாட்களாக அதன் தலையின் மேல் இருந்த கட்டியினால் மிகவும் அவதிப் பட்டு கொண்டு இருந்தது. அந்த சகோதரிகளின் கைப்பட்டவுடன், அந்தக் கட்டி குணமாக, நாகம் மகிழ்ச்சியுற்று, ''உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டது. அச் சகோதரிகள் ''எங்கள் வறுமையைப் போக்க வேண்டும்'' என்றனர். ''நீங்கள் இருவரும் இந்தக் குன்றின் கீழ் சென்று பாருங்கள். உங்கள் வாழ்வு மேன்பட்டிருக்கும்'' என்று சொல்லியபடி நாகம் மறைந்தது. அவ்வாறே அச் சகோதரிகளின் வறுமையும் நீங்கியது. இவ்வாறு நன்மை செய்த சகோதரிகளை நம் வீட்டுக்கு அழைத்து வழிபட்டால் நம் குடும்ப நலம் கூடும் என்பது ஐதிகம். இந்தப் பூஜையை எனக்கு அறிமுகப்படுத்தியவர் விஜயா விநாயக் ராவ் பவார்.

மகாலக்ஷ்மி பூஜை முறையை மிகுந்த சிரத்தையுடன் பின்பற்ற வேண்டும். மகாலக்ஷ்மிக்கு நடுவில் கலசத்தில் தேங்காயுடன், மாவிலை வைத்து வழிபடுவர்.

நிற்கும் நிலையில் இருக்கும் மகா லக்ஷ்மிக்காக ஏழு எண்ணிக்கையில் கொப்பரைத் தேங்காய், சோளம், வெள்ளரிக் காய் முதலியவற்றையும், சிறிய மகாலக்ஷ்மிக்காக ஒன்பது எண்ணிக்கையிலும் வைப்பர். ஒரு நூலினால் இரண்டு மகாலக்ஷ்மிகளையும் இணைத்து, ஒரு அகண்ட தீபம் ஏற்றி வைத்து வழிபடுவர்.

இரண்டாம் நாளான அஷ்டமியன்று, காலை ஆரத்தி முடித்தவுடன் 16 வகையான இனிப்புகள் படைக்கப்படும். சோமாசி, லட்டு, பாதுஷா, அனார்கா (தமிழ்நாட்டு அதிரசம் போன்று சர்க்கரையினால் ஆனது), ஒவ்வொன்றும் 16 எண்ணிக்கையில் செய்து நூலால் இனிப்புகளைக் கோத்து, மகாலக்ஷ்மிக்கு மேலே தொங்க விடுவர். இதற்கு ஃபுலோரா என்று கூறுவர். சிலர் இரட்டை ஃபுலோராக்களும் அவரவரது வழக்கப்படி வைப்பர்.

வந்தாள்

முக்கிய பூஜையானது, அஷ்டமியன்று சில வீடுகளில் மதியமும், சில வீடுகளில் இரவும் கொண்டாடுவர். அன்று தரிசனம் செய்ய வருபவர்கள் தங்களால் முடிந்த பொருள்களை (அரிசி, கோதுமை, கோதுமை மாவு, தேங்காய், சர்க்கரை) கொண்டு வருவர். இதனை 'ஓட்டி' என்று கூறுவர். இவ்வாறு சேர்ந்த பொருள்களை பௌர்ணமிக்கு முதலில் உபயோகித்து

காலக்ஷ்மியே!

பிரசாதமாக அனைவருக்கும் வழங்குவர். துளசி இலையை அப் பொருள்களில் போட்டு வைத்து, நவராத்திரி சமயத்தில் பிரசாதமாக வழங்குவர்.

முக்கிய பிரசாதம் 'அம்பில்'. சோளத்தை தண்ணீரில் நனைத்து, தோல் நீக்கி, ரவை போன்று அரைக்க வேண்டும். பின்னர், ஒரு பங்கு அரைத்த சோளத்தை இரண்டு பங்கு தண்ணீரில் வேக விட வேண்டும். நன்றாகக் கலவை மாதிரி வந்தவுடன் இறக்க வேண்டும். பின்னர் தேங்காய், ஏலக்காய், ஜாதிக்காய், மிளகு, சீரகப் பொடிகள், சுக்கு முதலியவற்றுடன் சிறிதளவு தயிர் போட்டு கலக்க வேண்டும். விதர்பா பகுதியில் அம்பில் பிரசாதம் ரொம்பவும் பிரசித்தமானது.



* விஜயா விநாயக் ராவ் பவார்

அஷ்டமி அன்று மாலையில் 16 விளக்குகள் ஏற்றி மகாலக்ஷ்மிக்கு ஆரத்தி எடுப்பர். இந்த வருடம் மகாலக்ஷ்மி பூஜை செப்டெம்பர் 14ம் தேதி முதல் 16ம் தேதிவரை கொண்டாடப் படும்.

தவிர்க்க இயலாத காரணத்தால் செப்டெம்பர் மாதத்தில் கொண்டாட முடியாதவர்கள் நவராத்திரியில் அனுஷ்டிக்கிறார்கள்!

- ஜெயஸ்ரீ எம்.சாரி,
வார்தா

ஆல்பம்



தாத்தா: தேவராஜன்
பாட்டி : வள்ளிநாயகி
பேத்திகள்: ஸ்வஸ்திக்கா,
ஆரார்த்திக்கா



தாத்தா: கிருஷ்ணமூர்த்தி
பாட்டி : மல்லிகா
பேரன்கள் : ஆதித்யா,
த்ரிலோகேஷ்



தாத்தா: பாலசுப்ரமணியன்
பாட்டி : ராதாபாலு
பேரன் : க்ஷிதீஜ்



தாத்தா: ஜி.ஆர்.ராமமூர்த்தி
பாட்டி : மாலதி
பேத்தி: நந்தினி ஸ்ரீநிவாஸன்



தாத்தா: வீரவேல்
பாட்டி : கீதா
பேரன் : குகன்



தாத்தா: சக்ரவர்த்தி
பாட்டி : ரேணுகாம்பாள்
பேத்திகள்: மதுரபாஷினி,
மதுரவர்ஷினி

என் செல்லமே!



நவராத்திரி சிறப்பு சலுகை 01.09.10 முதல் 30.09.10
1.50 ct வைர நெக்லஸ்
18.00 gm தங்கத்தின் எடை
விலை ரூ. 1,08,000
சலுகை விலை
ரூ. 92,000
ஏழு கல் வைரத்தோடு
ஜிமிக்கியுடன் சேர்த்து
0.86cts
தங்கத்தின் எடை 9 கிராம்
ரூ. 64,000
தள்ளுபடி விலை
ரூ. 53,000
• வைர நகைகளுக்கு Perct 4000 தள்ளுபடி
• 7 கல் வைரத்தோடு - 23,000 முதல்
• வைர மூக்குத்தி 1700 முதல்
• பேன்சி வைரமோதிரம் 4500 முதல்
• பேன்சி வைரதோடு 4500 முதல்
• பேன்சி டாலர் கம்மலுடன் சேர்த்து 6500 முதல்
• அனைத்து வைரங்களும் V V S E F கலர்
• திருப்பி தரும்பொழுது வைரத்திற்கு மட்டும் 100% அன்றைய மார்கெட் விலை
• 500 முதல் 5000 வரை மாத சீட்டு + இரட்டிப்பு போனஸ்
• 15000 மேல் வாங்கும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் நகை பெட்டி வழங்கப்படும்.
ஒரு ஜோடி
வைர வளையல்
1.24 ct
தங்கத்தின் எடை
25.00 gm
விலை
ரூ. 1,10,000
சலுகை விலை
ரூ. 99,000
Sri Palsani Jewels
110, Dr. Radha Krishnan Road, (Near Sri Krishna Sweets) Chennai - 4
Phone: 2811 1737, 2811 7036 | www.sripalsanijewels.net
Sunday Holiday
*conditions Apply
Shivaa



வீட்டின் சொந்தக்காரருக்கும், வாடகைக்கு குடி இருப்பவருக்கும் இடையிலான ஒப்பந்தம் பற்றிய சந்தேகத்துக்கு வழக்கறிஞர் பாலா நடராஜன் கடந்த மாதம் அளித்த விளக்கத்தின் தொடர்ச்சியாக இந்த மாதம் இன்னும் சில விஷயங்களைக் குறிப்பிடுகிறார்.

வாசகர் சந்தேகங்களும் சட்ட நிபுணர்களின் பதில்களும்...

வீடு வாடகைக்கு

பாலா நடராஜன்

வீட்டு வாடகை ஒப்பந்தத்தில் என்னென்ன விஷயங்கள் குறிப்பிடப்பட வேண்டும்?

வழக்கமான அடிப்படையான விஷயங்களுடன், வாடகை, அட்வான்ஸ் எவ்வளவு? (தங்கள் இஷ்டப்படி ஆறு, பத்து மாத அட்வான்ஸ் வாங்குவதற்கு சட்டத்தில் இடமில்லை என்பதால், இப்போதெல்லாம் வீட்டைக் காலி செய்யும்போது திருப்பித் தரக்கூடிய செக்யூரிடி டெபாசிட் என்று குறிப்பிட்டு விடுகிறார்கள்) பராமரிப்புத் தொகை எவ்வளவு? அதை யார் செலுத்த வேண்டும்? வாடகையை எப்படி செலுத்த வேண்டும்? வீட்டில் என்னென்ன வசதிகள் செய்து தரப்படும்? காலி செய்ய வேண்டும் என்றால், எத்தனை மாதம் முன்னால் நோட்டீஸ் கொடுக்க வேண்டும்? சொத்து, தண்ணீர் வரிகளை யார் கட்ட வேண்டும்? போன்ற விஷயங்கள் தவறாமல் இடம் பெற்றால், பின்னர் சர்ச்சைகளுக்கு இடமில்லாமல் போகும்.

நீங்கள் ஒருவருக்கு உங்கள் வீட்டை வாடகைக்குக் கொடுத்தால், அதை அவர் வேறு ஒருவருக்கு சப்-லீசுக்கு விடக்கூடாது என்ற கண்டிஷனும் போடுவதுண்டு. ஒப்பந்தம் போடுகிறபோதே, வீடு அல்லது கட்டடம் குடியிருக்க கொடுக்கப்படுகிறதா? அல்லது பிசினஸ் செய்வதற்காகக் கொடுக்கப்படுகிறதா?' என்பதைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

ஒருவர் ஒப்பந்தத்தின் விதிமுறைகளை மீறுகிறார் என்றால் அதையே காரணமாகக் காட்டி, ஒப்பந்தத்தை ரத்து செய்து, வீட்டை விட்டு வெளியேற்றலாம். அல்லது ஒருவர் வாடகைக்கு விட்டிருக்கும் வீட்டை தன்னுடைய சொந்த உபயோகத்துக்குத் தேவை என்று சொல்லியும் ஒப்பந்த விதிகளின்படி வீட்டை காலி செய்யச் சொல்லலாம். அரசாங்க அலுவலகங்களுக்காக வீட்டை அல்லது கட்டடத்தை வாடகைக்குக் கொடுக்கும்போது ஒப்பந்தம் போட்டுக் கொள்ள வேண்டும். ஆனால், அரசாங்க அலுவலகத்தை அவ்வளவு சீக்கிரம் காலி செய்யும்படி சொல்ல முடியாது. சட்டத்திலேயே இதற்குரிய விதிமுறைகள் உள்ளன.

அவ்ளோ தாங்க கண்டிஷன்

வழக்கமாக எல்லா மாவட்டங்களிலும் வாடகை கட்டுப்பாடு நீதிமன்றங்கள் இருக்கும். வாடகை தரவில்லை.



சொந்தத் தேவைக்கு வீடு தேவைப் படுகிறது போன்ற காரணங்கள் தவிர, இவர்கள் இங்கே இருப்பதால் அக்கம் பக்கத்தினருக்குப் பிரச்னையாக உள்ளது என்ற காரணத்துக்காகக்கூட காலி செய்யச் சொல்லி கோர்ட்டுக்குப் போகலாம். வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டு, குடி வராமல் பூட்டியே வைத்திருந்தாலும் வீட்டை காலி செய்யச் சொல்லலாம்.

சில சமயம் வாடகை கொடுத்தால் அதை வாங்க மறுத்துவிட்டு, 'வாடகை ஒழுங்காகத் தரவில்லை; வீட்டைக் காலி செய்ய கோர்ட் உத்தரவிட வேண்டும்' என்று கோரி வீட்டின் சொந்தக்காரர், கோர்ட்டுக்குப் போவார். அது போன்ற தருணங்களில், குடி இருப்பவர் தான் ஒழுங்காக வாடகை செலுத்தி வருவதை கோர்ட்டில் நிரூபிக்க வேண்டும். வீட்டு சொந்தக்காரர் வாடகையை வாங்கிக் கொள்ள மறுத்தால், ரிஜிஸ்டர்ட் தபால் மூலம் செக் அல்லது மணி ஆர்டர் மூலமாக வாடகையைக் கொடுக்கலாம். வீட்டுச் சொந்தக்காரர் அதை வாங்கிக் கொள்ள மறுக்கும்போது அதுவே அவருக்கு எதிரான சாட்சியாகிவிடும். கோர்ட் அனுமதியுடன் வாடகையை கோர்ட்டில் கட்டவும் வழி இருக்கிறது.

(தொடரும்)



விடறீங்களா?

வாசகியரின்
நீண்ட நாள்
வேண்டுகோளுக்கு
இணங்க உறவுகளை.
நட்புகளை
இணைக்கும்
'பாலம் பகுதி' மீண்டும்
தொடங்கப்பட்டுள்ளது.

பாலம்!





என்னுடன் 1972ம் வருடம், சேலம் செயின்ட் மேரிஸ் பள்ளியில் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களின் குரூப் ஃபோட்டோ ஒன்று சமீபத்தில் கிடைத்தது. அவர்களுடன் தொடர்பு கொண்டு நட்பை புதுப்பிக்க வேண்டும் என்ற ஆவலோடு ஒவ்வொருவராக தேட ஆரம்பித்தேன். ஓரிருவர் கிடைத்தவுடன், அவர்களின் கூட்டு முயற்சியில், நாட்டின் பல பகுதிகளில் பரவி கிடந்த மற்றும் பலரை தொடர்பு கொள்ள முயன்றோம். அதில் பதினைந்து பேர் சமீபத்தில் சென்னையில் ஒன்று கூடினோம். 38 வருடங்களுக்கு பிறகு ஏற்பட்ட அந்த அபூர்வ சந்திப்பின் மூலம், கிடைத்த உணர்வுகளை எழுத்தில் வடிக்க முடியாது. அவரவர் வாழ்க்கை அனுபவங்களை பகிர்ந்துகொண்டு பல பாடங்களை கற்றோம். புதுப்பிக்கப்பட்ட நட்பை எங்கள் சந்ததிக்கும் வழங்க முடிவு செய்து பிரியா விடை பெற்றோம். இந்த புகைப்படத்தில் இருக்கும் மற்றும் பலர் எங்களை தொடர்பு கொள்ள 'மங்கையர் மலர்' ஒரு பாலமாக அமையும் என்று உறுதியுடன் நம்புகிறோம்.

லதா ராமன், சென்னை


அன்பை வேண்டுவோம்!

சமீப காலமாக, பண்டிகைகள் அதனதன் தத்துவங்கள் புரியாமல் மேம்போக்காகக் கொண்டாடப் படுவதால் ஏற்படும் விபரீதங்கள் எல்லோரும் அறிந்தவையே. பலமுறை சொன்னாலும் திரும்பத் திரும்ப நிகழும் தவறுகள். அதனால் ஏற்படும் உறவு விரிசல்கள், மன உளைச்சல்கள்... இவற்றுக்கு எனக்குத் தெரிந்த, சில காரணங்கள் இதோ!

★ தாம்பூலம் தருவதில் தான் பெரும்பாலும் பிரச்னைகள் ஆரம்பிக்கின்றன. வயதான சுமங்கலிகள், குழந்தைகள், மற்றவர்கள் என்பது ஒப்புக்கொள்ளக் கூடிய பிரிவினை. அது தவிர்த்து, வசதியை அளவுகோலாகக் கொண்டால் விபரீதம்தான். ''இவளுக்கு இது தந்தால் போதும், திரும்ப பெரிசா கிஃப்ட் தரவா போறா?'' என்றும் ''போன தடவை எனக்கு ரவிக்கைத் துணி தரலை. பக்கத்து வீட்டுக்காரிக்குக் கொடுத்தா, இந்தமுறை கூப்பிடவே போறதில்லை'' என்றும் கங்கணம் கட்டிக் கொண்டு வஞ்சம் தீர்ப்பதும் பண்டிகையின் நோக்கத்தையே பாழ்படுத்தி விடும்.

★ உறவுகளுக்குள் நுழையும் தேவையற்ற ஃபார்மாலிட்டீஸ், வசதியான அண்ணி, தன் நாத்தனாருக்குப் பண்டிகைக்குப் புடவை எடுத்துக் கொடுக்கப் போக, அதேபோல் அந்த நாத்தனாரும் தன் நாத்தனாருக்குச் செய்ய வேண்டும் என எதிர்பார்ப்பது தவறு. பெண்ணைப் பெற்ற அம்மாக்கள் இந்த எண்ணத்தைத் தடுக்க வேண்டுமேயன்றி, ''அவ பொறந்த வீட்டுல அவளைத் தாங்கறா, உனக்கு அவ என்ன செஞ்சா? நீ அவளுக்கு வெத்தலைப் பாக்குல பத்து ரூபா வெச்சுக் குடு, அதுவே ஜாஸ்தி'' என்று 'ஏத்தி' விடுவது, நாத்தனார், அண்ணி உறவுப் பாலம் 'டமார்' ஆவதற்கு வழி வகுக்கும்.

★ அவசர உலகில், வேலைக்குச் செல்லும் பெண்கள் அதிகமான சூழ்நிலையில் பண்டிகை விதிகளை நீக்குப் போக்காகக் கடைப்பிடித்தால் தவறில்லை. பண்டிகைகள் சந்தோஷத்துக்குத்தான். பண்டிகைக்கு ''லீவு' எடுக்க வேண்டுமென்பது, விலாவாரியாகச் சமையல் செய்யச் சொல்வது, முன்னறிவிப்பின்றி, விருந்தினர்





யாராவது எதையாவது சொன்னா, அதுக்கு மாற்றுக் கருத்து இருந்தால்தான் விவாதம் சூடுபறக்கும். சிந்தனைகள் சிறக்கும். நீங்களும் கலந்துக்குங்களே

ஏட்டிக்குப் போட்டி!

இளம் பெண்களின் நியூ வேவ் சிந்தனைகளுக்குக் காரணம்



சிந்தனை மாற்றமா? சமுதாயத் தாக்கமா

இந்தத் தலைப்பில் ஏதாவது ஒரு அணியின் சார்பாகத் தோன்றும் கருத்துகளைப் பத்து வரிகளுக்கு மிகாமல் அஞ்சலட்டையில் மட்டுமே தெளிவா எழுதி அனுப்புங்க.

நடுவர் : திரைப்பட இயக்குநர் ஆர். புவனா

கடைசித் தேதி : 15.9.2010

களைச் சாப்பிடக் கூப்பிடுவது, உறவுக் காரர்கள் லிஸ்ட் கொடுத்து பட்சணங்கள் 'பார்சல்' செய்யச் சொல்வது போன் றவைத் தவிர்க்கப்பட்டால் பரவாயில்லை. முக்கியமானவர்களுக்குச் செய்தால் போதும். 'அந்தநாள், இந்த நாள் ஒப்பிடு தல், 'ஜெட்' வேக விலைவாசி ஏற்றத்தில் பொருந்தாது.

★ கவனக் குறைவினால் ஏற்படும் தவறுகளை, வேண்டுமென்றே செய்த தாகக் கொள்ளக்கூடாது. ''வந்திருந்த எல்லார்கிட்டயும் காஃபி வேணுமான்னு கேட்டவளுக்கு என்கிட்டே கேக்கத் தோணல. ''ஒரு வாய் சாப்பிடறீங் களா?''னு என்று கேட்டால் முத்தா உதிர்ந்துடும்? உடனே உட்கார்ந்துடப் போறேனா?'' என்பது போன்ற முணு முணுப்புகள் தொடர்ந்த விரிசல்களுக்கு வழி வகுக்கும்.

★ உண்மையான அன்பு, அழகான உறவுகளைத் தரும். சிறு குறைகளைப் பெரிதுபடுத்தாது, நேசக்கரம் நீட்டும் உறவு, நட்பின் அருமைகள் புரியும் சந்தர்ப்பங்கள் வாழ்வில் நிறையவே உண்டு. அந்தந்த தருணத்தில் அவற்றை இழக்காமல் இருக்க வேண்டுமானால் பண்டிகைகள் சரியாகப் புரிந்துக் கொள் ளப்பட வேண்டும். உறவு, நட்பின் ஆழத்தை, இறுக்கத்தை பலப்படுத்தப் பயன்படுத்தப் பட வேண்டும். அன்பைக் கொடுப்பதுதான் அதைத் திரும்பப் பெறுவதற்கான ஒரே வழி. ஆகவே பண்டிகைகளின்போது நம் எல்லோர் நெஞ்சிலும் அன்பை வேண்டுவோம்.

- பார்வதி இராமச்சந்திரன்

பெங்களூரு

புதிய பகுதி

தொழில் வாய்ப்பு



✱ நீங்க மங்கையர் மலர் வாசகியரா?
✱ நீங்க வீட்டிலேயே பிஸினெஸ் செய்யறீங்களா?
✱ உங்க பிஸினஸை விரிவுபடுத்தணுமா?
அப்ப உங்களுக்குத்தான் இந்தப் பகுதி!

பிஸினஸ் பஜார்!



விதிமுறைகள்

● நீங்கள் சொந்தமாக சுய தொழில் செய்ய வேண்டும். (உங்களது சொந்தத் தயாரிப்பாகவும், வீட்டிலேயே விற்பனை செய்வதாகவும் இருக்க வேண்டும்) ● வேலை வாய்ப்புகள் தேவை போன்ற விளம்பரங்களுக்கு அனுமதி கிடையாது. ● முதல் 30 வார்த்தைகளுக்குள் இருந்தால் ரூபாய் 300/- அதிகப்படியான ஒவ்வொரு வார்த்தைக்கும் ரூபாய் 10/- செலுத்த வேண்டும். ● உங்களது புகைப்படம் பிரசுரிக்கப்பட மாட்டாது. ● பெட்டி எண் கொடுக்கப்பட மாட்டாது. ● உங்களது விளம்பரம் தமிழில் மட்டுமே இருக்க வேண்டும். ● நீங்கள் அனுப்பும் விளம்பர வரிகளைத் தேர்வு செய்து பிரசுரம் செய்வதற்கும், திருத்தி அமைப்பதற்கும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. ● கீழே இடம் பெற்றுள்ள கூப்பனை முழுமையாகப் பூர்த்தி செய்து, உங்களது விளம்பர வாசகங்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். ● மணியார்டர், உள்ளூர் காசோலை மற்றும் டி.டி எதுவாகயிருந்தாலும் 'மங்கையர் மலர்' என்ற பெயரில் அனுப்பவும். வெளியூர் காசோலை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ● **விளம்பரங்கள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி:- பிரதி மாதம் பதினைந்து தேதிக்குள்...**

பெயர்:.. முகவரி:..

....

☏போன்:.. ஈ.மெயில்:..

காசோலை / டி.டி.எண்..

வரி விளம்பரம் செய்யுங்க...
வியாபாரத்தைப் பெருக்குங்க!


- உதயமாகிறது 'கைமணம் ஃபுட் ப்ராடக்ட்ஸ்!' பாரம்பர்ய முறைப்படி செய்த கைமணம் *அங்காயப்பொடி* மற்றும் கைமணம் *மிளகாய்த்தொக்கை* வாங்கி சுவைத்து மகிழ்வீராக. ஒருவர் 10 புதிய நுகர்வோரை அறிமுகம் செய்தால் பரிசு நிச்சயம். கை மணம் 'மல்டி பேக்கைப்' பெற ரூ.100/- மட்டும் மணியார்டர் செய்து பெற்றுக் கொள்ளவும். R. Gayathri, 1/47,South Agraharam, Kunnam - Post, Puthur (Via), Sirkazhi TK, Nagapatinam - Dt, 609108. தொடர்புக்கு: 94880 04847

- உள் பாவாடை, 6 பீஸ் கட்டிங், இடுப்பு அளவு 36'', 38'', 40'', உயரம் 40'', குழந்தைகளுக்கு பாவாடை, சட்டை, புடவைக்கு பீக்கோ அடிப்பது, Falls தைப்பது, அனைத்தும் தைத்து தரப்படும். தொடர்புக்கு: T.விஜயலக்ஷ்மி - 044-24453485.

- வீட்டிலேயே சாக்லேட், பிறந்த நாளைக்கு, பார்ட்டிக்கு, வகை வகையாக, (பாதாம், முந்திரி, திராட்சை, பிஸ்கெட், *க்ரன்ச்சீ*, Butter Scotch) செய்து தருகின்றோம். தொடர்புக்கு: கே. *சீதாலக்ஷ்மி* - 9840726667

- ''உங்கள் கொலு தனித்துவத்துடன் மிளிர, ஸ்ரீலக்ஷ்மி, ஸ்ரீ கணேசா மற்றும் ஸ்ரீபஞ்சபூத விளக்குகளை ஏற்றி மகிழுங்கள். நவராத்திரியில் உங்கள் உறவினர்களுக்கும், சிநேகிதிகளுக்கும், வித்தியாசமான, அழகிய, சிறந்த பரிசுப் பொருளைக் கொடுத்து மகிழ்விக்க வேண்டுமா? தொடர்புக்கு: கீதா பத்ரி, 9380714784 shreelamps@hotmail.com





தேவையான பொருள்கள்:


பூக்கள் செய்யப் பயன்படுத்தும் கம்பி - 25,


ஸ்டாக்கின்ஸ் துணி பல நிறங்களில் (ஸீரியல் பல்புகளின் நிறத்துக்கேற்ப),

நூல் கண்டு - 1, கத்தரிகோல் - 1, ஸீரியல் பல்புகள்.


பண்டிகை ஸ்பெஷல்-2

மின்னும் பல்ப் பூக்கள்!









ஸ்டாக்கின்ஸ் துணியில் பூக்கள் செய்கிறோமில்லையா? அதை வைத்தே, ஸீரியல் பல்புகளை மேலும் அழகுப் படுத்தலாம்.

செய்முறை:

★ கம்பியின் ஒரு நுனியை, பூவிதழ் போல வளைத்து, கத்தரியால் கட் செய்யவும்.

★ இதே அளவில் எஞ்சியிருக்கும் கம்பியை நான்கு துண்டுகளாக்கி, பூவிதழ் போல வளைத்து வைக்கவும். ஒரு கம்பியில் ஐந்துத் துண்டுகள் கிடைக்கும். இதை வைத்து ஒரு பூ செய்யலாம்.

★ ஸ்டாக்கின்ஸ் துணியின் ஓர் ஓரத்தில் வளைந்த கம்பியை வைத்து, அதை ஸ்டாகின்ஸ் துணியால் நன்றாக இழுத்து மூடி, நூலால் இறுக்கி முடிச்சு போடவும். (பூ கட்டுவதைப் போல) மீதமுள்ள ஸ்டாக்கின்ஸ் துணியை ஒட்ட வெட்டி விடவும்.

★ ஐந்து இதழ்களையும் இதேபோல செய்யவும்.

★ ஸீரியல் பல்பை எடுத்துக்கொண்டு, இந்த இதழ்களை, பல்பை சுற்றி ஒவ்வொன்றாக வைத்து பூ கட்டுவது போல கட்டவும்.

★ இந்தப் பூவிதழ்களை, இரண்டு பல்புகளுக்கு ஒன்று என்ற ரீதியில் கட்டலாம். நடுநடுவே விடுபட்ட பல்புகளின் அருகே செயற்கை இலைகளைக் கட்டி அழகுபடுத்தலாம்.

★ ஸ்டாக்கின்ஸ் துணியில் கலர் கலரான பல்புகளின் ஒளி ஊடுருவித் தெரியுமாதலால், இந்தப் பூக்களின் அணிவரிசை, உங்க வீட்டு நவராத்திரி கொலுவை மேலும் பளீரிட வைக்கும்.

- கீதா ஸ்ரீகாந்த், கூத்தப்பாக்கம்

உ



வட இந்தியா, வெளிநாட்டு சுற்றுலா மிக குறைந்த செலவிலே

விமான கட்டணம், விசா 3 நட்சத்திர ஹோட்டல் தங்கும் வசதி, நுழைவு கட்டணம், A/C பஸ், உணவு உள்பட வெளி நாட்டு சுற்றுலாக்கள்

6 நாட்கள் : சிங்கப்பூர் - மலேசியா - பினாங்கு - யூனிவர்சல் ஸ்டூடியோ :
புத்துமலை - சென்டோஷா - ஜென்டிங் ஹைலண்ட் அனைத்து செலவுகளும் உட்பட
26.9.2010 , 16.10.2010 முதல் ரூ.36,990

9 நாட்கள் : சிங்கப்பூர் - மலேசியா -பாங்காக் - பட்டயா :
ஜென்டிங் ஹைலண்ட் - சென்டோஷா, பினாங்கு - யூனிவர்சல் ஸ்டூடியோ
அனைத்து செலவுகளும் உட்பட 26.9.2010, 16.11.2010. முதல் ரூ.54,990

6 நாட்கள் : .இலங்கை சுற்றுலா : கொழும்பு - திருகோணமலை -
திருக்கேதீஸ்வரம் (தலைமன்னார்) - அனுராதாபுரம்,கண்டி - நுவரேலியா -
கதிர்காமம் அனைத்து செலவுகளும் உட்பட 26.9.2010 முதல் ரூ.23,990

4 நாட்கள் : துபாய் - சார்ஷா : Desert Safari, Dhow cruise, அனைத்து
செலவுகள் உட்பட 26.9.2010, 16.11.2010 முதல் ரூ.34,990

6 நாட்கள் : தாய்லாந்து சுற்றுலா - பாங்காக் - பட்டயா : கோரல் ஐலண்ட் -
சஃபாரி வேல்டு - புலோட்டிங் மார்க்கெட், நுங்நூ வில்லேஜ் அனைத்து செலவுகளும்
உட்பட 26.9.2010 முதல் ரூ.23,990 மட்டும்

7 நாட்கள் : சீனா - ஹாங்காங் : சீன பெருஞ்சுவர் - பார்பிடன் சிட்டி,
டிஸ்னிவேல்டு - குங்பு ஷோ - அக்ரோபாத் ஷோ மற்றும் அனைத்து கட்டணம்
உள்பட 15.9.2010 முதல் ரூ.79,990 மட்டுமே

நாட்கள் : அழகிய அந்தமான் தீவுகள் சுற்றுலா : 2 பேருக்கு ஒரு டபுள் ரூம்,
ஊர் சுற்றி பார்க்கும் விமான கட்டணம், உணவு மற்றும் அனைத்து செலவுகளும்
உட்பட 27.8.2010, 26.9.2010 முதல் ரூ.14,990 கப்பல் டூ கப்பல் ரூ.9,990,
கப்பல் டூ விமானம் ரூ.12,500

நாட்கள் : தாய் மூகாம்பிகா - ஸ்ரீருங்கேரி - ஹொர நாடு அன்ன பூரணி - தர்மஸ்தலா :
மைசூர் - சுப்பிரமணியா - கட்டில் - உடுப்பி - பேளூர் - ஹலபேடு 26.9.2010 முதல்
அனைத்து செலவுகளும் உட்பட ரூ.4,590

4 நாட்கள் : மூணார் - குமரகம் - கொச்சின் படகு வீடு : டபுள் ஷேர் ரூம்,
2x2 பஸ், சைவ உணவு, ஊர் சுற்றி பார்க்கும் செலவு உட்பட 26.9.2010 முதல் ரூ.4,990

Individual Tour
College Tour
நடத்தப்படும்

ஸ்ரீகுமரன் டிராவல்ஸ்

Ph:0452-4230844
Cell : 95855 55404
95855 55401

11, மேல வடம்போக்கி தெரு, ஆர்த்தி ஹோட்டல் அருகில், மதுரை - 625 001.

கிளைகள் :

சென்னை : 33, ஜெமினி பிளாசா முதல் மாடி, பாண்டி பஜார், சென்னை -600 017.போன் : 044-42127770, 97104 73527
திருச்சி : முதல் மாடி, காஞ்சனா டவர்ஸ் , வில்லியம்ஸ்ரோடு, திருச்சி - 620 001. போன்: 0431-2413456,93451 20497.
கோவை : 216, K.K.காம்ப்ளக்ஸ் முதல் மாடி,5வது தெரு, காந்திபுரம், கோவை. செல்: 9585555403, போன்: 0422-4373247.
ஈரோடு : 70, கே.வி.கே. காம்ப்ளக்ஸ்முதல் மாடி, E.V.N. ரோடு, ஈரோடு -11. போன் : 95855 55400.
பெங்களூர்: #U-59/1, 1st மெயின் ரோடு, தயானந்த நகர் ஸ்ரீராம்புரம், பெங்களூர் - 560 021. செல் : 99861 67612

குக்கரி க்வீன்!

குக்கரி தர்பாரில் கலந்துக் கொள்ள சமையல் ராணிகளை அழைக்கிறோம். ஒரிஜினல் சமையல் குறிப்புகளைத் தெளிவாக எழுதி, கீழே உள்ள கூப்பனையும் நிரப்பி அனுப்புங்க. தேர்ந்தெடுக்கப்படும் ஐந்து ரெசிபிகளுக்கு தலா ரூ. 300/- பரிசு!



குக்கரி க்வீன் சமையல் போட்டி (செப்டெம்பர்)

ஸ்லிம் அன்ட் ட்ரிம் (உடல் பருமன் குறைக்க)

பெயர்:..

முகவரி:..

....

....

கடைசித் தேதி: **25.09.2010**

இந்த இதழில் 'ஆஹா 50!' என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ள டிப்ஸ்களைப் படியுங்கள். மிகச் சிறந்த ஒரே ஒரு குறிப்பைத் தேர்ந்தெடுத்து எழுதி அனுப்புங்கள். உங்கள் தேர்வும், ஆசிரியர் குழுவின் தேர்வும் பொருந்தினால் குலுக்கல் முறையில் ரூ.150/- பரிசு! தேர்ந்தெடுப்பவருக்கு மட்டுமல்ல. அந்தக் குறிப்பை எழுதியவருக்கும் ரூ.150/- பரிசு! 'செப்டெம்பர் ஆஹா பரிசு' என்று மறக்காமல் குறிப்பிட்டு பக்க எண், வாசகி பெயருடன் அஞ்சல் அட்டையில் மட்டுமே எழுதி அனுப்புங்கள்.

கடைசித் தேதி: **15.09.2010**



ஆஹா பரிசு!

அடிச்சாங்க பரிசு!

ஆகஸ்ட் (2010) 'ஆஹா பரிசு' போட்டியில் ''வெளிநாடுகளில் ஆம்புலன்ஸ் செல்வதற்காகவே சாலையில் தனியாக பாதை இருக்கும். அதேபோல இங்கும் கொண்டு வந்தால், போக்குவரத்து நெரிசலிலிருந்து பாதிக்கப்பட்டவர்களை விரைவாகக் காப்பாற்றலாம்'' என்ற குறிப்பை எழுதி ரூ.150/- பரிசு பெறுகிறார் **விமலா பத்மநாபன், சென்னை**

அதே டிப்ஸை தேர்வு செய்த பல வாசகியரில் குலுக்கல் முறையில் ரூ.150/- பரிசு பெறுகிறார் **வி.பிரேமா பன்னீர்செல்வம், மயிலாடுதுறை.**


இப்பொழுது
நான் மிகவும்
மகிழ்ச்சியாக
இருக்கிறேன்!
லவண தைலம் சிறப்பான
பலன் தரக்கூடியது என்று
தமிழகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது!
AYU: CARE
Lavana Tailam
ஆண்கள் மற்றும் பெண்கள் இருவருக்குமே
மிகச் சிறந்த பலனைத் தரும்
அனைத்து மெடிக்கல் ஷாப் / ஆயுர்வேத மருந்தகம்,
சூப்பர் மார்க்கெட், பெண்களுக்கான ஷாப்களிலும் கிடைக்கும்
இன்ஸ்டிடியூட் ஆப் இந்தியன் தெராபிஸ் வழங்கும்
ஆயு: கேர்
லவண தைலம்
ஆயுர்வேதிக் ஃபிகர் கேர்
அதிகப்படியான உடல் எடை மற்றும் தொப்பையை
குறைக்க அதி நவீன ஆயுர்வேத சிகிச்சை
Available in all Khadi Crafts centers of Coimbatore, Erode, Tirupur & Salem
Helpline: TN:9940020167, 08144769264, 09841651822, 09962207856, 044 42810111. Madurai,Dindigal, Rameswaram, Sivagangai, Viruthanagar: 8148523095, Coimbathore,Erode,Selam, Hosur: 9994998557 Tirunelvely & Nagarkovil : 09698161528. Kumbakonam & Tanjore: 09489857729
Manufactured by: INSTITUTE OF INDIAN THERAPIES, Annamanada P. O. Thrissur-680 741. Kerala, India.
email: ayucarecochin@gmail.com, cim@asianetindia.com, www.ayucaregroup.com Super Stockist:
Chennai: Sun Enterprises 9283299999 Mumbai: Prakash Agencies: 022 23446533, 23429138, 9322762518 Karnataka: Rakesh Enterprises 080 23579251. Andra Pradesh: Vijayalakshmi Agencies Ph.040 66464454.
Business & Export Enquiries: 0484 2351077, 0487 3211227, 2387553 Fax: 0487 2387558 For Trade Enquiries: 08144769264
AYU: CARE



ஊத்தாப்பம் செய்யும்பொழுது பெரிய வெங்காயம் சேர்க்காமல், சிறிய வெங்காயத்தை நறுக்கிச் சேர்த்தால், தனி ருசியும் மணமும் கிடைக்கும்.

- புவனேஸ்வரி ரவிச்சந்திரன், சென்னை

ஹாட்பேக், டிபன்கேரியர் அடுக்குகளை அடிக்கடி மாற்றி அடுக்கி விடுவோம். அவற்றின் மீது வரிசைப்படி பெயின்ட்டால் நம்பர் எழுதி விட்டால் சுலபமாக இருக்கும்.

- கே. மோகன், மங்கலம்

வேக வைத்த கருணைக்கிழங்கை நன்கு மசித்து, துவரம் பருப்பும் சேர்த்து இஞ்சி, பச்சை மிளகாய், பெருங்காயம், கடுகு, கறிவேப்பிலை தாளித்து சாப்பிட்டு வர, மூலத்துக்கு 'குட்பை' சொல்லிவிடலாம்!

- வே.சித்ரா வேடியப்பன், ஊதப்பூண்டி

பாத்ரூம் டைல்ஸ்களில் பாத்திரம் துலக்கும் பவுடருடன், கோல மாவைக் கலந்துத் தூவி ஊற வைத்துக் கழுவவும். பளபளப்பு கூடுவதோடு வழுக்கவும் வழுக்காது!

- மஞ்சுதேவன், மும்பை

ஆலிவ் எண்ணெயுடன் வாழைப் பழத்தை நன்றாக க்ரீம் போல் மசித்து சேர்க்கவும். இதை உச்சந் தலையில் நன்றாகத் தடவி, அலசினால் பட்டுப் போன்ற முடி வளரும்.

- எம்.எஸ்.மணி, பெங்களூர்

மருந்து சாப்பிடும் காலங்களில், அகத்திக் கீரையைச் சாப்பிடக் கூடாது. மருந்தின் வேகத்தை அகத்திக் கீரை முறித்து விடுகிறது. எண்ணெய் தலை முழுகும் நாட்களிலும் அகத்திக் கீரையைச் சாப்பிடாதீர்கள். இது உடலில் சில கோளாறுகளைக் கிளறிவிடக்கூடும்.

- என். ஜரீனாபானு, திருப்பட்டினம்

சேப்பங்கிழங்கை எப்படிச் சமைத்தாலும் வழவழப்பு போகாது. கிழங்கை வேக வைத்துத் தோல் உரித்து, ஃப்ரிஜ்ஜில் இரண்டு மணி நேரம் வைத்து, பொரித்தால், ஒன்றோடு ஒன்று ஒட்டாமல் மொறு மொறுப்பாக இருக்கும்.

- சுல்தானா, கீழக்கரை

ஞாபக சக்தி பெருக வேண்டுமா? வல்லாரைப்பொடி - 100 கிராம், வசம்பு 10 கிராம் கலந்து தினமும் தேனில் குழைத்துச் சாப்பிடலாம்.

- உஷா குமார், சென்னை

சொத்தைப் பல் வலியா? பூண்டை நசுக்கி, சிறிது உப்பு தடவி, பல்லில் வைத்து சிறிது நேரம் கடித்தால், வலி குறையும்.

- ஜெயஸ்ரீ பாலாஜி, திருச்சி

இவை எல்லாமே ஆஹா 50 தான்!


ஆஸ்திரேலியாவின் வெற்றிக்குப்பின்
இந்தியாவில் முதல் முறையாக
அசமந்தஹோமத்தின்சாறு
(CELERY SEED EXTRACT) அறிமுகபடுத்துகிறோம்
ORTHOCURE - 3000™
ஆர்தோக்யூர்
மாத்திரை
100%
ஆயுர்வேதம்.
பக்கவிளைவுகள்
இல்லாதது.
(இந்தியா-ஆஸ்திரேலியா கூட்டு முயற்சி)
மூட்டு வலி, மூட்டுவீக்கம்
கீழ்வாத நோய்களுக்கு ஒரு தீர்வு
ORTHOCURE
LINIMENT
அதிவேக பலனுக்கு மாத்திரை மற்றும் ஆயில் சேர்த்து உபயோகிக்கவும்
அசமந்தஹோமம் மூட்டுக்களுக்கிடையே உருவாகும் யூரிக் அமிலத்தை வெளியேற்றுகிறது.
மூட்டு உராய்வை தடுக்கிறது.
மூட்டு தேய்மானம் தவிர்க்கப்படுகிறது.
மூட்டு வீக்கத்திற்கு சிறந்த நிவாரணி.
கீழ்வாத நோய்களுக்குசிறந்த நிவாரணி.
Marketed by : KUREWEL PHARMA, CHENNAI - 600 083 PH: 24893013
அனைத்து மருந்து கடைகளிலும் கிடைக்கும்

பிள்ளையார் கையில் மோதகம் ஏன்?

விநாயகருக்குப் படைக்க வேண்டிய 21 வகைப்பட்ட உணவுகளைப் பற்றி அருணகிரி நாதர் ''பக்கரை விசித்ரமணி' என்ற தலைப்பில் திருப்புகழில் தொகுத்துக் கூறுகின்றார்.

அவை:

1. கரும்பு
2. அவரை
3. பழ வகைகள்
4. சர்க்கரை
5. பருப்பு
6. நெய்
7. எள்
8. பொரி
9. அவல்
10. துவரை
11. இளநீர்
12. தேன்
13. பயறு
14. அப்பம்
15. பச்சரிசி
16. பிட்டு
17. வெள்ளரிப் பழம்
18. அரிசியை இடித்துச் செய்யும் மோதகம் இடியாப்பம் முதலியன
19. கிழங்கு
20. அன்ன வகைகள்
21. கடலை





கணபதி நூல்கள்

கணபதி உபநிடதம், ஹேரம்ப உபநிடதம், கணேசபுராணம், கணேசமான்மியம், கணேச காண்டம், பார்க்கவ புராணம், கணேச கல்பம், கணேசாச்சர சந்திரிகை, முத்கல புராணம், கணேச கதை, கணேச தந்திரம்.

முதல் விநாயகர் பாடல்



தமிழ் இலக்கியங்களில் முதல் முதல் விநாயகரைப் போற்றிய காப்புச் செய்யுள் காணப்படும் இலக்கியம் திருமந்திரம். திருமந்திரத்தில் 'ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை இந்திரன் இளம் பிறை போலும் எயிற்றனை' என்று தொடங்கும் பாடல் இடம் பெற்றுள்ளது.



விநாயகர் இருப்பிடம்

கயிலயத்தில் சிவ பெருமான், திருப்பாற்கடலில் திருமால். அதுபோல விநாயகர் இருப்பிடம் 'ஆனந்த புவனம்' ஆகும். வடமொழிச் சுலோகம், ஒன்று 'ஆனந்தமயா தேவஸ்துஸ்வானந்தேச கஜானன' என்கிறது.

விநாயகர் தேவிகள்

விநாயகர் புராணத்தில் காணப்படும் சித்தி, புத்தி, வல்லபை தவிர மோதை, பிரபோதை, கமலை, சுந்தரி, மனோரமை, மல்கலை, கேசினி, காந்தை, சாருகாசை, சுமந்திமை, நந்தினி, காமதை ஆகிய பதினைந்து தேவியர் விநாயகருக்கு உள்ளனராம்.

விநாயகருக்கு விரத நாள்கள்...

சதுர்த்தி: ஆவணி மாத சுக்ல பட்ச சதுர்த்தி

துர்வா கணபதி விரதம்: கார்த்திகை மாத சுக்லபட்ச சதுர்த்தி

சித்தி விநாயகர் விரதம்: புரட்டாசி சுக்லபட்ச சதுர்த்தி

விநாயகர் சஷ்டி: கார்த்திகை மாதத் தேய்பிறை பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறை சஷ்டி வரை 21 நாட்கள் 'சஷ்டி தொட்டு சதயம் விட்டு' என்பது பழமொழி.

சங்கடஹர சதுர்த்தி: மாசி மாதம் செவ்வாய் சதுர்த்தி முதல் ஓராண்டு முழுவதும்.

மோதகக் கதை!

விநாயகருக்கு மிகவும் உகந்தது மோதகம் என்ற கொழுக்கட்டை, பிரும்மம் எப்படி சர்வ வியாபியாக விளங்குகிறதோ அப்படி விநாயகர் எங்கும் சர்வ வியாபியாக விளங்குகிறார். அப்படிப்பட்ட விநாயகர் தன் இல்லம் வரும் நாளினை, குறிப்பினால் அருந்ததி அறிந்துகொண்டாள்.

பிரும்மம் இந்தக் கண்டத்தில் எங்கும் நிறைந்திருக்கிறது என்ற ரகசியத்தை அறிந்த அருந்ததி, இந்த உண்மையை உலகத்துக்கு எடுத்துக்காட்ட விரும்பினாள். அண்டம் என்ற பொருள், பூர்ணமாக நிறைந்திருக்கிறது என்ற பொருளில் உள்ளே அமிர்தமயமான பூர்ணத்தை வைத்து, அதைத் தன் இல்லம் வரும் விநாயகருக்குப் படைத்தாராம். விநாயகரும் அதனை ஏற்று அருந்ததி தம்பதியருக்கு நல்வரங்களை அளித்தாராம்.

அந்தத் தத்துவம் நிறைந்த மோதகத்தை உலகோர் காண ஸ்ரீகணேசர், எப்போதும் தன் கையில் வைத்துக் கொண்டிருக்கிறார்.

- ஜி. வளர்மதி,
தேனி



கிச்சன் குறள்!

சமைக்க சமைப்பின் சுவையாக அஃதில்லார்
சமைத்தலின் சமைக்காமை நன்று

உண்டபொழுதின் பெரிதுவக்கும் தன் சமையலை
சூப்பரெனக் கேட்ட அனங்கு

கற்கக்கசடற சமையல் குறிப்புகளைக் கற்றபின்
சமைக்க அதற்குத் தக.

எக்குறை சொல்வோர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
சமையலைக் குறைசொல்லும் மகற்க்கு

சுவையென்ப ஏனை சத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப உண்ணும் மாந்தர்க்கு

நோய் வேண்டின் உண்ணுக ஹோட்டல்தனில்
நலம்வேண்டின் வேண்டுக வீட்டுணவு

சமைத்தலினும் நன்று அலங்கரித்தல் அதினிலும்
நன்றதனை டிஸ்ப்ளே செய்தல்

பாஸ்தா என்பர் நூடுல்ஸ் என்பர்
நீராகாரச் சோற்றின் அருமையறியாதவர்.

சமைத்ததனால் ஆனபயன் என்கொல் ருசித்து
யாரும் அதனைப் புசியாரெனில்

மனையாளின் சமையலைப் புகழ்ந்து உண்டார்
நிலமிசை நீடு வாழ்வார்

கற்பனைக்கும் உண்டோ அடைக்கும்தாழ் புதுவித
ரெசிப்பிகள் ஆவலுடன் படைப்போர்க்கு

சமைத்துண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்.

– ராஜேஸ்வரி கிட்டு, பெங்களூரு


vanessa
வழங்கும்
Salwar Kameez
BRA
• கப்களுக்கு வலுவைத் தரும் கிராஸ் பேண்ட்கள்
• டபுள் லேயர்களுடன் மோல்டட் செய்த கப்கள்
• 100% நிட் செய்த காட்டன்
• மிக மெல்லிய ஸ்ட்ராப்
AUDI ARABIA • UAE • KUWAIT • BAHRAIN • QATAR
Saasy
Royale
Misty
Note the measurement in centimetres
SIZE 30 Under-bust 63-67cms Over - bust Cup A : 77 - 79 cms Cup B : 79 - 81 cms Cup C : 81 - 83 cms Cup D : 83 - 85 cms
SIZE 32 Under-bust 68-72cms Over - bust Cup A : 82 - 84 cms Cup B : 84 - 86 cms Cup C : 86 - 88 cms Cup D : 88 - 90 cms
SIZE 34 Under-bust 73-77cms Over - bust Cup A : 87 - 89 cms Cup B : 89 - 91 cms Cup C : 91 - 93 cms Cup D : 93 - 95 cms
SIZE 36 Under-bust 78-82cms Over - bust Cup A : 92 - 94 cms Cup B : 94 - 96 cms Cup C : 96 - 98 cms Cup D : 98 - 100 cms
SIZE 38 Under-bust 83-87cms Over- bust Cup A : 97 - 99 cms Cup B : 99 - 101 cms Cup C : 101 -103 cms Cup D : 103 - 105 cms
SIZE 40 Under-bust 88-92cms Over bust Cup A : 102 - 104 cms Cup B : 104 - 106 cms Cup C : 106 - 108 cms Cup D : 108 - 110 cms
SIZE 42 Under-bust 93-97cms Over bust Cup A : 107 - 109 cms Cup B : 109 - 111 cms Cup C : 111 - 113 cms Cup D : 113 - 115 cms
SIZE 44 Under-bust 98-102cms Over -bust Cup B : 114 - 116 cms Cup C : 116 - 118 cms Cup D : 118 - 120 cms
(For best results, measure yourself without any clothes in front of a mirror.)
V-Star
vanessa
inner style for women
Saree Bra • Sports Bra • Feeding Bra • Padded Bra
Bra, Panty and Camisole
From the promoters of
V-GUARD
Valero
Gents inner wear from V-Star
V-Star Creations PVT Ltd., Mettupalayam Road, Sai Baba Mission Post, Coimbatore - 641 043
Visit us at:www.vstarcreations.in E-mail:reception@vstarcreations.in
AVAILABLE AT ALL LEADING SHOWROOMS IN KARNATAKA, ANDHRA PRADESH, TAMIL NADU, GOA, KERALA, I.N.C.S. KOCHI & Reliance trends
For dealership enquiries: Karnataka & Goa: 95359 99488, Tamil Nadu: 95009 68866,95009 68865, Andhra Pradesh: 90522 34467, Kerala: 97442 0



தமிழக அரசின் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இணை ஆணையர் சி.என்.மகேஸ்வரன் பதிலளிக்கிறார்.

ரேஷன் கார்டு பெறுவது

குடும்பத்தில் ஒருவர் இறந்துவிட்டால், அவரது பெயரை ரேஷன் கார்டிலிருந்து நீக்க வேண்டியது கட்டாயமா?

குடும்பத்தில் ஒருவர் மரணமடைந்தால் அதை சட்டப்படி பதிவு செய்வது அவசியம். அதேபோல குடும்ப அட்டையிலிருந்தும் அவரது பெயரை நீக்க வேண்டியதும் அவசியம். சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் இறப்புச் சான்றிதழ் பிரதியை இணைத்து, அவரது பெயரை குடும்ப அட்டையிலிருந்து நீக்கிவிடும்படிக் கோரி விண்ணப்பித்தால், பெயரை நீக்கி விடுவார்கள்.

தொடர்ந்து ஆறு மாதங்கள் எந்தப் பொருளும் வாங்கவில்லையென்றால் குடும்ப அட்டை ரத்தாகிவிடும் என்பது உண்மைதானா?

உண்மை இல்லை. உங்களுக்கு ரேஷன் பொருள்கள் வாங்க விருப்பம் இல்லையென்றால், அதை சரண்டர் செய்துவிட்டு, கௌரவ ரேஷன் கார்டை வாங்கிக் கொள்ளுங்கள். இதன் மூலமாக உங்கள் ரேஷன் கார்டை, வேறு ஒருவர் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்கலாம்.

ரேஷன் கார்டு வழங்கும் அலுவலகங்களில் மக்களை அலைகழிக்கிறார்களே?

ஒவ்வொரு அரசு ஊழியரும் கடமை உணர்வுடன் தங்கள் பணியைச் செய்ய வேண்டும். அதற்காக நாங்கள் உரிய பயிற்சி அளித்து வருகிறோம். இப்போதெல்லாம் இந்த விஷயத்தில் நல்ல முன்னேற்றம் காண முடிகிறது. பொதுவாக ரேஷன் கார்டுக்கு விண்ணப்பிக்கும் போது உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அதில் ஏதாவது குறைபாடு இருந்தால்,



ரேஷன் கார்டு வழங்குவதற்கு தாமதம் ஏற்படுவது தவிர்க்க முடியாது. ரேஷன் கார்டில் உள்ள பெயர்களில் சேர்க்கை, நீக்கம், திருத்தம், முகவரி மாற்றம், தொடங்கி புதிய ரேஷன் கார்டு வழங்குவது வரையிலான ஒவ்வொன்றுக்கும் முறையாக விண்ணப்பித்த நாளிலிருந்து குறிப்பிட்ட காலவரம்புக்குள் செய்து தர வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்படி நடக்காத பட்சத்தில் தக்க மேலதிகாரியிடம் முறையிடலாம். *(பார்க்க: பெட்டிச் செய்தி)* அவர் உங்கள் குறையைத் தீர்க்க உரிய நடவடிக்கை எடுப்பார்.

அது மட்டுமில்லாமல் தமிழ்நாடு அரசின் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, 'நுகர்வோர் சேவை மையம்' ஒன்றை ஏற்படுத்தி இருக்கிறது. அது மாநிலத்தில் உள்ள நுகர்வோர்களின் எல்லாவிதமான குறைகளையும் உடனடியாகத் தீர்த்து வைக்கிறது. *(பார்க்க: பெட்டிச் செய்தி)*



பல்வேறு வகையான குடும்ப அட்டைகள் வழங்கப்படுகின்றனவே? ஒருவகை அட்டை வைத்திருப்பவர், இன்னொரு வகை அட்டைக்கு மாற்றிக் கொள்ளலாமா?

தமிழ்நாட்டில் வசிக்கும் அனைத்து குடி மக்களுக்கும் குறிப்பாக ஏழை எளிய மக்களுக்கு உணவுப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு மாதந்தோறும் அத்தியாவசியப் பொருட்கள் நல்ல தரத்தோடும், குறைந்த விலையிலும் வழங்க வேண்டும். மேலும் மக்கள் வசிக்கும் பகுதிகளிலேயே அமைந்துள்ள நியாய விலைக்கடைகள் மூலமாக விநியோகம் செய்ய வேண்டும் என்பதே பெரிய விநியோகத் திட்டத்தின் நோக்கமாகும். எனவே, குடிமக்கள் அனைவருக்கும் ரேஷன் கார்டு பெற எல்லா உரிமைகளும் உண்டு. அரசாங்கம் குடும்ப அட்டைகளை குடும்பத்தின் மாத அல்லது ஆண்டு

ரேஷன் கார்டு வாங்க சிரமப் படுபவர்களுக்கோர் நற்செய்தி!

மத்திய அரசும், மாநில அரசின் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையும் இணைந்து நுகர்வோர்களின் குறைகளைத் தீர்த்து வைக்கும் நோக்கத்துடன் ஒரு ஹெல்ப் லைன் ஆரம்பித்து, சிறப்பாக செயல்படுத்தி வருகின்றன. அதற்குரிய தொலைபேசி எண்: **044-2859 2828.** தமிழக துணை முதல்வரால் கடந்த ஆண்டு நவம்பரில் துவக்கி வைக்கப்பட்ட இந்த ஹெல்ப் லைன் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9.30 முதல் 6.00 மணி வரை செயல்படுகிறது. மேலும் **24x7** நுகர்வோர்கள் இந்த ஒலிப்பதிவு வசதி கொண்ட தொலைபேசி எண்ணில் தங்கள் புகார்களைப் பதிவு செய்யலாம். தமிழகத்தின் எந்தப் பகுதியில் வசிக்கும் நுகர்வோரும் இந்தச் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

ரேஷன் கார்டு பெறுவது, அதில் திருத்தங்கள் செய்வது சம்பந்தப்பட்ட தாமதங்கள், நியாய விலைக் கடைகளில் எடை குறைவு, பொருட்கள் வழங்க மறுப்பது போன்ற குறைபாடுகள் உள்ளிட்ட எந்த புகார்களுக்கும் தீர்வு காண இது உதவுகிறது.

ரேஷன் கடைகள் சம்பந்தப்பட்ட குறைகள் மட்டுமில்லாமல் தனியார் மற்றும் அரசுத் துறை நிறுவனங்கள் விற்பனை செய்த பொருள்கள், சேவைகள் குறித்த நுகர்வோர்களின் குறைகள் அனைத்தையும் இந்த ஹெல்ப் லைன் மூலம் புகார் செய்து தீர்வு காண முடியும்.



வருமானத்தின் அடிப்படையில் வழங்குவது கிடையாது. அவரவர் விருப்பத்தின் பேரில்தான் வழங்கி வருகிறது.

பொதுவாக மூன்று வகையான ரேஷன் அட்டைகள் பொதுவினியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன. முதலாவது அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் வழங்கப்படும் குடும்ப அட்டை. இது பச்சை நிறத்தில் இருக்கும். இந்த அட்டை வைத்திருக்கும் குடும்பத்தினர்களுக்கு மாதம் குறைந்த பட்சம் 12 கிலோ அதிக பட்சம் 20 கிலோ அரிசி வழங்கப்படும். இதுதவிர ரேஷன் கடையில் வழங்கப்படும் சர்க்கரை, கோதுமை மற்றும் பருப்பு வகைகள், பாமாயில், ரவை, மைதா, கோதுமை மாவு என்று எல்லாமே வழங்கப்படும்.

இரண்டாவது வகை குடும்ப சர்க்கரை கார்டு என அழைக்கப்படும் வெள்ளை அட்டை. இது வைத்திருப்பவர்களுக்கு அரிசி கிடைக்காது. அதற்கு பதிலாக குடும்ப உறுப்பினர்களது தலைக்கு அரைக் கிலோவுடன் கூடுதலாக மூன்று கிலோ சர்க்கரை, இதர பொருள்கள் பெற்றுக் கொள்ளலாம்.

மூன்றாவது வகை 'கௌரவ குடும்ப அட்டை' என்று குறிப்பிடப்படுவது. இதுவும் வெள்ளை நிறத்தில்தான் இருக்கும். உங்களுக்கு ரேஷனில் எந்தப் பொருளும் வாங்க விருப்பமில்லை என்றால், இந்த வகை அட்டையை வழங்குவார்கள்.

இந்த மூன்று தவிர காவல் துறையினருக்கும் (காக்கி நிற ரேஷன் கார்டு), வனக் காவலர்களுக்கும் (நீல நிற கார்டு) தனி ரேஷன் கார்டு வழங்கப்படுகிறது. இம்மூன்று வகை கார்டுகளில் உங்களிடம் எது இருந்தாலும், நீங்கள் விரும்பினால் வேறுவகை அட்டைக்கு மாற்றிக் கொள்ளலாம்.

தெரியுமா?

* எந்த ஒரு குடும்ப அட்டைதாரரும், இரண்டு கி.மீ தூரத்துக்கு மேல் செல்ல அவசியமில்லாதபடி நியாய விலைக் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

* ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் ஆண்டுக்கு சுமார் 2000 ரூபாய் வரை அரசாங்கம் மானியமாக செலவிடுகிறது.

* குடும்ப உறுப்பினர்கள் பற்றி தவறான தகவல் அளி த்தால் 1955 ஆம் ஆண்டின் அத்தியாவசிய பண்ட சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

* ரேஷன் கார்டை அடகு வைப்பது குற்றம். அத்தகைய ரேஷன் கார்டுகளை ரத்து செய்வதுடன், குற்றவியல் நடவடிக்கையும் எடுக்க முடியும்.

* சென்னை மற்றும் புற நகர் பகுதிகளில் வேலை நாட்களில் கடைகள் காலை 8.30 முதல் பகல் 12.30 வரையிலும், மாலை 3.00 முதல் இரவு 7.00 வரையிலும் திறந்திருக்கும். மாநிலத்தின் இதர பகுதிகளில் காலை 9.00 முதல் பகல் 1.00 மணி வரையிலும் மாலை 2.00 முதல் இரவு 6.00 மணி வரையிலும் திறந்திருக்கும்.



ரேஷனில் எல்லோருக்கும் ஏன் மண்ணெண்ணெய் தருவதில்லை?

குடும்ப அட்டைதாரர்கள் தங்கள் வீடுகளில் வைத்துக் கொண்டிருக்கும் கேஸ் சிலிண்டர் இணைப்பின் எண்ணிக்கையைப் பொருத்துதான் அவர்களுக்கான மண்ணெண்ணெய் அளவு நிர்ணயிக்கப்படுகிறது. உங்களிடம் கேஸ் இணைப்பே இல்லை என்றால் மூன்று லிட்டர் முதல் பத்து லிட்டர் வரை நீங்கள் வசிக்கும் இடத்தைப் பொறுத்து மண்ணெண்ணெய் வழங்கப் படும். ஒரு சிலிண்டர் வைத்திருப்பவர்களுக்கு மூன்று லிட்டர் மட்டுமே தரப் படும். இரண்டு சிலிண்டர் வைத்திருப்பவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுவதில்லை.

ரேஷன் கார்டு குறித்த கேள்விகளை எழுப்பிய நமது கல்கி நிறுவன ஊழியர்கள்:

நித்யானந்தம், சேகர், பாஸ்கர், செர்புதீன், யோசுவா, ஜெகன், ஐயப்பன், நந்தகுமார், ஜெயா ஸ்ரீனிவாஸன், ஸ்ரீமதி, சுசீலா, கௌரி, மதிசூடி, ஸ்ரீனிவாஸன், குமார் செல்வம், முத்துக்குமார், உமா, சுந்தர்ராஜன்.

தொகுப்பு: எஸ்.சந்திரமௌலி

எத்தனை நாட்கள் காத்திருக்க?

குடும்ப உறுப்பினர்கள் பெயரைச் சேர்த்தல், நீக்கல், வயது திருத்தம்- 3 நாட்கள்

ஒரே நியாய விலைக்கடை வரம்புக்குள் முகவரி மாற்றம் - 3 நாட்கள்

கடை மாற்றத்துக்குரிய முகவரி மாற்றம் -7 நாட்கள்

வேறு ஊர்களுக்குச் செல்கையில் சரண்டர் சர்டிஃபிகேட் - 2 நாட்கள்


புதிய ரேஷன் கார்டு - 60 நாட்கள்

டூப்ளிகேட் கார்டு - 45 நாட்கள்

குடும்ப அட்டை இல்லா சான்றிதழ் - 7 நாட்கள்

இவற்றில் குடும்ப அட்டை வழங்கக் கட்டணம் ரூ.5, டூப்ளிகேட் வழங்க ரூ.10















இயற்கையை மிஞ்சும் செயற்கை நீர்வீழ்ச்சி!

செயற்கை நீர்வீழ்ச்சி, அழகுக்காக மட்டுமல்ல, தற்போது வாஸ்துக்காகவும் பயன்படுத்தப்படுகிறது. கற்பனைத் திறனோடு உருவாக்கும் இவற்றை 2000 ரூபாயிலிருந்து விற்கலாம். கலைநயம் கூட கூட லாபமும் அதிகரிக்கும் பிஸினஸ் இது. முதலில் நம் வீட்டு கொலுவில் வைக்க ஒரு நீர்வீழ்ச்சி தயாரிக்கலாமே!









தேவையான பொருள்கள்

வட்ட வடிவ துத்தநாக ட்ரே - 1 (பாத்திரக் கடையில் சொல்லி வாங்கவும்), இரண்டு இன்ச் தெர்மாகோல் ஷீட் - ½ ஷீட், வெள்ளை சிமெண்ட் - 5 கிலோ, ஃபெவிகால் - 1 கிலோ, மோட்டார் டியூப் - (மீன் தொட்டிக் கடைகளில் கிடைக்கும்), ஃபேப்ரிக் கலர்ஸ், பிரஷ், வார்னிஷ், கைகளுக்கு அணிய கிளவுஸ், செயற்கை இலைகள், பூக்கள், தெர்மாகோல் துண்டுகள்...

செய்முறை

★ ட்ரேயின் உள் அளவுக்கேற்ப அரைவட்ட வடிவில், தெர்மாகோல் ஷீட்டை கட் செய்து கொள்ளவும். (படம் 1)

★ தெர்மாகோல் ஷீட்டில் பெரியது, சிறியது, மிகச் சிறியது என்று அடுத்தடுத்த அளவில், மூன்று அரைவட்ட வடிவில் (டி ஷேப்பில்) கட் செய்து கொள்ளவும். இம் மூன்றையும் ஒன்றின் மீது ஒன்று வைத்து இணைக்க, மிக மிகச் சிறிய அரைவட்டமாக நான்கு அரை வட்டங்களையும் கட் செய்யவும். (படம் 4)



★ வெள்ளை சிமெண்ட், ஃபெவிகால், சிறிது தண்ணீர் மூன்றையும் நன்றாக தோசை மாவு பதத்துக்குக் கலக்கவும்.

துளசி கண்ணன்



9



10

அதற்கு முன் கைகளில் கிளவுஸ் அணிந்து கொள்வது மிகவும் முக்கியம்.

★ கலந்து வைத்த சிமெண்ட் கலவையை, கட் செய்த அனைத்து தெர்மாகோல் பகுதிகளிலும் பூசி (படம் 4) அடுக்கவும். இறுதி அரைவட்டத்தை மேல் பக்கவாட்டில் வைத்துப் பூசவும். இப்போது ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்ளும்.

★ எஞ்சியிருக்கும் சிமெண்ட் கலவையில் தெர்மாக்கோல் துண்டுகளை சேர்த்து சற்று கெட்டியாகக் கலக்கி, ட்ரே, தெர்மாகோல் மீது பூசவும். இப்போது மலை போல் அழகான வடிவம் தயார். (படம் 6)

★ இருபத்து நான்கு மணி நேரம் காய வைத்து, பிறகு அடுத்த இருபத்து நாள்கு மணி நேரத்துக்கு அவ்வப்போது தண்ணீர் தெளிக்கவும். சிமெண்ட் தண்ணீரை உறிஞ்ச... உறிஞ்ச... வலு கிடைக்கும். காய்ந்ததும் நீளமான மெல்லிய கம்பியைக் கொண்டு தெர்மாக்கோலின் நடுப் பகுதியில் ஓட்டை போட்டு, டியூபை உள்ளே நுழைத்து மோட்டாரை இணைக்கவும். (படம் 9) மேல் டியூபை தெர்மாகோலின் தரை மட்டப் பகுதிக்கு கட் செய்து, டியூப் தெரியாதபடி சிமெண்டால் பூசவும்.

★ தேவையான ஃபேப்ரிக் நிறத்தை ப்ரஷ் உதவியுடன் நிரப்பவும். நடுப்பகுதியில் நீலம், வெள்ளை கலந்து நிரப்பவும். (தேவையெனில் ஃபேப்ரிக் பதிலாக எனாமல் உபயோகிக்கலாம்.) காய்ந்ததும், வார்னிஷ் அடித்தால் பளபளப்பு கூடும். ட்ரே, தெர்மாகோல், பக்கவாட்டு பகுதியில் செயற்கை பூக்கள், இலைகளை ஃபெவிகால் உதவியுடன் ஒட்டி அலங்கரிக்கவும். இப்போது மலையும் மலை சார்ந்த நீர் வீழ்ச்சியும் தயார்!

★ கட் செய்த டியூபுக்கு முன் பகுதியில் உங்களுக்குத் தேவையான பொம்மையை வைக்கவும். இப்போது துத்தநாக ட்ரேயின் உள்ளே இருக்கும் மோட்டார் மூழ்கும்வரை தண்ணீர் விடவும். பிறகு மின்இணைப்புக் கொடுத்தால், டியூபின் வழியாக தண்ணீர் சுழற்சி முறையில் நீர் வீழ்ச்சி போல் குதித்து வரும்.

- லக்ஷ்மி



நவமியில் சரஸ்வதிக்குப் பூஜை ஏன்?

சரஸ்வதி பூஜை, புரட்டாசி மாதத்தில் வரும் பண்டிகை. சில சமயம் ஐப்பசியிலும் வரும். சரஸ்வதி பிறந்த திதி நவமி. இந்த திதியின் அடிப்படையில்தான் சில சமயம் ஐப்பசியிலும் வருவதுண்டு. பெரும்பாலும் புரட்டாசி மாதத்தில்தான் சரஸ்வதி பூஜை கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் தாத்பர்யம் என்ன?

நவகிரகங்களுக்கு நடு நாயகமான சூரியன், சித்திரை மாதத்தில் மேஷ ராசியில் துவங்கி, புரட்டாசியில் கன்னி ராசியில் சஞ்சாரம் செய்கிறார். கன்னிக்குரிய கிரகம் புதன். இவரை வித்யா காரகன் என்பர்.வித்யாகாரகன் என்றால் கல்வி, பக்தி, தொழில் ஆகிய அனைத்துக்கும் மூலகாரணமாக இருப்பவர். எனவே புதனுக்குரிய கன்னியில் கல்விக்கு அதிபதியான சரஸ்வதியை, சரஸ்வதி பூஜை செய்து வழிபடுகிறோம்.


சரஸ்வதி பூஜை செய்ய உகந்த திதிகள் மூன்று. அவை சப்தமி, அஷ்டமி, நவமி ஆகும்.

நவராத்திரியின்போது இல்லத்தில் கொலு வைத்து உறவினர், நண்பர்கள், அண்டை அயலார் வீட்டில் உள்ளோரை அழைத்து மங்களப் பொருள் வழங்கி உபசரிக்கிறோம். இதனால், உபசரிக்கும் பெண்களுக்கு மாங்கல்ய பலம் கூடும். மனதில் அஞ்ஞானம் போய் மெஞ்ஞான ஒளி பிறக்கும். நட்பு, விருந்தோம்பல், கலை, பக்தி, ஒற்றுமை, ஒருமைப்பாடு அனைத்தையும் உள்ளடக்கி வெளிப்படுத் தும் ஒன்றுதான் இந்த நவராத்திரி பூஜையின் மகிமை.

மகரிஷிகளால் உபதேசிக்கப்பட்ட இருபத்தேழு ஸ்லோகங்கள் கொண்ட 'துர்கா நட்சத்திர மாலிகா' ஸ்துதியை பக்தியுடன் ஒன்பது இரவுகள், பாண்டவர்கள் சொல்லி தியானித்தார்கள். இந்த இரவுகளே நவராத்திரி என்றழைக்கப்படுகிறது.

பாண்டவர்களை துர்கா ஆசீர்வதித்தாள்! பாண்டவர்கள் வெற்றிக்கு துணை நின்றாள்!

- துர்கா உமேஷ், கரக்பூர்


NARAYANA®
pearls & gems
FASHION JEWELLERY STORE
5-20% off
DISCOUNT
SALE
Astrology
Consultation
Available for
Birthstones
PASSION IS MORE THAN
JUST MAKING THINGS LOOK
FASHION
Explore Our Exclusive Fashion Jewellery Products from Traditional to Hi-Style, Casual to Formal, Bridal Collections, Corporate Gifts, Gem Stones & Accessories
CHENNAI
Kasi Arcade
(Next GRT Hotel)
Ph : 4352 0809
Pondy Bazaar
(Opp. Bank of Baroda)
Ph : 4207 0809
(SUNDAY OPEN)
Anna Nagar
(Opp. Shree Mithai)
Shanthi Colony
Ph : 4354 0809
Vadapalani
"Raahat Plaza"
(Opp. Vijaya Hospital)
Ph : 4218 0809
COIMBATORE
"Singapore Plaza"
Cross Cut Road
Ph : 436 7752
TRICHY
C-55, 4th Cross
Thillai Nagar
Ph : 422 0809
For Online Shopping Visit www.narayanapearls.in | Customer Service : 9566 000 200, Email : info@narayanapearls.in
Business Hours : 10am to 8pm, SUNDAY HOLIDAY

சிக்கு புக்கு ரயிலில் நவராத்திரி!

'நவராத்திரி' என்று தென்னாட்டிலும், 'தசரா' என்று கர்நாடகாவிலும், 'துர்க்கா பூஜை' என்று வங்காளத்திலும் கொண்டாடப்படும் ஒன்பது நாள் விழா அன்னை ஆதிபராசக்திக்கு உரியதாகும்.

அந்த விழாவின்போது மும்பை போன்ற பரபரப்பாகச் செயல்படும் நகரங்களில் பிறர் வீடு சென்று தாம்பூலம் வாங்க பெண்களுக்கு முடிவதில்லை. குறிப்பாக வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு மூச்சு விடகூட நேரமிருக்காது. அதற்காக கொண்டாடாமல் விட்டு விட முடியுமா என்ன? யோசித்ததில் கிடைத்தது சூப்பர் ஐடியா!

பயணம் செல்லும் உள்ளூர் எலெக்ட்ரிக் ட்ரெயினின் மகளிர் பெட்டியிலேயே தேவி ஸ்லோகம் படித்து, தாம்பூலங்களை நண்பிகளுக்கும், சகப் பயணியருக்கும் தினம் கொடுத்து விடலாம் என தீர்மானம் செய்யப் பட்டது.

தங்களது அலுவலகப் பை, சாப்பாட்டுப் பை தவிர மஞ்சள்-குங்குமம்-பூ; வெற்றிலைப் பாக்கு; சிறிய ப்ளாஸ்டிக் அல்லது எவர்சில்வர் டப்பாவில் இரண்டு பர்ஃபித் துண்டுகள் + சுண்டல் ஆகியவற்றை அழகாக பேக் செய்து, ஓடுகின்ற டிரெயினில் விநியோகம் செய்யும் அழகு இருக்கே!

செம்பூரிலிருந்து வீ.டி (சி.எஸ்.டி), டோம்பிவிலியிலிருந்து வீ.டி (சி.எஸ்.டி) செல்லும் லோகல் டிரெயின் பெண்கள் பெட்டி விஜயதசமியன்று அன்று அமளி துமளிப்படும்.


துணி அலமாரிகளில் தூங்கிக் கொண்டிருந்த பட்டுப் புடைவைகளை அணிந்து, கசகசவென்று இருக்கும் கூட்டத்தில் மகாலக்ஷ்மியாகத் திகழ்ந்து, ஸ்லோகங்கள் படித்து, பயணத்தை உபயோகமானதாக ஆக்குவார்கள். பலவகையான பிரசாதப் பரிமாறல்களும் இடம் பெறும்.

வீட்டில் வேக வேகமாய் வேலை செய்து, ஓட்ட ஓட்டமாய் ஓடிவந்து, குறிப்பிட்ட டிரெயினைப் பிடித்து, பண்டிகை + விழாக்களைப் பலருடனும் பகிர்வதில் மும்பை வாழ் பெண்கள் சூப்பர் என்று அடித்துக் கூறலாம்!

– ஆர். மீனலதா,
மும்பை



51



அம்மன் தரிசனம்!

- 10 தலைகள் 54 கரங்களுடன் காளி சிலை, ஆஜ்மீர் அருங்காட்சியகத்தில் உள்ளது.
- காஞ்சிபுரத்தில் காமாட்சியம்மன் கோயில் தவிர வேறு எந்தக் கோயிலிலும் அம்பாளுக்கென்று தனியாக சன்னிதி இல்லை.
- ஜம்முவில் வைஷ்ணவி கோயிலுக்குள் குறுகிய வழியில் தவழ்ந்துதான் போக வேண்டும்.
- காசியில் ஒன்பது தேவி ஆலய தரிசனத்தை 'நவ கௌரி யாத்திரை' என்பர்.
- கௌஹாத்தி காமாக்யா திரிபுர பைரவிக்கு விக்ரகம் இல்லை, பாறைக்கே பூஜை.
- காஞ்சியில் காமாட்சி பத்மாசனத்தில் அமர்ந்து தரிசனம் தருகிறாள்.
- மதுரை மீனாட்சிக்கு, ராஜமாதங்கி என்றும் ஒரு பெயர் உண்டு.
- திருஆனைக்காவல் அகிலாண்டேஸ்வரி ஸ்ரீ சக்கர தாடங்கம் அணிந்திருக்கிறாள்.
- ராமேஸ்வரம் பர்வதவர்த்தினி பாதத்தில், ஸ்ரீ சக்கர யந்திரம் உள்ளது.
- சோமநாத்தில் அம்பிகை, நதி ரூபமாக இருக்கிறாள். பெயர் சந்திரபாகா.
- திருநெல்வேலி பாபநாசத்தில் உள்ள விமலை அம்மன் ஆலயத்தில் அகத்தியருக்கு, ஈசன் தம் திருமணக் காட்சியை அருளினார்.
- அஸ்ஸாம் காமகிரிபீடம், சத்யபாமா நரகாசுரனை வதைத்த தலம்.
- கடர்ஜரத்தில் உள்ள ஜாலந்திரத்தில் அம்பிகை, சந்திர வடிவில் அருள்பாலிக்கிறாள்.
- திருவண்ணாமலையில் தவமிருந்து அம்பிகை, இறைவன் உடம்பில் பாதியைப் பெற்றாள்.
- திருக்குற்றாலத்தில் வீற்றிருக்கும் பராசக்தி, மும்மூர்த்திகளை ஈன்றவள் என்று போற்றப்படுகிறாள்.
- கும்பகோணம் கும்பேஸ்வர் கோயிலில் விஷ்ணு போலவே தொடையில் ஒரு கையை வைத்தபடி தோன்றுகிறாள் மங்களாம்பிகை.
- ஸ்ரீ நகர் சம்புநாகேஸ்வரி, தீபரூபமாக வழிபடப் படுகிறாள்.
- தேவிபட்டினம் மகிஷாசுரமர்த்தினி ராமருக்கு அருள் செய்தவள்.
- இமயமலை கேதாரத்திலுள்ள மார்க்கதாயினி ஆலயம் ஆறு மாதங்கள் பனியால் மூடப்பட்டிருக்கும்.
- திருவெண்காட்டில் அகோரமூர்த்தியும் காளியும் எதிரெதிரே கோயில் கொண்டுள்ளனர்.
- ஹஸ்தினாபுரம் முக்தி நாயகி, பாண்டவர்களால் வழிபடப் பெற்றவள்.

-ஆர். அனுராதா ரவீந்திரன், திருச்சி

ஒரு வரிச் செய்திகள்!



தேவையான பொருள்கள்:

பச்சரிசி மாவு - 1 கப், பால் - ½ லிட்டர், தேங்காய்த் துருவல் - 1 கப், கசகசா - 1½ டீஸ்பூன், பச்சரிசி - 1 டீஸ்பூன், முந்திரிப் பருப்பு - 20, ஏலக்காய்த் தூள் - சிறிது, நெய் - 2 டீஸ்பூன், தண்ணீர் - 2 கப் , திராட்சை, குங்குமப் பூ - சிறிது, வாழை இலை - சிறியது ஒன்று

நைவேத்ய பாயசம்!

செய்முறை

தேங்காய்த் துருவல், கசகசா, பச்சரிசி, முந்திரிப் பருப்பு, பால் சேர்த்து மிக்ஸியில் அரைத்துக் கொள்ளவும். வாணலியில் நெய் ஊற்றி, அதில் இரண்டு கப் தண்ணீர் சேர்த்து, குங்குமப்பூ போடவும். ஒரு கொதி வந்தவுடன், பச்சரிசி மாவை அதில் கொட்டி, சப்பாத்தி மாவு பதத்துக்குக் கிளறவும். பின்னர் அடுப்பை அணைத்து, நன்றாக ஆறியவுடன் மாவை நன்றாகப் பிசைந்துக்கொள்ளவும். இந்த மாவை சிறு சிறு உருண்டைகளாக்கி, நீள வாட்டில் ஃபிங்கரைப் போல சப்பாத்தி கல்லின் மீது வைத்து நீளமாக, திரட்டவும்.

குக்கரில் ஒரு தம்ளர் நீர் ஊற்றி ஒரு பாத்திரம் வைத்து, அதன் மீது இன்னொரு பாத்திரத்தில் இந்த ஃபிங்கர்களைப் போட்டு, வாழை இலையால் மூடி (1 கப் மாவுக்கு 20 ஃபிங்கர்கள் செய்யலாம்.) பத்து நிமிடம் வேக வைக்கவும். மற்றொரு அடுப்பில் பாலை ஊற்றி, அரைத்த கலவையை சேர்த்து இரண்டு கொதி வந்தவுடன், வெந்த ஃபிங்கரை போட்டு, இலேசாகக் கிளறவும்.

முந்திரி, திராட்சை, நெய்யில் வறுத்துப் போட்டு, ஏலக்காய்த்தூள் சேர்க்கவும். கமகம கிருஷ்ண ஜெயந்தி ஸ்பெஷல் பாயசம் ரெடி!

- பி. சுமித்ரா
பிரேம்குமார், சென்னை

சந்தித்தோம்... சிந்தித்தோம்..



ஜூன் மாதம் 12, 13, 19, 20 ஆகிய தேதிகளில் பண்ருட்டி, சிதம்பரம், கடலூர், திண்டிவனம், திருக்கோவிலூர், திருவண்ணாமலை, காட்பாடி, அரக்கோணம் ஆகிய ஊர்களுக்குச் சென்று, நமது மங்கையர் மலர் வாசகியரைச் சந்தித்து. அளவளாவி போட்டிகள் நடத்தி பரிசுகள் தந்து குதூகலித்தோம். அடேயப்பா! சும்மா சொல்லக்கூடாது... உற்சாகம் கரை புரண்டோட, பங்கு கொண்டு சிறப்பித்ததுடன் மங்கையர் மலரை மேம்படுத்த சீர்மிகு கருத்துகளையும் தந்து உதவினார்கள். அனைவருக்கும் நன்றி! நன்றி!









பண்ருட்டி

நாற்காலி யாருக்கு?
தி கேம் ஸ்டார்ட்ஸ்!











சிதம்பரம்

ஒவ்வொரு மாசமும் ஒவ்வொரு
சப்ஜெக்ட்ல குட்டி புக்
தர்றீங்களே...
ரூம் போட்டு யோசிப்பீங்களோ?

சந்தோஷித்தோம்!









கடலூர்



எங்க ஊர் செய்திகளெல்லாம் இனி நிறைய எழுதுவோம்!



திண்டிவனம்





யூத் எடிஷன் பக்கங்கள்ல பசங்க நல்லா கலாய்க்கிறாங்க!





திருக்கோவிலூர்





என்னோட சமையல் டிக்ஷ்னரியே மங்கையர் மலர்தான்!

உங்கப் பிரதிக்கு முந்துங்க!

முகவர்கள் விவரம்:

எம். வெங்கடேசன் பண்ருட்டி 93447-27339

சிவகுமாரி நடராஜன் - சிதம்பரம் - 04144-222732

பி.கீதா - கடலூர் - 97893-31096

அ. ரவி - திண்டிவனம் - 95666 - 87171

பிருந்தா செல்வராஜ் - திருக்கோவிலூர் 99447 - 43463

எஸ்.கோபிநாத் - திருவண்ணாமலை - 94429-76062

எம். குணசேகரன் - காட்பாடி 94430 -97579

ஆர். நந்தகுமார் - அரக்கோணம் - 99947-87007




திருவண்ணாமலை



ஆண்களும் விரும்பிப் படிக்கும் ஜனரஞ்சகமான பத்திரிகை... ஸோ... எங்க வோட்டும் உங்களுக்கே!






நானும் ஜெயஸ்ரீ ராஜ் நினைவுச் சிறுகதைப் போட்டிக்கு கதை அனுப்பியிருக்கேன்!



காட்பாடி

மூணு தலைமுறையா படிக்கிறோம்... அவ்ளோ பயனுள்ளதா இருக்கு!

அரக்கோணம்



ஜூலை மாத வாசகர் சந்திப்புப் படங்கள் அடுத்த இதழில்!

மங்கையர் மலரை எனக்கு அறிமுகப்படுத்தினது எங்க அம்மாதான்னு பெருமையா சொல்வேன்!




மங்கையருக்கான இந்த மலரை வாடாமல் உறிஞ்சுபவர்களால்தான் தேன் எடுக்க முடியும். பெண்களை மேன்மைப்படுத்தவும் மெருகேற்றவும் உதவும் இந்த மென்மையான மலரை என் பெண்ணுக்கும் அறிமுகப்படுத்தி வைத்ததில் பெருமை அடைகிறே

மாட்டுத் தொழுவத்தில் பித்ரு பூஜை செய்பவர்களுக்கு முன்னோர்களுடைய பரிபூரண ஆசியும் ஆதரவும் நிச்சயம் உண்டு

மஹாளய அமாவாசை அன்று (7-10-2010)

மாட்டுத் தொழுவத்தில் நடைபெறும் பித்ரு தர்ப்பண பூஜையில் அனைவரும் கலந்து கொண்டு பித்ரு தேவதைகளின் ஆசிர்வாதத்தை பெற்று அனைத்து தோஷங்களில் இருந்தும் நிவர்த்தி பெற அன்புடன் அழைக்கிறோம்

நமது குடும்பத்தில் மறைந்த முன்னோர்களுக்கு (பித்ருக்கள்) சரியாக பூஜை செய்து திருப்திபடுத்தாத காரணத்தினால்தான் நமக்கு துன்பங்கள் அடுக்கடுக்காக வருகின்றன. இது நீங்க மாட்டுத் தொழுவத்தில் பித்ரு பூஜை செய்வது மிகவும் நல்லது. மாட்டுத் தொழுவத்தில் பசுவின் சாணம், கோமியத்தில் (கன்றுபோட்ட பசுவின் கோமியம்) சுத்தம் செய்து, சாளகிராமம் முன் பித்ரு பூஜை செய்வதால், தேவர்கள் வந்து சிறப்பாக நடத்தி வைப்பார்கள். அவர்களது நல்லாசியால் பித்ருக்கள் முக்தி அடைவதுடன், மனமகிழ்ந்து அவர்களது குடும்பத்தினர் அனைத்து தோஷங்களில் இருந்தும் விடுபட்டு ஆரோக்கியமாக நீண்ட ஆயுளுடன் வாழ ஆசிர்வதிக்கின்றனர். நம்மை வளர்த்து ஆளாக்கியமைக்காக நமது நன்றி உணர்வை தெரிவிக்கவும், மூதாதையர் எவ்வுலகில் வாழ்ந்தாலும் தம் பொழுதை கழிக்கவும், அனைவரும் பித்ரு பூஜை செய்ய வேண்டும் என்ற இறை சிந்தனையோடு மஹாளய அமாவாசை அன்று பசுமடத்தில் திலஹோமம் செய்து, வைதீக முறைப்படி மாட்டுத் தொழுவத்தில் முன்னோர் வழிபாடு செய்யப்படுகிறது. இதில் அனைவரும் கலந்து கொண்டு, பசுமடத்தில் உள்ள வயதான அனைத்து பசுக்களுக்கும் அகத்தி கீரை, அருகம் புல், கருப்பு எள், வெல்லம், வெண் பொங்கல், பழங்கள் போன்ற உணவை அளித்து, வஸ்த்திர தானத்துடன் தர்ப்பணம் செய்து, அனைத்து தோஷங்களில் இருந்தும் நிவர்த்தி பெற அன்புடன் அழைக்கிறோம்.

பித்ருக்கள் நினைவாக வயது முதிர்ந்த, பால் வற்றிய, ஊனமுற்ற, நோயுற்ற பசுக்களை பசுமடத்தில் பாதுகாத்து பராமரிக்க தங்களால் முடிந்த கீழ்கண்ட நன்கொடையை அனுப்பும் அன்பர்கள் சார்பாக மஹாளய அமாவாசை அன்று தில ஹோமத்துடன் முன்னோர் வழிபாடு முழுமையாக செய்து பிரசாதத்துடன் கீழ்கண்ட பூஜிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் கோமாதா வண்ணப்படம் அனுப்பி வைக்கப்படும். பசுக்களை பாதுகாக்க பணம் அனுப்பும்போது, யாருக்கு திதி செய்ய விரும்புகிறீர்களோ அவரின் பெயர் திதி மற்றும் கோத்திரம் போன்ற விவரங்களையும் அவசியம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ரூ. 500 - அனுப்பும் அன்பர்களுக்கு பெருமாள் விளக்கு (பித்தளை) அனுப்பி வைக்கப்படும்
ரூ. 1000 - அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான ஸ்ரீ ராமர் பாதம் 2 அனுப்பி வைக்கப்படும்
ரூ. 2000 - அனுப்பும் அன்பர்களுக்கு பசுவும் கன்றும் சேர்ந்த (கோமாதா) வெள்ளியிலான விக்ரகம் அனுப்பி வைக்கப்படும்
ரூ. 3000 - அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான துளசி மாடம் அனுப்பி வைக்கப்படும்
ரூ. 4000 - அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான தவழும் கண்ணன் அனுப்பி வைக்கப்படும்
ரூ. 5400 - அனுப்பும் அன்பர்களுக்கு பெரிய வலம்புரி சங்கு அனுப்பி வைக்கப்படும்
ரூ. 9000 - கோதானம் செய்யும் அன்பர்களுக்கு வெள்ளியிலான ஐஸ்வர்ய பெருமாள் விளக்கும் பித்தளையிலான கோமாதா விக்ரகமும், சாளக்கிராமும் அனுப்பி வைக்கப்படும்

முன்னோர்கள் நினைவாக மஹாளய அமாவாசை அன்று மகிஷ (எருமை) தானம் செய்ய ரூ.11,000, காராம் பசு தானம் செய்ய ரூ.10,000 அனுப்பி, பித்ரு தோஷம், புத்திர தோஷம், செவ்வாய், நாக தோஷம், ஆபிசார தோஷம், நவக்கிரஹ தோஷம், திருமணத் தடை, வியாபாரத் தடை பணப்பிரச்சனை, கடன் தொல்லை மற்றும் அனைத்து தோஷங்களும் விலகி, தங்களுக்கும், தங்களுடைய சந்ததியினருக்கும் அனைத்து செல்வமும் பெருகி சர்வ மங்கலமும் கிடைக்க கலந்து கொள்ள வேண்டுகிறோம்.

பணம் அனுப்பும் அன்பர்களுக்கு ரசீதும், மேற்கண்ட பிரசாதங்களும் மஹாளயபக்ஷம் முடிந்த பிறகு அனுப்பி வைக்கப்படும்

சைவ முறைப்படி சுத்தமான நாட்டு பசுஞ் சாணத்தில் தயாரிக்கப்பட்ட விபூதி பிரசாதங்களுடன் அனுப்பி வைக்கப்படும்



தங்கள் நன்கொடையை Cheque / D.D/ M.O ஆக Shri Ghosala Seva Trust, Chennai என்ற பெயருக்கு அனுப்ப வேண்டுகிறோம். நன்கொடைகளுக்கு 80ஜி பிரிவின்படி வரி விலக்கு உண்டு

பசு மடம்

(Recognised by Animal Welfare Board of India)

வயதான பசுக்களை பராமரிக்கும் இல்லம், ஆதரவற்ற பசுக்களை பாதுகாக்கும் இல்லம், ஊனமுற்ற, நோயுற்ற பசுக்களை பேணும் இல்லம்

பெருமாளகரம், திருவேற்காடு(PO), சென்னை -77. Ph: 044 - 3299 9888



Donate liberally to receive Gomatas Blessings

மைசூர் 6



தலைப்பே வித்தியாசமாக இருக்கிறது அல்லவா! இது எண்பது வருடங்களுக்கு முந்தைய கதை. எங்கள் கொள்ளுத்தாத்தா மைசூரில் ஸ்டேஷன் மாஸ்டராகப் பணிபுரிந்த காலம். இரண்டு வருடத்துக்கு ஒருமுறை நவராத்திரி விடுமுறையில் சொந்த ஊரான திருச்சி அருகிலிருக்கும் தொட்டியம் என்ற ஊருக்குப் போவார்களாம்.

அந்தக் காலத்தில் ஸ்டேஷன் மாஸ்டர் லீவில் போக வேண்டுமென்றால் மூன்று மாதம் முன்னதாக மேல் அதிகாரிகளுக்குத் தெரிவித்து, அவருக்குப் பதிலாக இன்னொருவர் அந்த இடத்துக்கு வர ஏற்பாடு செய்ய வேண்டும். மாற்று நபர் வரும் தகவல் பதினைந்து நாட்கள் முன்னதாக தந்தி மூலம் தெரிவித்து விடுவார்கள். அன்றைய தினத்திலிருந்து பயணத்துக்கான ஏற்பாடுகள் வீட்டில் அமர்க்களமாக ஆரம்பித்துவிடும்.

அது ஒரு நீண்ட பயணம். மைசூரிலிருந்து சென்னைக்கு சேர மூன்று நாட்களும், சென்னையிலிருந்து திருச்சிக்கு மூன்று நாட்களும், அங்கிருந்து தொட்டியம் ஊருக்கு, காவிரி நதியில் பரிசல் மூலமாகவும் போய் சேர கிட்டத்தட்ட எட்டு அல்லது பத்து நாட்கள் ஆகி விடும்.

இந்தப் பயணத்தில் சாப்பாடுதான் முக்கியமான விஷயம். முதலில் பட்சண வகைகள் செய்ய ஆரம்பித்து விடுவார்களாம். அரிசி இடித்து, மாவாக்கி, முறுக்கு, தட்டை, தேன்குழல், அதிரசம் இப்படி நொறுக்குப் பண்டங்கள் டப்பாக்களில் நிறைந்துவிடும். இன்னும் இரண்டு நாட்களில் மாற்று ஆள் வந்துவிடுவார் என்று தெரிந்ததும் அரிசியை ஊற வைத்துக் கட்டியாக அரைத்து பாத்திரத்தில் வைத்துவிடுவார்கள். கற்சட்டியில் புளிக்காய்ச்சல் தயாராகிவிடும்.

பயணத்தின் முதல்நாள் உளுந்தை ஊறவிட்டு அரைத்து, முன்னமே அரைத்து வைத்த அரிசியுடன் கலந்ததும் தோசை மாவு தயார்!

எங்கள் பாட்டி அதிகாலையிலேயே பெரிய வெங்கலப் பானையில் சாதம் வடித்து, மணக்க, மணக்க புளியஞ்சாதம் கலந்து ஒரு பாத்திரத்தில் வாழையிலை போட்டு எடுத்து வைத்து மூடிவிடுவார். இஞ்சி, பச்சை மிளகாய், கறிவேப்பிலை, கடுகு தாளித்து நிறைய பாலும் தயிரும் சேர்த்து தளதளவென்று, தயிர்சாதம் மற்றொரு பாத்திரத்தில் தயாராகும்.

அடுத்தது, தோசை வார்க்கும் படலம். கனமான தோசைக் கல்லை அடுப்பில் வைத்து, ஒரு கிண்ணத்தில் எண்ணெயும், தண்ணீரும் சேர்த்து, அதில் ஒரு தேங்காய் நாரைத் தோய்த்து, கல்லில் தேய்த்து,

தொட்டியம்!

மறக்க முடியாத நவராத்திரி பயணம்!



தோசை மாவை ஊற்றி, கனமான தோசைகளாக வார்த்து விடுவார். நன்றாக ஊறிய மாவு என்பதால், உப்பி ஒட்டை, ஒட்டையாக, பட்டுப் போல் மிருதுவாக இருக்கும். அந்தத் தோசைகளை இரட்டை விளிம்பு தோசை என்று சொல்வார்களாம். அப்படி வார்த்த பட்டுப்பட்டான தோசைகளில் மிளகாய்ப்பொடியை நல்லெண்ணெயுடன் கலந்துத் தடவி, ஒரு குழித் தட்டில் அடுக்குவார்களாம். தண்ணீருக்கு பெரிய வெங்கல கூஜாவும், காப்பிக்கு மற்றொரு கூஜாவும் 'பளபள' என்று தயாராகும். 'சென்னப் பட்டணா' புகழ் மர வேலைப்பாடு பொம்மைகளை வாங்கி, அதை மரப் பெட்டியில் துணியில் சுற்றி வைப்பார்களாம். இது தவிர துணிமணி மூட்டைகள் வேறு. எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு காலை பதினொரு மணி சுமாருக்கு ரயிலில் குழந்தைகளுடன், பொருள்களையும் ஏற்றி உட்கார்ந்து விட்டால் நிம்மதிப் பெருமூச்சுதான்.



ரயில் ஒவ்வொரு ஸ்டேஷனிலும் நின்று, நிதானமாகப் போய்க் கொண்டிருக்கையில், கைக்கும், வாய்க்கும் நான் ஸ்டாப் வேலை சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருக்கும். தண்ணீர் கொடுக்க ஒவ்வொரு ஸ்டேஷனிலும் ரயில்வே சிப்பந்தி ஒருவர் பெரிய தவலையுடன் நின்றிருப்பார். ஆங்காங்கே கூஜாக்களை நிரப்பிக் கொண்டு, கட்டு சாதக் கூடையை காலிச் செய்வதில் இரண்டு நாட்கள் கழிந்து விடும். மூன்றாவது நாள் சென்னை சேர்ந்ததும் உறவினர் வீட்டில் தங்கி விட்டு, மறுபடி சகல உணவுகளையும் கட்டிக் கொண்டு திருச்சி வண்டி ஏறினால் இரண்டாவது கட்டப் பயணம் தொடங்கும். திருச்சியை அடைந்ததும், அங்கிருந்து காவிரியில் பயணம். பரிசலில் ஏறினால் நான்கு மணி நேரத்தில், சொந்த ஊரான தொட்டியத்தைத் தொட்டு விடலாம். இத்தனைப் பெரிய பட்டாளம் ஒன்று இறங்கினால் நவராத்திரி களை கட்டாமல் இருக்குமா?


பாட்டி வாங்கிச் செல்லும் சென்ன பட்டணா மர பொம்மைகளுக்கு அவ்வளவு கிராக்கியாம்! ஸ்ப்ரிங் வைத்த, கலர் கலரான பொம்மைகள் கை, கால், தலையசைப்பதை ரசிக்க குழந்தைகள் கூடி விடுவார்களாம்!

இப்போது இதைப் படிப்பதற்கு ஆச்சரியமாக இருக்கும். ஆனால், அந்த நீண்டப் பயணம் கணவன், மனைவியின் நெருக்கத்துக்கும், இன்பமான பேச்சுகளுக்கும் உத்திரவாதம் தரும். அது மட்டுமா? பிள்ளைகளின் குறும்பை ரசித்து கொண்டு, டென்ஷன் இல்லாத சுகமான தூக்கத்துக்கும் இடம் கொடுத்த அந்தப் பயணம் நிச்சயமாகவே ஓர் உல்லாசப் பயணம்தான்!

- ராஜ்யலக்ஷ்மி,
மல்காஜ்கிரி

மறுவாழ்க்கை

எனது பெயர் நம்புகிருஷ்ணன். எனது வயது 66. சென்ற 30.10.07 இரவு சுமார் 9 மணி அளவில் எனது மார்பின் இடது புறம் எரிச்சல், வலி மற்றும் மூச்சுத் திணறல் ஏற்பட்ட காரணத்தால் சென்னை, வடபழனியில் இருக்கும் ஒரு பிரபல மருத்துவமனையில் அவசரப் பிரிவில் சேர்க்கப்பட்டேன்.




ICUல் இருந்த என்னை பிரபல இருதய டாக்டர் (Cardiologist) பரிசோதனை செய்துவிட்டு, உடனே ஆஞ்சியோகிராம் செய்ய ஏற்பாடுகள் செய்தார். பரிசோதனைக்குப்பின் கடுமையான இதய அடைப் புகள் இரத்த நரம்புகளில் மூன்று இடங்களில் 70, 90, 100% என்ற நிலையில் இருப்பதாகவும், இன்னும் சில தினங்களில் By Pass Surgery என்ற இதய அறுவை சிகிச்சை செய்யப்பட வேண்டும் என்றும், அவ்வாறு செய்யத் தவறினால் உயிருக்கே ஆபத்து நேரும் என்று கூறிவிட்டார். இதற்காகும் செலவு ரூ. 4,00,000 (இலட்சங்கள்) என்றும் உடனே பணத்தை ஏற்பாடு செய்யும்படி அறிவுரை கூறிச் சென்றுவிட்டார். ஆனால் இதற்குள் மொத்தம் ரூ. 60,000 செலவாகி விட்டது. மேலும் பணத்துக்காக நான் அலைந்து கொண்டிருந்த நேரத்தில் மீண்டும் இதயத்தில் வலி, எரிச்சல், மூச்சுத்திணறல் ஏற்பட்டதால், மற்றொரு டாக்டரிடமும் இரண்டாவது கருத்து கேட்டேன். அவரும் அதையே சொன்னார். அந்தசமயம் என்னைக் காண வந்த எனது நீண்ட நாள் குடும்ப நண்பர் திரு. சாந்தகுமார் என்பவர், தனக்கும் இப்படி இதயக் கோளாறு இருந்ததாகவும், அறுவைசிகிச்சை தான் வழி என்று எல்லா டாக்டரும் சொன்னநேரத்தில்தான் Oxymed என்ற மருத்துவ மனைக்குச் சென்றதாகவும், ஆனால் அங்குள்ள டாக்டர். அயாஸ் அக்பர் என்பவர், தனக்கு அறுவை அற்ற ஒரு வித சிகிச்சை அளித்ததாகவும், அதன் பின் எந்த தொல்லையும் இல்லாமல் எப்பொழுதும் போல், அன்றாட காரியங் களைச் செய்துகொண்டு (Normal Life) வாழ்ந்து வருவதாகவும் சொல்ல, அவரது அறிவுரைப்படி 31.12.2007ல் நந்தனத்தில் உள்ள அம்மருத்துவ மனைக்கு அவருடன் சென்றேன்.

காலை சரியாக 10 மணிக்கு என்னை அழைத்த டாக்டர். அயாஸ் அக்பர் அவர்கள், நான் அவர் முன் மிகுந்த சிரமத்துடன் சுவாசிப்பதையும், நடக்க சிரமப்படுவதையும், ஏன் நிமிர்ந்து உட்காரக் கூட சிரமப்படுவதையும் கண்டு, உடனே உடல் பரிசோதனை செய்து உடனடியாக 3DCCG எடுத்து வாருங்கள். இது நூற்றுக்கு நூறு ஆஞ்சியோகிராம் போன்றது, ஆனால் எந்தவித மருந்தும், உள்ளுக்கு கொடுக்காமல் கம்ப்யூட்டர் மெஷின் மூலம் துல்லியமாக இதயத்தின் தற்சமய

நிலைமையை பிரிண்ட் செய்து உடன் (with in ½ hour) கொடுக்கும். ஆகவே எவ்வித சிரமும் நோயாளிக்கு இருக்காது என்று உறுதியுடனும், கனிவுடனும் அவர் கூறியவிதமே எனக்கு மிக நம்பிக்கை அளிப்பதாகவும் நிம்மதியாகவும் இருந்தது.

டாக்டரின் அறிவுரைப்படி ½ மணி நேரத்திற்குள் 3DCCG எடுக்கப்பட்டது. ரிப்போர்ட்படி 30, 70, 100% என்ற முறையில் 3 அடைப்புகள் எனது இதய இரத்த நாளங்களில் இருப்பதாகவும் இதற்கு ஐந்து நாட்கள் ஓஸோன், 15 நாட்கள் கீலேசன் என்ற மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொள்ளும்படியும் மற்றும் தினமும் 1 மணி நேரம் EECP மெஷின் சிகிச்சை தொடர்ந்து 35 நாட்கள் எடுக்க வேண்டும் என்று கூறினார். இதற்காக மருத்துவமனையில் தங்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், தினசரி வீட்டுக்கு சென்று விடலாம் என்றும், இதற்கு மொத்தம் ஆகும் செலவு அறுவை சிகிச்சைக்கு ஆகும் செலவில் 3-ல் ஒரு பாகம் கூட ஆகாது என்றும் சொன்னார்.



அதன்படியும் அங்கிருந்த சில நோயாளிகள் சொன்ன விபரத்தின்படியும் எனது சிகிச்சையை மறுநாள் ஆரம்பித்தேன். 1½ மாத சிகிச்சைக்குப் பின் மீண்டும் 3DCCG எடுத்துப் பார்த்த பொழுது எனது இதய அடைப்புகள் முற்றிலும் நீக்கப்பட்டிருப்பது அறிந்து மிக ஆச்சரியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது. அதன் பிறகு மாதம் ஒரு முறை தனது Oxymed புற நோயாளி கிசிச்சைக்கு வரவழைத்து எனது உடல் நிலையைப் பரிசோதித்து தக்க அறிவுரை கூறி வருகிறார் டாக்டர். அயாஸ் அக்பர் அவர்கள்.

சிகிச்சை எடுத்து 3 வருடங்கள் முடிந்தும் இன்று வரை ஆரோக்கிய முடனும், சுறு சுறுப்புடனும் எனது அன்றாட பணிகளை செய்து வருகிறேன்.

மேலும் இதுவரை 50க்கு மேற்பட்ட இருதய நோயாளிகளை இம் மருத்துவ மனைக்கு சிகிச்சை எடுக்கப் பரிந்துரைத்து, அவர்களும் நலமுடன் உள்ளனர்.

வாழ்க Oxymed!

வளர்க அதன் சேவை!

இது சம்பந்தமாக என்னைத் தொடர்பு கொள்ள விரும்பினால் எனது Cell No. 94453 42426.

இப்படிக்கு :

க. நம்புகிருஷ்ணன்,

இதன்மூலம் என்னைப் போன்ற இதய நோயாளிகள் காலத்தையும், பணத்தையும் வீணாக்காமல் தக்க சிகிச்சையைப் பெற்று நல்வாழ்வு வாழ முழு இதயத்துடன் இதை எழுதியுள்ளேன்.



பண்டிகை ஸ்பெஷல்-2

விநாயக சதுர்த்தியும்... விதவித பிள்ளையார்களும்!



கஜமுகனாம் கணபதியைப் பிடித்து வைத்தால் களிமண் பிள்ளையார், மஞ்சள் பிள்ளையார், வெல்லப் பிள்ளையார் என்று மாப்பிள்ளையாகத் தோன்றுவார். பாசிமணி, சங்கு, ஒயர், தேங்காய் என விதவிதமான பொருள்களில் பிள்ளையாரை அமைப்பது என் மனசுக்குப் பிடித்த பொழுது போக்கு!



ஆலிலைக் கண்ணன்போல ஆலிலையில் ஆனைமுகனை வைத்தேன். அஷ்டலக்ஷ்மி போல், அஷ்ட கணபதி உருவங்கள் அமைத்தேன். நின்ற சீர் நெடுமால்போல் அமர்ந்த தெய்வத்தை நிழல் குடைத்தாங்கி நிற்கும் வடிவம் செய் தேன். கண்ணன் மட்டும்தான் ஊஞ்சல் ஆட வேண்டுமா? கற்பகக் களிறாம் கணநாதனும் ஊஞ்சலாடலாம் என்று ஊஞ்சல் விநாயகர் உருவம் படைத்தேன். ஊஞ்சலாடும் பிள்ளையாரை வாஞ்சையுடன் வணங்குவோம்!

- கற்பகம் வேதராமன்,
காரைக்குடி

அடடே கத்தரி!

ஜூலை மாத இதழில், 'கத்தரிக்காய்க்கு எந்தவொரு நல்ல சத்தும் இல்லை' என்று ஒரு சகோதரி எழுதியிருந்தார். ஆனால், கத்தரிக்காய் பற்றியும் அதில் இருக்கும் சத்து பற்றியும் நிறையவே சொல்லலாம்.

இந்தியன் கத்தரியின் பெயர் : பைங்கன். அதன் சத்துக்கள்: கால்சியம் : 525 மிகி, கொலஸ்ட்ரால் : 16 மி.கி, டயட்டரி நார்ச்சத்து : 4.9 மி.கி, இரும்புச் சத்து : 6 மி.கி, பொட்டாசியம் : 618 மி.கி, புரோட்டீன் : 8 கி, சேச்சுரட்டட் கொழுப்பு : 5.2 கி, சோடியம் - 62 கி, சர்க்கரை சத்து - 114 கி, மொத்த கார்போஹைட்ரேட் - 17.8 கி, மொத்த கொழுப்பு - 27.5 கி, விட்டமின் பி - 6.4 கி

★ கணையம் வீங்கினால் - காலை வெறும் வயிற்றில், கத்தரி + சர்க்கரை சேர்த்துச் சாப்பிட, குணமாகும்.

★ தீயில் வாட்டிச் சாப்பிட தூக்கமின்மை குணமாகும். பசியின்மை அகன்று ஜீரண சக்தி அதிகரிக்கும்.

★ வாயுவைக் குறைக்கும்.

★ ஏழைகளின் அசைவ உணவான இதில் ஆன்ட்டி-பயாடிக் குணம் உண்டு.

★ காலில் வீக்கம் இருப்பவர்கள் கத்தரியின் டிகாக்ஷனை சூடாகத் தடவினால் வீக்கம் வடியும்.

★ அமிலத் தொந்தரவு, பித்த நீர் தொந்தரவு அகலும்.

★ சீன மருத்துவத்தில் கத்தரிக்காய், குடல் ரத்தக் கசிவுக்கு உபயோகிக்கப்படுகிறது.

★ காளான் சாப்பிட்டு, ஒவ்வாமை ஏற்பட்டால், அதற்கு கத்தரிக்காய் மாற்று மருந்தாகும்.

- கே.வி.சுப்ரமண்யன்,
கோபி



திருமணம் மற்றும் சுபகாரியங்களுக்கு புதுமையானது
SAS leaf
Paper Banana Leaf
பேப்பர் வாழை இலை
®182931
First in India
HYGIENIC & ECO FRIENDLY
ISO 9001:2000 Regn No.4172
PATENT No: 198079
Highly Suitable for Packing & Serving Food
Marketing By :
M/s.S.A.SAFIULLAH& CO., P.B.NO..14 PUDUKKOTTAI-622003.
Ph:04322-260603 Mobile: 9442583383 EMail-nizambetelnut@dataone.in
Manufacture: S.A.S & COMPANY, PUDUKKOTTAI.
Visit us:www.saspaperleaf.com



நவராத்திரி அன்பளிப்பு பொருட்கள்
34 வருட பாரம்பரியம் மிக்க
மயிலாப்பூர்
விஜயா ஸ்டோர்ஸ்
பக்தி மணம் கமழும் ஒரு பாரம்பரியக் கடை
பூஜைக்கு தேவையான மஞ்சள், குங்குமம், சீப்பு, கண்ணாடி, சுவாமி அலங்கார பொருட்கள், அம்மன் பாவாடை, மரபாச்சி பொம்மை, அலங்கார மாலைகள், தோரணங்கள், காப்பர் கண் மெட்டல், பிளாஸ்டிக், பித்தளை, ஒயிட் மெட்டல், செம்பு, ஹாண்டி கிராப்ட், அன்பளிப்பு பொருட்கள் மற்றும் பரத நாட்டியத்திற்கு தேவையான அனைத்து பொருட்களும் கிடைக்கும்.
VIJAYA BRAND
VIJAYA STORES
42, (Opp. Kapaleeswarar Temple Office), 72, (Near Indian Bank), North Mada Street, Mylapore, Chennai - 600 004.
Ph: 2464 2500, 2495 7555, Res: 2464 3250

ஸ்ரீ அகிலாண்ட நாயகி



பண்டிகைகள் வரிசை கட்டிக்கொண்டு வரத் தொடங்கும் காலம். அதிலும் நம் குழந்தைகள், அழகுத் தமிழில் சுலோகங்களும் சொல்லத் தொடங்கிவிட்டால் அந்த ஆனந்தத்துக்கு ஈடேது...? இதோ... நவராத்திரி பூஜை தினங்களில் அம்மனை வழிபட, சில அற்புத சுலோகங்கள். ஒவ்வொரு கிழமைக்கும் ஒரு பாட்டு என்று கற்றுக் கொடுக்கலாம்.

* ஞாயிறு

ஆயிரம் நாமத்தில் அர்ச்சனை
செய்தோம் அடிபணிந்தோம்
தாயினும் அன்பு பொழிந்
தென்னை தாங்கும் தமிழரசி
வேயும் பிணியும் வறுமையும்
போக்கி விளக்கிடுவாய்
ஞாயிறு தோறும் வருவாய்
சிவலோக நாயகியே!

* திங்கள்

சங்கப் புலவர் தமக்கொளி யூட்டும்
தனிப்பொருளே
இங்கு இப்பணிக்கே என்
அங்கத்தையிட் டேன் எனக்கிரங்கிச்
சிங்கக்குருளை வடிவேல் முருகனும்
சேர்ந்திருக்கத்
திங்கட்கிழமை வருவாய் அருள்வாய்
சிவசக்தியே

* செவ்வாய்

பங்கஜ பாதம் பணிந்தறியேன் பக்தர் பாடுகையில்
அங்கம் சிலிர்க்க அழுதறியேன் ஏழை
ஆயினும் என்
சங்கடம் தீர்த்தருள்வாய் என்றுனையே
சரண்புகுந்தேன்
மங்கள வாரம் வருவாய் அம்மா
ஜீவமாணிக்கமே



பயன்

திங்கள் ஈராறும் தினங்கள் ஒரேழும் திருப்பெயரை
எங்கிருந்தாலும் புகல்வேன் நான் தங்கும் - இடங்களெல்லாம்
மங்களம் பொங்கி மரபோங்கி வாழ வரம் தருவாய்
நங்கை சிவகாமி அம்மா அகிலாண்ட நாயகியே.

வாரப் பதிகம்!

* புதன்

மதமாயை சேற்றில் உழன்றேன் சிவாமுத வாரிதியை
இதமாகக் காட்டி நீராட்டி உள்ளத்தின் இழுக்க - கற்றிப்
பதமான யோகசம்பத் தெல்லாம் தந்தென்னை பாட வைத்தாய்
புத வாரம் தோன்றி அருள்புரிவாய் தெய்வப்பூங்குயிலே

* வியாழன்

ஒருவாய் அமுதை முருகனுக்கூட்டி மற்றொன்றை முன்னோன்
பெருவாயில் ஊட்டி மகிழ்கின்றபோது பிதிரும் அன்னம்
தருவாய் எனக்காத்து நிற்கும் இவ்வேழை தவப்பயன் போல்
குருவாரம் தன்னில் வருவாய் சிவயோக கோகிலமே

* வெள்ளி

துள்ளித் திரியும் மனம் உள்ளடங்க நின் தோத்திரங்கள்
அள்ளிக் குடித்தேன் என் உடலம் கூத்தாட அகக் கதவை
மெள்ளத் திறந்து தெளிந்து குளிர்ந்து விளக்கேற்றினேன்
வெள்ளிக்கிழமையில் வந்தருள்வாய் ஞான வித்தகியே

* சனி

மனக் கவலைக்கிங் கிடமில்லை தாழ்வில்லை வாட்டமில்லை
இனிக் கிரகங்கள் கொடும் பார்வை யில்லை இடருமில்லை
எனக்கும் இரங்கி என் பாடலை ஏற்றாய் பேரின்பமீந்தாய்
சனிக்கிழமைக்கண் வருவாய் வசங்கரி சங்கரியே

இதேபோல சித்திரை முதல் பங்குனி வரையிலான மாதப் பதிகமும் உண்டு.

இவையனைத்தும் ஆதி அகஸ்திய நாடிகிரந்தங்களிலிருந்து, ஸ்ரீ நொச்சூர் சுவாமிகளால் தொகுக்கப் பட்டவை.

- கீதா ஸ்ரீகாந்த்,
கூத்தப்பாக்கம்





செய்முறை:

கோதுமை மாவில் ஒரு கப் நெய்யைச் சுட வைத்துக் கலந்து தேவையான தண்ணீர் ஊற்றி மாவைக் கெட்டியாகப் பிசையவும். பிசைந்த மாவை சிறு சிறு புடிச்ச கொழுக்கட்டை போல் செய்து வாணலியில் எண்ணெய் ஊற்றிச் சூடானதும் கொழுக்கட்டைகளை நான்கு நான்காகப் போட்டு மிதமான சூட்டில் பொரித்தெடுக்கவும். கையால் உடைத்து, ஆற விடவும். மிக்ஸியிலிட்டுச் சலிக்கவும்.



விநாயகர் சதுர்த்தி லட்டு!

வேண்டிய பொருள்கள்:

கோதுமை மாவு - 4 கப்

பொடித்த சர்க்கரை - 2½ கப்

நெய் - 2 கப்

சூரிய காந்தி எண்ணெய் - தேவையானது

உலர்ந்த திராட்சை - 1 பிடி

பாதாம் பருப்பு - 6

முந்திரிப் பருப்பு - 6

ஏலக்காய் - 5

ஜாதிக்காய் - சிறிய துண்டு

சலித்த கலவையில் உலர்ந்த திராட்சை, பொடித்த ஏலக்காய், ஜாதிக்காய், முந்திரி, பாதாம் கலந்து, பொடித்த சர்க்கரையையும் சேர்த்து, நன்றாகக் கலக்கவும். சூடான நெய்யைச் சேர்த்து லட்டுகள் பிடிக்கவும்.

இந்த லட்டு பதமாகச் செய்யப்பட்டிருந்தால் ஒரு மாதம் வரை கெடாது.


- பிரபா டாக்கர், ஹைதராபாத்

பண்டிகை ஸ்பெஷல்-2

சுற்றுலா

அமெரிக்காவிலுள்ள இந்தியானா (Indiana) மாநிலத்தின் தலைநகர்தான் இந்தியானாபொலிஸ் (Indiana Polis). இந்தியானா என்னும் வர்த்தகக் கம்பெனி ஒன்று, இங்கு பென் சில்வேனியா வர்த்தகர்களால் நடத்தப் பட்டதாம். நஷ்டம் வந்து அந்தக் கம்பெனி மூடப்பட்டாலும் 1800ல் இலினாய், மிச்சிகன் மாநிலங்கள் தோன்றியபோது இந்த மாநிலம் 'இந்தியானா' என்றப் பெயரைப் பெற்றது.

இந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்த மக்கள் 'ஹூஸியர்' என்று அழைக்கப்பட்டனர். 'வாபாஷ்' நதி ஓடியதால் முன்னாட்களில் 'வாபாஷ்' நாடு எனப் பட்டதாம். அடர்ந்த காடுகளும், சலசலக்கும் நதிகளும், பசுமையை அள்ளி வீசும் வயல்வெளிகளும் கண்களுக்கு விருந்து. Down Town ஏரியாவுக்கே கம்பீரத்தை அளிப்பது 19ம் நூற்றாண்டில் நடந்த போர்களில் பங்கேற்று உயிரைத் தியாகம் செய்த போர் வீரர்களுக்கான நினைவுச் சின்னம். அங்கங்கே வந்து சங்கமிக்கும் வீதிகளுக்கு வாஷிங்டன் வீதி, நியூயார்க் தெரு, மிச்சிகன் அவென்யூ என்று மற்ற அமெரிக்க நகர, மாநிலங்களின் பெயர்களைச் சூட்டியுள்ளனர்.




✱ இந்துக் கோயில்

குதிரை பூட்டிய சாரட்டை இங்கே 'Buggy' என்கிறார்கள். சாரட்டின் சாரதிகள் அநேகமாகப் பெண்கள்தான். அதில் அமர்ந்து சுற்றிப் பார்க்க உற்சாகமாய்க் கிளம்புகிறோம். 'ஓட்டுநி'கள் ஓயாமல் பேசி தரும் விளக்கங்கள் சாலை சந்தடியில் கரைந்து போகின்றன. இங்கே நடக்கும் கார் பந்தயங்களும் கால்பந்துப் போட்டிகளும் அமெரிக்கா முழுக்க பேசப்படுபவை.


✱ போர் நினைவுச் சின்னம்...

எங்கெங்கு



காணினும் ஆப்பிள்டா!

ஜெர்மன் சர்ச் ரோடில் 'மத்திய இந்தியானா இந்து கோயில் உள்ளது. உள்ளே நுழைந்தால் மிகப் பெரிய கூடம். அதன் ஒரு பக்கத்தில் ஒரே சன்னிதியில் துர்க்கை அனுமன், ராமலட்சுமண சீதாப்பிராட்டி, ராதா கிருஷ்ணன் என்று அவரவர் இஷ்ட தெய்வங்களைத் தரிசிக்கலாம். நம் ஊர் பண்டிகைகள், திருவிழாக்கள், பூஜைகள்



* 'பக்கி' வண்டிகள்

எல்லாமே கிராமப்படி நடத்தப்படுகின்றன. தசராவின் போது அழகாகக் கொலு கூட வைக்கிறார்கள். இதை விரைவில் நம்மூர் பாணி கோயிலாக்க முயற்சிகளை மேற் கொண்டுள்ளனர்!


'ஆன்ட்ரூஸ் ஆர்ச்சர்ட்ஸ்' என்கிற ஆப்பிள் தோட்டம் சுமார் 150 ஏக்கர் நிலப்பரப்பை ஆக்ரமித்துக்கொண்டு டூரிஸ்டுகளை ஈர்க்கிறது. இந்த டிரைவ் இன் ஆப்பிள் தோட்டம் 1962ல் ஆன்டர்ஸன் தம்பதிகளால் துவங்கப்பட்டது. நாம் காரில் அமர்ந்தவாறு தோட்டம் முழுக்க சுற்றிப் பார்த்து, தேவையான ரக ஆப்பிள்களை நாமே மரத்திலிருந்து பறித்து எடுத்துக்கொள்ளும் சுதந்திரம் உண்டு. உள்ளே நுழையுமுன் ஆறு டாலருக்கு பெரிய பை ஒன்றை நாம் வாங்கிக்கொள்ள வேண்டும். அதில் நிரம்பி வழிகிற அளவுக்கு ஆப்பிள்களைப் பறித்து அடைத்துக் கொள்ளலாம். ஜூலை முதல் அக்டோபர்வரை சீஸனாம். முப்பதுக்கும் மேற்பட்ட ஆப்பிள் ரகங்கள். நம்மூரில் கிடைக்கும் டெலிஷியஸ், கோல்டன், குக்கிங் ஆப்பிள்களுடன் 'ஜோனாத்தன்' கிரான்னிஸ் ஸ்மித், ஜிஞ்ஜர் கோல்ட், சென்ஷு, ஸ்கார்லெட் ப்யூட்டி எர்லி கோல்ட், லோடி, ஜெஸ்ஸி மேக் என்று நாம் கேள்விப்படாத ரகங்கள் தான் அதிகம். இங்கே ஆப்பிள்கள் கைக்கு மட்டுமல்ல வாய்க்கும் எட்டும்!

ஒவ்வொரு மரத்தடியிலும் புஷ்பங்களைப் போல் உதிர்ந்து படுக்கை விரித்திருக்கும் ஆப்பிள்களை நம்மூர் பெண்கள் பார்த்தால் 'அறுபது வகை ஆப்பிள் டிஷ்கள்' தயாரிக்கிற முறைகளை நிமிஷமாய் யோசித்து விடுவார்கள். பள்ளிகளிலிருந்து சுற்றுலாவுக்கு சின்னக் குழந்தைகளை அழைத்து வருகிறார்கள். சுற்றுலா விற்பனை மையத்தில் ஜூஸ் வகைகள், ஆப்பிள் ஜாம், கேன்டி, சாக்லேட், ஆப்பிள் பட்டர் என்று பலவித தயாரிப்புகளை வாங்கலாம். வீட்டுக்கு வந்து சேர்ந்த பின்பும், சில நாட்களுக்கு ஆப்பிள் பூ, ஆப்பிள் பழம் என அந்தத் தோட்டத்து வாசனை இலேசில் என்னை விட்டுப் போகவில்லை.



* ஆப்பிள் பெண்!

- லக்ஷ்மி ரமணன், சென்னை



அப்பனே... அப்பனே... பிள்ளையார் அப்பனே!



பண்டிகை ஸ்பெஷல்-2

சர்க்கரைப் பிள்ளையார் - திருநெல்வேலி
காப்பி விநாயகர் - திருநாட்டியத்தான்மூடி
அகத்திய விநாயகர் - மதுரை
கறுக்காத விநாயகர் - திருக்கச்சூர்
தூண்டில் விநாயகர் - ஸ்ரீவைகுண்டம்
பஞ்சமுகி விநாயகர் - நாகப்பட்டிணம்
பைரவி விநாயகர் - புதுக்கோட்டை
வயிறு வெடித்த விநாயகர் - காக்கையநல்லூர்
வெள்ளெருக்கு விநாயகர் - ஓரகடம்
கடுக்காய் விநாயகர் - திருக்கானாயில்
வல்லப விநாயகர் - ஆவுடையார் கோயில்
வெயிலுக்குகந்த விநாயகர் - திருப்புறம்பியம்
காவாணிப் பிள்ளையார் - சங்கரன்கோயில்
ஆடி வரும் பிள்ளையார் - கோயம்புத்தூர்
நாலாயிரத்தொரு விநாயகர் - திருமணிக்கூடம்
சுகம் தரும் விநாயகர் - தூத்துக்குடி
வீரஹத்தி விநாயகர் - வேதாரண்யம்
தோஷஹர விநாயகர் - குன்றக்குடி
உச்சிப் பிள்ளையார் - திருச்சி
ஓலமிட்ட விநாயகர் - திருவையாறு
தூண்டுகை விநாயகர் - திருச்செந்தூர்
பொள்ளாப் பிள்ளையார் - திருநாரையூர்
சாளக்ராம விநாயகர்- திருநல்லூர்

- எம். அமிர்தவல்லி, மதுரை

ஆர்.எஸ்.பதி மருந்து நேட்ச்ரோ



60ml Pack — Family Pack

20ml Pack — Regular Pack

5ml Pack — Roll on Pack

100 Years

- மூட்டுவலி
- முதுகுவலி
- கை கால் வலி
- தலைவலி
- ஜலதோஷம்
- சைனஸ்க்கு
- ஃப்ளூ

உடனடி நிவாரணம்

ஆர். எஸ். பதி எஸ் அன் கோ,
214-215, மேலமாசி வீதி, மதுரை-1.
Ph: 0452-2342085 Mob: 94884-62222
Eamil: rspatthys@gmail.com
www.rspatthynaturos.com

ஆர். எஸ்.பதி மருந்து நேட்ச்ரோ (தைலா) உபயோகிக்கும் முறை



குழந்தைகள் இருமலுக்கு, முதுகெலும்பின் மேலிலும், நெஞ்சக்குழியிலும் மருந்தை அடிக்கடி தேய்ப்பதுடன் தொண்டையின் மேலில் தேய்க்க வேண்டும். நெஞ்சு சளி, இருமல், தொண்டை வலி தீரும்.



தலைவலியிலிருந்து முற்றிலும் விடுபட 3அல்லது 6துளிகள் மருந்தை 2அல்லது 3 முறை நெற்றியில் தேய்க்கவும்.



அதிக தூரம் நடந்ததினாலாவது, கடின வேலையினாலாவது மற்றெந்த காரணத்தினாலாவது தேகமுழுமையும் அதிக வலியும், மண்டைக் கனமும் உண்டாகியிருந்தால் வெந்நீரில் மருந்தை விட்டு கலக்கி ஸ்நானம் செய்தால் வலி எல்லாம் தீரும்.



தேகத்தில் அடிபட்ட வீக்கம், பொறுக்கமுடியாத வலி, மற்றெந்த வீக்கமாய் இருந்தாலும் அரைச்சீசா வெந்நீரில் கால்புட்டி இந்த மருந்தை விட்டு குலுக்கி ஒரு துணியில் நனைத்து நோயுள்ள இடத்தில் அடிக்கடி போட்டு வந்தால் முற்றிலும் குணமாகும்.



தேகத்தில் எந்தவிதமான வலிநோய் உண்டானாலும் கை,கால்,முழங்கால், இடுப்புவலி மூட்டுவலிக்கு நோயுள்ள இடத்தில் மருந்தை அடிக்கடி நன்றாய்ச் சூடேறும்படி தேய்க்கவும்.



கத்தியினால் வெட்டுபட்ட காயங்கள் வெந்தபுண்கள், புரையோடுகிற ஆறாத புண்கள் யாவும் இம்மருந்தைப் போட்டவுடன் சீக்கிரம் குணமாகும்.



வீட்டில் துர்நாற்றமுள்ள இடத்தில் இம்மருந்தை தெளித்தாலும், அல்லது மரத்தூளில் கலந்து தூவி வந்தாலும், அல்லது துணியில் நனைத்து தொங்க விட்டாலும் கெட்ட நாற்றத்தைப் போக்கி சுத்தம் செய்யும். கொசு, ஈ, பூச்சிகள் முதலியவை இந்த வாசனைப்பட்டால் ஓடிவிடும்.



ஜலதோஷம், மூக்கடைப்பு, இவைகட்கு மருந்தை நோயுள்ள இடங்களில் நன்றாய்ச் சூடேறும்படி தேய்க்கவும்.



மூக்கில் சைனசுக்கு இந்த மருந்தை ஒரு துளியும் தேங்காய் எண்ணெய் மூன்று துளியும் கலந்து காலை, மாலை மூக்கில் தடவி வந்தால் நல்ல நிவாரணம் அளிக்கும். மேலும் இந்த மருந்தை சுடுதண்ணீர் பாத்திரத்தில் சிலதுளிகள் விட்டு போர்வையால் தலையை மூடியவண்ணம் ஆவிபிடித்தால் சைனஸிலிருந்து நல்ல நிவாரணம் அளிக்கும்.



பாதங்கள் வலிக்கு 1/2 வாளி சுடு தண்ணீரில் தாங்கி கொள்ளும் அளவிற்கு 5 அல்லது 10 துளி R.S. பதி மருந்து நேட்ச்ரோவை விட்டு பாதங்களை 15 நிமிடங்களுக்கு வைத்திருந்தால் பாதங்கள் வலிக்கு நல்ல நிவாரணம் கிடைக்கும்.

Now Available in Delhi Cell No.: 98683-44911

தலை வாழை



பொதுவாக நவராத்திரி வெள்ளிக்கிழமைகளில் அம்மனுக்கும், புரட்டாசி சனிக்கிழமையன்று பெருமாளுக்கும் மாவிளக்கு மாவு போடுவது வழக்கம். 'மாவிளக்கு - மகிழ்ச்சி பெருக்கு!' என்பது பழமொழி!

மாவிளக்கு மாவு

பச்சரிசியை நீரில் ஒரு மணி நேரம் ஊற விடவும். பிறகு நீரை வடித்து, உலர்ந்தத் துணியில், நிழலில், அரிசியை பத்து நிமிடங்கள் உலர வைக்கவும். சற்று ஈரபதம் இருக்கும்போதே மிக்ஸியில் பொடித்துச் சலிக்கவும். மாவை சல்லடையில் சலித்த கையோடு, உடனே இந்த 'பச்ச மாவு' செய்ய வேண்டும்.

தேவையான பொருள்கள்:

அரிசி மாவு - 1 கப்

நைசாகப் பொடித்த வெல்லம் - 1 டேபிள் ஸ்பூன் (அவரவர் இனிப்புக்கு ஏற்ப)

ஏலத்தூள் - 1 சிட்டிகை

அரிசி மாவில் நைசாகப் பொடித்த வெல்லம் சேர்த்து நன்றாகக் கலக்கவும். சிறிது தண்ணீர் தெளித்துப் பிசைந்து இரண்டு உருண்டைகளாக உருட்டவும். இதில் சிறு குழி செய்து அதில் நெய் விட்டு, திரி போட்டு விளக்கு ஏற்றவும். உருண்டையின் நான்கு பக்கமும் குங்குமம் சிறிது வைக்கவும். அம்மன் முன் தேங்காய், பழம் தாம்பூலத்துடன் வைத்து வழிபடவும்.



4 படைக்கப்பட்ட மாவிளக்கு மாவுடன், தேங்காய்த் துருவல் வாழைப் பழம் சேர்த்துச் சாப்பிட சுவை அள்ளும்!

தேவிகா காளியப்பன்

சமையல்!

கிராமிய மணம் கமழும் புத்தம் புதிய சமையல் பகுதி

ஒப்புட்டு

ஒப்புட்டு செய்வதற்கு 4 மணி நேரம் முன்னதாக மேல் மாவு செய்து வைத்து விட வேண்டும்.

மேல் மாவு செய்ய:-

கோதுமை மாவு - 1 கப்

மைதா மாவு - 2 டீஸ்பூன்

நல்லெண்ணெய் - 2 டேபிள் ஸ்பூன்

செய்முறை:

ஒரு பேசினில் கோதுமை மாவு, மைதா மாவு போட்டு, சிறிது தண்ணீர் தெளித்து தளரப் பிசையவும். பூரி மாவு, சப்பாத்தி மாவு போல இல்லாமல் தளரப் பிசையவும். பிசைந்த மாவு மேலே ரீஃபைண்டு ஆயில் அல்லது நல்லெண்ணெய் விட்டு மூடி வைக்கவும்.

பூரணம் செய்முறை:

தேங்காய்த் துருவல் - 1 கப்

பொடித்த வெல்லம் - ½ கப்

ஏலத்தூள் - 1 சிட்டிகை

செய்முறை:

தேங்காய்த் துருவலை தண்ணீர் விடாமல் மிக்ஸியில் நைசாக அரைக்கவும். பிறகு பொடித்த வெல்லம் ஏலத்தூள் போட்டு கெட்டியாக அரைக்கவும்.

இந்த அரைத்த விழுதை, கடாயில் போட்டு 5 நிமிடம் ஈரப்பதம் வற்றும் வரை கிளறவும். பிறகு கீழே இறக்கி, ஆறியவுடன் எலுமிச்சம் பழ அளவு உருண்டைகளாக உருட்டவும்.

ஒரு வாழை இலையில் நெய் தடவி மேல் மாவு சிறிது எடுத்து கையினால் பரவலாகத் தட்டவும். உள்ளே தேங்காய் பூரணத்தை வைத்து மாவினால் மூடி உள்ளங் கைகளால் பரவலாகத் தட்டவும். இலேசாகவும் தட்டலாம். கனமாகவும் தட்டலாம். இது அவரவர் விரப்பம்.

சூடான தோசைக்கல்லில் இலையுடன் எடுத்து ஒப்புட்டைப் போட்டு, இலையை மெதுவாக நீக்கி விடவும். சுற்றிலும் எண்ணெய்விட்டு நிதானமானத் தீயில் திருப்பிப் போட்டு எடுக்கவும்.

உருக்கிய நெய்யோ, பாதாம் பாலோ விட்டுச் சாப்பிட, ஒப்புட்டு ருசியை சொல்லி மாளாது.

'ஒப்புட்டு' இல்லாத பண்டிகை தினமா? இதை எந்த இனிப்புடனும் ஒப்பிட முடியுமா?





நவராத்திரி ஸ்பெஷல் சுண்டல் 1

சோளம், தட்டைப் பயறு சுண்டல்

தேவையான பொருட்கள்:

சுத்தம் செய்த சோளம் - 1 கப்
தட்டைப் பயறு (காராமணி) - ¼ கப்
நறுக்கிய வெங்காயம் - ¼ கப்
பச்சை மிளகாய் - 3
கடுகு - 1 டீஸ்பூன்
உளுத்தம் பருப்பு - 2 டீஸ்பூன்
கறிவேப்பிலை - சிறிது
எண்ணெய் - தேவைக்கு
உப்பு - தேவைக்கு
மஞ்சள் தூள் - சிறிது
கருவடகம் - 1 டேபுள் ஸ்பூன்

செய்முறை:

வெள்ளை சோளத்தில் சிறிது தண்ணீர் தெளித்து மிக்ஸியில் இரண்டு முறை விட்டு விட்டு இலேசாகச் சுற்றினால் தோல் நீங்கி விடும். பிறகு சோளத்தில் 2 முறை தண்ணீர் விட்டுக் கழுவவும். பிறகு குக்கரில் சோளம், தட்டைப் பயறில் தேவையான தண்ணீர் விட்டுக் தனித்தனியே கிண்ணத்தில் போட்டு ஐந்து விசில் விட்டு 'சிம்'மில் ஐந்து நிமிடம் வைத்து வேக வைக்கவும். வெந்ததும் எஞ்சிய நீரை வடிக்கவும். கடாயில் எண்ணெய் விட்டு கடுகு, உளுத்தம் பருப்பு தாளித்து, கருவடகம் போட்டு சிவக்க வறுக்கவும். வெங்காயம், பச்சை மிளகாய், கறிவேப்பிலை போட்டு வதக்கவும். பிறகு வேக வைத்த சோளம், தட்டைப் பயறு, உப்பு, மஞ்சள் தூள் போட்டு நன்றாகக் கிளறி, கொத்தமல்லி தழை தூவி இறக்கி சூடாகப் பரிமாறவும்.

அரிசி வடை

தேவையான பொருள்கள்:

இட்லி புழுங்கல் அரிசி - 1 கப்
துவரம் பருப்பு - ½ கப்
பொடியாக நறுக்கிய வெங்காயம் - 2 கப்
மல்லி - 2 டீஸ்பூன்
வரமிளகாய் - 4 (அவரவர் காரத்துக்கு ஏற்ப)
கறிவேப்பிலை - சிறிது
இஞ்சி - 1 துண்டு
உப்பு - ருசிக்கு
எண்ணெய் -
கொத்துமல்லி தழை- தேவைக்கு

செய்முறை:

அரிசி, பருப்பை நீரில் கழுவி 2 மணி நேரம் நீரில் ஊற வைக்கவும். நீரை வடித்து விட்டு அரிசி, பருப்புடன் வர மிளகாய், மல்லி,



கறிவேப்பிலை, இஞ்சி, உப்பு சேர்த்து தண்ணீர் தெளித்து, ரவை போல கரகரப்பாக அரைக்கவும். அரிசி அரைபட்டவுடன் அரிந்த வெங்காயம் சேர்த்து ஒரு சுற்று சுற்றி விடவும். வெங்காயம் ஒன்றிரண்டாக இருந்தால் தான் வடை மொறு மொறுப்பாக இருக்கும். வெங்காயம் நைசாக அரைபடக் கூடாது.

அரைத்த மாவை எடுத்த பின் கொத்தமல்லி தழையைப் பொடியாக அரிந்து கலக்கவும். சூடான எண்ணெயில் மெலிதான வடைகளாகத் தட்டி போட்டு பொன் னிறமாகப் பொரிக்கவும். சூடாகப்பரிமாறவும்.

இதற்குத் தொட்டு கொள்ள சட்னி தேவை யானவை. ரசம், தயிர் இருந்தால்கூட போதும். மொறு மொறுவென்று சுடச்சுட வடை சாப்பிட் டால் ருசியோ ருசி.

நவராத்திரி பண்டிகை தின விருந்தை தடபுடலாக்கி விடும் இந்த அரிசி வடை!

நவராத்திரி சூப்பர் ஸ்பெஷல் சுண்டல் 2



மசாலா வேர்கடலை சுண்டல்

தேவையான பொருள்கள்:

பச்சை வேர்க்கடலை - 1 கப்
தனியா - 1 டீஸ்பூன்
கடலைப் பருப்பு - 2 டீஸ்பூன்
வர மிளகாய் - 2
கறிவேப்பிலை - சிறிது
தாளிக்க - எண்ணெய்
நெய் - சிறிது
பெருங்காயம் - சிறிது
கடுகு - 1 டீஸ்பூன்
உளுத்தம் பருப்பு - 2 டீஸ்பூன்
உப்பு - தேவைக்கு

செய்முறை:

வேர்க்கடலையை நீரில் மூன்று மணி நேரம் ஊற வைக்கவும். பிறகு குக்கரில் வேர்க்கடலையைப் போட்டு தேவையான தண்ணீர் விட்டு நான்கு விசில் விட்டு வேக வைக்கவும். மிகுதி நீரை வடிக் கவும். கடாயில் சிறிது நெய் விட்டு கடலைப் பருப்பு, தனியா, வர மிளகாய், பெருங்காயம் வறுத்துப் பொடிக்கவும்.

அடி கனமான கடாயில் எண்ணெய் விட்டு, கடுகு, உளுத்தம் பருப்பு, கறிவேப்பிலை தாளித்து வேக வைத்த வேர்க்கடலையைப் போட்டு பொடித்த மசாலாப் பொடியைத் தூவி, உப்பு சேர்த்து நன்றாகக் கலக்கவும். வெகு சுவையான மசாலா சுண்டல் ரெடி!

(விருந்து தொடரும்)



தேங்காய்
பர்ஃபி செய்ய தேங்காய்த் துருவல் ஒரு கப் என்றால் சர்க்கரை ஒரு கப், நெய் அரை கப் ஊற்றிப் பாருங்கள்; பர்ஃபி அருமையாக இருக்கும்.

- வீ.சுமதி ராகவன், திருப்பத்தூர்



ஃபெவிகால் ஒட்டுவதற்கு எடுத்து மூடி வைப்போம். அடுத்தமுறை உபயோகிக்கும்போது மேல் பக்கம் ஆடை போல் கெட்டியாகியிருக்கும். நீண்ட நாட்களுக்குப் பின் திறந்து பார்த்தால் முழுவதுமே கெட்டியாகி வீணாகிவிடும். இதைத் தடுக்க, ஃபெவிக்காலை ஒருமுறை உபயோகித்தவுடன் அது மூழ்கும்படி மேலே சிறிது தண்ணீர் ஊற்றி வைக்கவும். அப்போது கெட்டியாகாமல் இருக்கும்.

- ராஜி, சாத்தூர்

சப்பாத்திக்கு மாவு பிசையும்போது இரண்டு காரட்டைத் துருவி, மிக்ஸியில் அடித்து விழுதாக்கி, மாவுடன் கலந்துப் பிசையவும். சப்பாத்தியும் மென்மையாக வரும். சுவையும் சத்தும் கூடும்.

- தி. பழனீஸ்வரி தினகரன், சென்னை

வறுத்த தேங்காய்த் துருவல், ஏலக்காய் இவற்றை மிக்ஸியில் தூளாக்கி அத்துடன் நன்கு வறுத்த சேமியாவைப் பொடியாக நொறுக்கிப் போட்டு, வறுத்த முந்திரியையும் ஒடித்துப் போட்டுக் கலந்து வைத்துக் கொண்டால் விருந்தினர் வந்ததும் கொதி நீரில் ஒரு கரண்டி எடுத்துப் போட்டுக் கிளறி, சூடான பாலும் ஒரு ஸ்பூன் நெய்யும் விட்டுக் கலந்து சட்டென்று நிமிடத்தில் பாயசம் செய்து விடலாம்.

- சீதாலக்ஷ்மி, கொல்லம்

விருந்தினர் வரும் நாளன்று, கொலுவின் பார்க்கில், சென்ட்டை ஸ்பிரே செய்தால், புதிய நறுமணம், மனத்தை மகிழ வைக்கும்.

- என்.கோமதி, நெல்லை - 7

செம்பருத்திப் பூவைத் தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்தால் டிகாக்ஷன் போன்ற நிறம் வரும். இதில் தேவையான அளவு சர்க்கரை சேர்த்து, தினமும் குடித்து வந்தால் இருதய சம்பந்தப்பட்ட நோய்கள் வராது.

- எஸ். மனலோசினி, திருத்தங்கல்

சுவாமிப் படங்களை சாதாரண நீர் கொண்டு துடைக்காமல் பன்னீர் கலந்த நீரினாலோ அல்லது கற்பூரம் கரைத்த நீரினாலோ துடைத்தால் பூச்சி அர்த்து வீணாகாமல் நீண்டநாள் பாதுகாக்கலாம்.

- வி. ஸ்ரீவித்யா பிரசாத், கும்பகோணம்

இவை எல்லாமே ஆஹா 50 தான்!





வீட்டுச் சாவிக் கொத்தின் மாற்றுச் சாவிகளை அலுவலகத்திலும் அலுவலகச் சாவிகளின் மாற்றுச் சாவிகளை வீட்டிலும் வைத்துக்கொண்டால் நெருக்கடி சமயங்களில் உதவியாக இருக்கும்.

-என். ராமதாஸ், ஜாம்ஷெட்பூர்

போளி தட்டும்போது வாழை இலையின் பின்பக்கமாகத் தட்டினால் மெல்லியதாக வரும்.

- வி. ஸ்ரீவித்யா பிரசாத், கும்பகோணம்

ஊறுகாய் கிண்ணத்தில் ஸ்பூனுக்குப் பதிலாக சிறிய ஃபோர்க்குகளை உபயோகிக்கலாம். இதனால் ஊறுகாயுடன் எண்ணையும் சேர்ந்து வராமல் ஊறுகாயிலே தங்கிவிடும்.

- கே. லலிதா, கோவை

நாம் தினப்படி உபயோகிக்கும் சர்க்கரை பாட்டிலில் எறும்பு வந்துவிட்டால், வெங்காயம், உருளைக்கிழங்கு வைத்திருக்கும் தட்டில், பாட்டிலைத் திறந்து வைத்துவிடுங்கள். சில மணி நேரங்களில் எறும்பெல்லாம் மாயமாய் மறைந்து போயிருக்கும்.

- டி.ஸ்ரீமதி, திருநகர்

தரையில் எலுமிச்சைச் சாறு பட்டு தரை வெள்ளையாக மாறியிருந்தால், அதன் மீது பூசணிக்காயை நறுக்கி தேய்க்கவும். கறை உடனடியாக நீங்கி விடும்.

- இரா. சுப்புலட்சுமி, ஆத்தூர்

தோசைக்கு மிளகாய்ப் பொடி அரைக்கும்போது ஒரு டீஸ்பூன் சீரகத்தை வறுத்து, சேர்த்து அரைக்கவும். வாசனையாக இருப்பதோடு, எளிதில் செரிமானம் ஆகும்.

- டி. நிர்மலா தேவி, மதுரை

நவராத்திரி பண்டிகைகளின் ஏதாவது ஒரு நாளில், கோதுமைப் பாயசத்தை நைவேத்தியமாக செய்வது அம்பாளுக்கு மிகவும் விசேஷமானது.

- எஸ். ருக்மணி, சென்னை - 91

சுவாமி படங்களைக் கண்ணாடி ஃப்ரேம் போடாமல், லேமினேஷன் செய்வதுதான் நல்லது. பூச்சி அரிக்காது. துடைப்பது சுலபம். அதிக எடை இருக்காது. வெளியூர் மாற்றலாகிப் போகும்போது உடையாமலும் இருக்கும்.


- ஆர். ரெங்கநாயகி, கொல்கத்தா

இவை எல்லாமே ஆஹா 50 தான்!

ஜெயஸ்ரீ ராஜ் நினைவுச் சிறுகதைப் போட்டி ரூ.7.500 இரண்டாம் பரிசுக் கதை

அம்மாசிக் கிழவன் தோளில் சுமந்து வந்த வெள்ளாட்டுக் குட்டியை இறக்கிவிட்டு மற்ற ஆடுகளையும் விரட்டினான். வழக்கப்பட்ட மரத்தடியில் படுத்த ஆட்டு மந்தை, வயிறார மேய்ந்த புல்லை அரைக்கண் மூடி அசை போட்டது.

அம்மாசிக் கிழவனுக்கு கொஞ்ச நாட்களாகவே மனசு சரியில்லை. கம்பீரமாகக் காட்சியளிக்கும் மலைத் தொடரை நிமிர்ந்து பார்த்தான். கொஞ்ச நாட்களாக மரங்கள் திடீரென்று காணாமல் போகின்றன. காட்டிலாக்கா அதிகாரி அந்த இடத்தைச் சுற்றி வேலி போட வைக்கிறார். காரணம் கேட்டால் சொல்ல மறுக்கிறார். மலையில் அங்காங்கு இருக்கும் சந்தன மரங்களைப் பற்றி அம்மாசிக்குப் பெருங் கவலை.. அவற்றை பெண் குழந்தையாக மலை வாழ் மக்கள் நேசிப்



பார்கள். சந்தன மரம் தன்னுடைய இயல்பான மணத்தைப் பெற பதின்மூன்று பதினைந்து வருடங்கள்வரை ஆகும் என்று அவர்களுக்குத் தெரியும். அதை பெண் பூப்பெய்தும் சடங்காகக் கருதி மரத்துக்கு விசேஷப் பூஜை நடத்துவார்கள். இயற்கையிடம் அத்தனை பிரேமை, பக்தி.

சில்லென்ற நீர்த்திவலைகளை அருவியிலிருந்து அள்ளி வந்த காற்று பனித்தூவலாய் அம்மாசியை வருட, அவன் யோசனையிலிருந்து மீண்டான். மலையில் அங்காங்கு வெள்ளிக் கம்பியாய் இறங்கும் அருவிகளை தினந்தோறும் பார்த்தாலும் அலுக்காத காட்சி. காற்றோடு வந்த பால் பிடித்த சோளக் கதிர்களின் வாசம் மகிழ்ச்சியைத் தந்தாலும் இந்த வாழ்க்கை நீடிக்குமா என்ற கவலையும் கூடவே எழுந்தது அம்மாசிக்கு.

சமீப காலமாக யார் யாரோ பெரிய மனிதர்கள் வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள்.



• பத்மா •



காடும் மலையும் எங்கள் கூட்டம்!

கோட்டு சூட்டுப் போட்டவர்கள் எல்லாம் அவர்களுக்குப் பெரிய மனிதர்கள். மலையை அங்குமிங்கும் அளப்பதும் பாறையை உடைப்பதும் மண்ணை எடுத்துக்கொண்டு போவதும் மலைவாசிகளுக்குப் புரியாத பாஷையில் பேசினாலும் தங்களுக்குப் பொருந்தாத ஏதோ ஒன்று நடக்கப் போவதின் முன்னறிவிப்பு என்று அம்மாசியின் உள்ளுணர்வுக்குத் தெரிந்தது.

வயதில் முதியவன், அனுபவசாலி, சுலபமாகப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பவன் என்ற முறையில் அம்மாசிக் கிழவன், அந்த மலை வாழ் மக்களின் தலைவனாக மதிக்கப்பட்டு வந்தான். ஒருநாள் வெள்ளையும் சொள்ளையுமாக இருந்த இரண்டு பெரிய மனிதர்களுடன் வந்த காட்டிலாக்கா அதிகாரி, மலை வாழ் மக்களின் மொழி தெரிந்தவர் சொன்னதைக் கேட்டதிலிருந்து அம்மாசிக்கு பயங்கரக் கோபமும் மன வருத்தமும்.

''காலம் காலமா எங்களைப் போன்ற சனங்களுக்கும் கணக்கேயில்லாத ஜீவராசிகளுக்கும் பெத்தத் தாயா இருந்து காப்பாத்திட்டு வர இந்த மலையை எந்தக் கேடும் செய்யாம, நம்ம பெரியவங்க நமக்கு ஒப்படைச்ச மாதிரி நம் வருங்கால சந்ததிகளுக்கு நாமும் அப்படியே ஒப்படைப்பதுதான் முறை, கடமை. எங்கள் உயிர் இருக்கும்வரை இந்த மலையையும் காட்டையையும் காப்பாற்றப் போராடுவோம்.'' அம்மாசிக் கிழவன் சாட்டையடியாகப் பேச, காட்டிலாக்கா அதிகாரி வந்தவர்களுக்கு மொழி பெயர்த்தார்.

''போலீசையும், துப்பாக்கியையும் பார்த்தால் இவங்க வீராப்பெல்லாம் பறந்துடும். பயந்து ஓடுவாங்க. இவங்களை மிரட்டித்தான் காலி பண்ண வைக்க முடியும்'' என்று அதிகாரி யோசனை சொல்ல, வந்திருந்த அதிகாரிகள் இடத்தைக் காலி செய்தனர்.

அன்று இரவே அம்மாசி நிலா வெளிச்சத்தில் தன் சனங்களை ஒன்று கூட்டினான். ''அடேய், நாம எல்லோரும் இனிமே சோத்தோடு மண்ணையும் சேரத்துத்தான் தின்னப் போறோம். புரியும் படியாச் சொல்றேன். இந்த மலைக்குள்ளே ஏதோ உயர்ந்த தாதுப்பொருள் இருக்காம். அது எங்கெங்கோ புதைஞ்சு கிடக்குன்னு கண்டுபிடிக்க இதுக்குன்னே பெரிய்...ய படிப்பு படிச்ச வெளிநாட்டுக்காரன் வந்துருக்கான். அவன் சரின்னு தலையாட்டிட்டான்னா மலையை வேட்டு வெச்சு உடைப்பாங்க! ஆயிரம் ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கப் போகுதாம். காடு



கடையில் வாங்கும் சுண்டைக் காய் வற்றலை, தண்ணீரில் போட்டு அலசவும். பிறகு புளித்த மோரில் ஊற வைத்துக் காய வைத்து வறுத்தால், அபார ருசி கிடைக்கும். அதிகப் படியான உப்பும் தண்ணீரில் போய்விடும்.


– எஸ்.லக்ஷ்மி, சென்னை





வெளி மாநிலங்களுக்குச் செல்லும் போது அங்கு ஆட்டோவிலோ பஸ்ஸிலோ பயணம் செய்ய நேரிடும். நாம் ஒருவருக்கொருவர் சொந்த விஷயங்களை, பண விஷயங்களைப் பேசக் கூடாது. 'வட நாடுதானே? தமிழ் புரியாதே!' என்று நினைக்க வேண்டாம். வட நாட்டிலும் ஆட்டோ டிரைவர் அல்லது பஸ்ஸில் சகப் பயணிகள் தமிழ் தெரிந்தவர்களாக இருக்கலாம் அல்லவா?

- சுந்தரி நாகராஜன், ஜாம்ஷெட்பூர்



மொத்தமும் அழிச்சுடுவாங்க போலிருக்கு. அதனால நாம நம்ம இடத்தைக் காலி பண்ணிடணுமாம். நம்ம பிழைப்புக்கு அரசாங்கம் ஏதாவது வழி செய்யுமாம்.

"இந்த மலையும் காடும்தான் நமக்குத் தெரிந்தவை. இவை நம்மைப் பெற்ற தாய். பெற்ற தாய் நம் கண் முன்னாலே கொலை செய்யப்படுவதை, பார்த்து சகிச்சிட்டிருப்பீங்களா சொல்லுங்கடா?" என்று அம்மாசி ஆவேசத்தோடு கத்தினான்.

"அனுமதிக்க மாட்டோம்' என்று ஒரே குரலில் ஒத்துழைக்க அம்மாசிக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால், இடைத்தரகர்களாலும் படித்த மேதைகளின் சூழ்ச்சி வலையிலும் தாங்கள் விழாமல் இருக்க வேண்டுமே என்ற கவலையும் இருந்தது.

அம்மாசி மனம் தளரவில்லை. பிரச்னைகள் பெரிதாக வரும்போது, தாங்கள் குல தெய்வமாக வழிபடும் ஒரு மரத்தடியில், பௌர்ணமியன்று இரவுப் பூசை நடத்தி, கோரிக்கையைச் சமர்ப்பித்தால் நிச்சயமாக சாதகமாகத் தீர்வு கிடைக்கும் என்பது மலைவாழ் மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. அம்மாசி, பூசை அறிவிப்பு விடுத்தான். மொத்த மக்களும் குழந்தைகள் உட்பட மரத்தடியில் கூடி விட்டார்கள்.

புரியாத மொழியில் பாட்டும் வாத்தியங்களின் வினோத ஒலியும் இரவின் அமைதியில் துல்லியமாய்க் கேட்க, ஓர் ஈர்ப்பில் அதிகாரியுடன் வெளிநாட்டு துரையும் அந்த இடத்துக்கு வந்தார். மரத்தைச் சுற்றி சோளக் கதிர்கள், மலைத்தேன், காய்கனிகள், மூலிகைகள், இன்னும் எத்தனையோ பொருள்கள் படையலாகக் குவிந்திருக்கக் கூடியிருந்தவர்கள் கருவிகளை இசைத்துப் பாடிக் கொண்டிருந்தனர்.

நடு நடுவே அம்மாசிக் கிழவன், தன் இரண்டு கைகளையும் உயர்த்தி, மரத்திடம் ஏதோ பேசிக் கொண்டிருந்தான். மரத்தோடு மனிதன் பேசுவது வினோதமாகத் தெரிய அந்த வெளிநாட்டுக்காரன் அதிகாரியிடம் அம்மாசியின் பேச்சை மொழி பெயர்க்கச் சொன்னார்.

'இந்த மலையும் காடும் எத்தனையோ சந்ததிகளை வளர்க்கப் போகிற தாய். அவள் அழிவதை எங்களால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எங்கள் உடன் பிறப்புகளான மரம், செடி, கொடிகள், சுருள்கொம்பு ஆடு, காட்டுப்பன்றி, வெள்ளி மீன்கள், பஞ்சு மேகம், அருவிகள் எல்லாம் மலை மற்றும் காட்டோடு சேர்ந்து அழிவார்கள். உடன் பிறப்புகளை

விட்டு ஓடும் சுய நலமிகளல்ல நாங்கள். மனிதனுக்கு இயற்கையைப் போற்றும் நல்ல புத்தி கொடு. அது அளிக்கும் கொடை நிரந்தரமானது என்று புரியவை, எங்களைக் காப்பாற்று தாயே.''

அம்மாசி மரத்திடம் வைத்த கோரிக்கையை அதிகாரி மொழி பெயர்க்க, அதே சமயம் அம்மாசி மரத்தை அணைத்துக் கொண்டு கண்ணீர் வடிக்க, கூட்டமும் மண்டியிட்டு கைகளை உயர்த்தி விம்ம, அந்தக் காட்சி அயல் நாட்டானையே உலுக்கியது.

''இவர்களுக்கு மூட நம்பிக்கை அதிகம். எப்படியும் இரண்டொரு மாதங்களில் முடிவாகி வேலை தொடங்கினால் இவர்கள் இந்த இடத்தைக் காலி செய்தே ஆக வேண்டும். இவர்கள் இன்னமும் இந்த மரம், மலையையும் காட்டையும் காப்பாற்றித் தரும் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள்'' என்று அதிகாரி முடித்தார்.

பூசை முடிந்து ஒரு வாரத்துக்கெல்லாம் அம்மாசி அவசரக் கூட்டம் கூட்டினான். ''அடேய் விஷயம் தெரியுமா? நம்ம மரச்சாமி நம்ம கோரிக்கையை ஏத்துக்கிட்டு நல்லபடியா முடிச்சிடுச்சு. பூசையன்னைக்கு வந்தாரே பெரிய அதிகாரி, அவர் மலையைக் கடைசியா பரிசோதிச்சுப் பார்த்துட்டு, ''மலையில் புதைந்து கிடக்கும் தாதுப் பொருளை எடுக்க ஆகும் செலவு ரொம்ப அதிகமாகும். ஆகும் செலவை ஈடு கட்டும் அளவுக்கு லாபம் கிடைக்காது. அதனால் இந்த முயற்சியைத் தவிர்ப்பதுதான் நல்லதுன்னு முடிவா எழுதிட்டாராம்.

''அதனாலே நம்ம மலைக்கும் காட்டுக்கும் இனி எந்தச் சேதமும் வராது.''

அம்மாசி முடிக்கும் முன்பே, கூட்டம் ஆனந்தத்தில் அம்மாசியைத் தூக்கிக்கொண்டு ஓடி, மரத்தைக் கட்டி அணைத்து, அழுது, சிரித்து, தங்கள் நன்றியை வெளிப்படுத்தியது.

''மனிதன் இயற்கையைப் படைக்கவில்லை. அது உயிர் வாழ் இனங்களின் நன்மைக்காகத் தோன்றிய ஒன்று. அதை அனுபவிக்கும் உரிமை மட்டும்தான் மனிதனுக்கு உண்டு. கைம்மாறாக அதைப் பாதுகாப்பது அவன் கடமை. அதன் மீது ஆதிக்கம் செலுத்தினால் அழிவு நிச்சயம். அதற்கு சுனாமியில் மொத்தக் குடும்பத்தையும் இழந்து தனித்து நிற்கும் நான் ஒரு சிறு சாட்சி. 'இயற்கையை சரணடைந்து வாழ்வதுதான் நியாயம்' என்பதை உணர்த்திய மலை வாசிகளுக்கு நன்றி. இயற்கையைப் பகுத்தறிந்து சோதிக்கும் இந்தப் பதவியிலிருந்து விலகுகிறேன்.''

பூசையன்று இரவு, அந்த அதிகாரி தன் டயரியில் எழுதிய வரிகள் இவை என்பது அவருக்கு மட்டுமே தெரியும்.



எந்த வகை சூப் செய்வதாக இருந்தாலும் பிரெட்டை பொரித்து அலங்கரிப்பதற்குப் பதிலாக, ரஸ்கை இரண்டு மூன்று துண்டுகளாக உடைத்து பரிமாறும்போது ருசியாக இருக்கும்.

- ஆர். தங்கராஜ்,
திருப்பூர்



தரமான வைர நகைகளுக்கு....

T.R. JOSHI & SONS

"Sharada Vilas" 39, Ekambareswarar Agraharam,
Park Town, Chennai - 600 003.
Phone : 044-2535 6596, 2642 6754 Cell : 98840 20170

Residence : "Sri Gopi", New No. 10 (Old No.6) Barnaby Avenue, Off Barnaby Road, Kilpauk, Chennai - 600 010
E-mail : vsjoshi@trjoshiandsons.com

WE HAVE NO BRANCHES



சாய்சரண் முதியோர் இல்லம்

ஒருவரது வாழ்நாளின் முதுமை கட்டத்தில் அவர்கட்கு தேவைப்படும் ஆதரவும், இன்முகமும், பாசமும் கொண்ட பணிவிடையை செய்யும் வகையில் உண்டாக்கப்பட்டது "சாய் சரண் டிரஸ்ட்" அத்தகைய பெரியோர்களை கவனித்துக்கொள்ள. உங்கள் ஆதரவை வரவேற்பதன் மூலம் இந்த அமைப்பின் சீரிய செயல்பாட்டை மேன்மையடையச் செய்ய விழைகிறோம். இல்லத்திற்கு தேவையான பொருட்கள், நன்கொடைகளை "SAICHARAN TRUST" க்கு அனுப்பி வைக்கவும்.

சுபயாத்ரா




ஷிரிடி சாயிபாபா தரிசனம்

ஷிரிடி - சனி சிங்கனாப்பூர்
மஹாகணபதி (4 நாட்கள்)
(ரயில் - பஸ் - தங்கும் வசதி)

15-9-10	29-9-10
6-10-10	20-10-10

ரூ.2800/-



ஷிரிடி பாபா தரிசனம்
ஒரே நாளில்
(விமானம் மூலம்)

ஷிரிடி உங்கள் தேதியில்
(4 நாட்கள்)
(3 நபர்) ரூ.10,500/-
ரயில், கார், தங்கும் வசதி

விவரங்களுக்கு : 43, தெற்கு மாட வீதி (சித்திரகுளம் எதிரில்), மயிலாப்பூர், சென்னை-4
போன் : 24950218, 24952319 e-mail : shubhyatra.m@gmail.com

சௌபாக்யம் தரும்
சிவ சக்தி சக்கரம்!



நவராத்திரியில் பூஜிக்க...



சிவ சக்தி அல்லது கௌரி சங்கர சக்கரம், இதை முறைப்படி பூஜித்து வந்தால், மங்கள காரியங்கள் விரைவில் நடைபெறும். வாழ்வில் உயர் பதவி, பெரும் புகழ், செல்வம் விரும்புபவர்கள் இந்தச் சக்கரத்தை அவசியம் பூஜிக்க வேண்டும்.

பூஜிக்கும் முறை: சக்தி வேறு, சிவன் வேறு அல்ல. பொதுவாக தேவியை வழிபட்டுத்தான் சக்கரத்தின் மூலம் நன்மை பெறுவார்கள். ஆனால் சிவபெருமானையும் பார்வதி தேவியையும் வணங்கி இந்தச் சக்கரத்தை வழிபடுவதுதான் இந்த சிவசக்தி சக்கரம். இதை எந்த நாளில் வேண்டுமானாலும் பூஜிக்கலாம். ஆனால் நவராத்திரி, சிவராத்திகளில் பூஜை செய்வது இன்னும் சிறப்பு.

'ஓம் சம்போ மஹாதேவாய சக்தி ஸ்வரூபாய
கௌரி நாதாய சதாசிவாய நமோ நமஹ'

என்ற இந்த மந்திரத்தை 108 முறை உச்சரித்து, பால் பாயசம், பஞ்சாமிர்தம், சர்க்கரைப் பொங்கல் இவற்றில் ஏதேனும் நிவேதித்துப் பூஜை செய்யலாம். காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் அருளிய இந்த மங்கள ஸ்தோத்திரத்தையும் கூறலாம்.

சிவோ யோ நாம ரூபாப்யாம் தேவீ யா சர்வ மங்களா
தயோ ஸம்ஸ் பும்ஸ்வாம் ஸர்வ திக் ஜய மங்களம்

இதன் பொருள்: பெயரால் மட்டுமன்றி உருவத்தாலும் மங்களகரமான சிவனையும், சர்வ மங்களங்களையும் தரும் தேவியையும் வணங்குபவர்கள் எல்லா நிலைகளிலும் மங்களமடைவார்கள். எனவே கௌரி சங்கர சக்கரத்தை பூஜிப்பவர்கள், பல நன்மைகளை அடைவார்கள் என்பது நிச்சயம். அரிசி மாவில் கால் படாத சுவாமி இடத்தில் அல்லது பித்தளைத் தாம்பாளத்தில் வரைந்து பூஜை செய்யலாம்.

- சரஸ்வதி இராமசாமி,
கோயமுத்தூர்

ரோஜா மலரே

சந்திப்பு : எஸ்.சந்திரமௌலி

'கலாட்டா கல்யாணம்' படத்தின் பாடல் காட்சி சென்னை அண்ணாநகர் டவரில் நடந்தது. கூட்டத்தில் சிலர் சினிமா நடிகைகளைப் பற்றி ரசனைக் குறைவாக கமெண்ட் அடித்தார்கள். அப்போதுதான் ஆச்சி ரியாக்ஷன் பார்த்து ஆச்சரியமடைந்தேன் என்று சொல்லியிருந்தேனே நினைவிருக்கிறதா? அப்பப்பா ஆச்சிக்கு எவ்ளோ கோபம் வந்தது தெரியுமா? அவங்



* படம்: ஸ்ரீஹரி

களைப் பாத்துப் பேசினாங்க பாருங்க. அடுத்த நிமிடம், அப்படி தவறாகப் பேசினவங்க, தங்கள் செயலுக்காக மன்னிப்புக் கேட்டாங்க. அதுக்கப்புறம் ஆச்சி மேலே எனக்கு இன்னும் மரியாதை அதிகமாச்சு.

எழுத்தாளர் பி.வி.ஆர். 'கல்கி'யில் தன்னுடைய 'நீரோட்டம்' நாவலை நாடகமாக மேடை ஏற்றியபோது, அதில் வரும் சாருங்கற 'துறு துறு' பெண் கேரக்டர்ல நான் நடிச்சேன். சினிமாவில் காமெடி ராணியாக, நான் மிகப் பாப்புலராக இருந்தாலும் நாடகத்தில் எனக்கு சீரியசான ரோல். சென்னை சபாக்களின் எலைட் ஆடியன்ஸ் அதை ஏற்றுக்கொண்டாலும், வெளியூர்களில் என் சீரியஸ் நடிப்பு எடுபடவில்லை. அதனால், நானும் கொஞ்ச நாளைக்கு நாடகம் வேணாம்னு முடிவு செஞ்சேன்.

1970களில் பாலசந்தர் சார், சோ, மேஜர், ஒய்.ஜி.பி போன்ற ஜாம்பவான்கள் எல்லாம் நாடகக் குழுக்கள் நடத்திக் கொண்டிருந்தனர். அந்தச் சமயத்தில் வாணி கலா மந்திர் என்கிற அமெச்சூர் நாடகக் குழுவினர், என்னை தங்கள் குழுவில் நடிக்க கூப்பிட்டனர். சினிமாக் காரங்க நடித்தால், நாடகங்களுக்கு சென்னை சபாக்களிலும், வெளியூர் களிலும் சுலபமாகத் தேதி வாங்கிவிடலாம் என்ற நிலைமை அப்போ இருந்தது. ஒய்.ஜி.பி.யின் குழுவுக்காக 'ஃப்ளைட் 172' நாடகம் எழுதிக் கொடுத்து பாப்புலராக இருந்த மௌலியை எங்களுக்கு ஒரு நாடகம் எழுதித் தரச் சொல்லி அதற்கு, பூஜையும் நடந்தது. அப்போது ஒய்.ஜி.பி. யின் குழுவில் நடித்துக்கொண்டிருந்த

சச்சுவின் அச்சுவெல்லத் தொடர் 12

ஏ.ஆர்.எஸ். எங்கள் நாடகத்தை இயக்கித் தரச் சம்மதித்தார். ஆனால், மௌலியால் குறித்த காலத்துக்குள் நாடகம் எழுதிக் கொடுக்க முடியவில்லை. அப்போது, ஏ.ஆர்.எஸ்ஸால் ''ரொம்ப திறமையான யங் ரைட்டர்'' என எங்களுக்கு அறிமுகப் படுத்தி வைக்கப்பட்டவர்தான் விசு. 'தேவியர் இருவர்' என்ற விசுவின் நாடகத்தில் எனக்கு சீரியஸ், காமெடி என்று டபுள் ரோல். அதற்கப்புறம் விசு எங்களுக் கெழுதிய 'சுஜாதா', 'பஞ்ச பூதங்கள்', 'கனவு கண்டேன் கண்ணா' ன்னு எல்லா நாடகங்களுமே பெரிய ஹிட்!

வழக்கமான வீடு செட் இல்லாமல் ஒரு கார்டன் செட் போட்டு நடத்திய நாடகம்தான் வெங்கட் எழுதிய 'மெழுகு பொம்மைகள்'. கலைவாணர் அரங்கத்தில் அந்த நாடகத்தைப் பார்த்த டைரக்டர் திருலோக்சந்தருக்கு கதை ரொம்பப் பிடிக்கவும், ''இந்தக் கதையை நான் சினிமாவா எடுக்கப் போறேன்''ன்னு சொன்னார். எங்க எல்லோருக்கும் ரொம்ப சந்தோஷம். ஆனா, ''இந்த நாடகத்தை இனிமேல் போடாமல் இருங்க'' என்றதும், ஏராளமான சபாக்களுக்கு தேதி கொடுத்திருந்த நாங்கள், அதிர்ந்து போனோம். அது மட்டுமில்லாமல் நாடகத்துக்கான செட், ஸ்பெஷல் எஃபெக்ட், பைலட் காஸ்டியூம் என்று (அன்றைய தேதியில்) பதினைந்தாயிரம் ரூபாய் செலவு ஆகியிருந்தது. அப்புறம் அவரோடு பேசி, படத்தின் ஷூட்டிங் முடிகிறவரை நாடகத்தை நடத்த அனுமதி வாங்கினோம். அந்தப் படம்தான் சிவாஜி நடித்த 'பைலட் பிரேம்நாத்'. நாடகத்துல நான்

ராஜகுமாரி!

நடிச்ச பார்வை இல்லாத மகள் வேடத்துல சினிமாவுல ஸ்ரீதேவி நடிச்சாங்க. ''சில பேர் நாடகத்துல நீங்க ரொம்ப நல்லா நடிக்கறீங்க. சினிமாவுலகூட உங்களையே நடிக்க வெச்சிருக்கலாம்''னு சொல்லிப் பாராட்டிங்க. பாவம்! அவங்களுக்கு மேடை நாடகம் வேறு; சினிமா மார்க்கெட் வேறுன்னு தெரியலை!



* அதிகாரம் செய்யும் மாமியாராக...

எங்களுக்காக வெங்கட் எழுதின நாடகம் 'சக்கரம் சுழல்கிறது'. முதியோர் பற்றிய நாடகம். நாடகத்தைப் பார்த்துவிட்டு மனம் நெகிழ்ந்த சாவித்திரி வைத்தி அம்மா, தான் நடத்தி வரும் விஸ்ராந்தி முதியோர் இல்லத்துக்கே வந்து நாடகத்தை நடத்தணும்னு கேட்டார். விஸ்ராந்தி இல்லத்துக்குப் போய் நாடகம் போட்டதும் அங்கே இருந்த பாட்டிகள் எல்லோரும் மனம் நெகிழ்ந்து கண் கலங்கி பாராட்டியது எனக்கு ஆயுசுக்கும் மறக்காது.

பெற்ற குழந்தைகள் வளர்ந்து, தனிக்குடித்தனம் போகிறபோது அதைப் பார்த்து மனம் ஒடிந்து போகாமல், வயதான கணவனும், மனைவியும் தங்கள் வாழ்க்கையைத் தனிமையில் தொடரும் சோகத்தைச் சுட்டிக் காட்டியது 'தோப்பில் ஒரு தனிமரம்' என்ற நாடகம். வாணி மகாலில் அந்த நாடகத்தைப் பார்த்த ஒரு முதிய தம்பதி, நாடகம் முடிந்ததும் என்னையும், ஏ.ஆர்.எஸ்.ஐயும் பாராட்டிவிட்டு, ''எங்க கண்ணைத் திறந்து வெச்சீங்க!''ன்னு சொல்லி, 'தடால்' என்று எங்கள் காலில் விழுந்தது எங்களைப் பேரதிர்ச்சிக்குள்ளாக்கியது.

டி.வி பிரபலமான போது, அதில் பல நாடகங்களில் நடிச்சேன். அதன் மூலமா கிடைச்ச வீச்சு அபாரமானது. நான் டி.வி.யில நடிச்ச முதல் சீரியல் 'தினேஷ் - கணேஷ்'. ஜெயஸ்ரீ பிக்சர்ஸ் எஸ்.வி. ரமணன் ஊட்டிக்குப் போய் பத்து நாள் ஷூட் பண்ணின சீரியல் அது. நானும் வெண்ணிற ஆடை மூர்த்தியும் ஜோடி. தவிர டெல்லி கணேஷ், காத்தாடி, ரவி ராகவேந்தர், சுலக்ஷணா எல்லோரும் நடிச்சாங்க. கோவை அனுராதாவின் 'காஸ்ட்லி மாப்பிள்ளை' சீரியல்ல எனக்கு அதிகாரம் பண்ணும் மாமியார்



* திறமையான யங் ரைட்டர்...

ரோல். ரொம்ப டிமாண்டிங் கேரக்டர்.

அமெரிக்காவிலேயே எடுக்கப்பட்ட சீரியல், சாவி எழுதின 'வாஷிங்டனில் திருமணம்'. அது சீரியலாக எடுக்கப்பட்டபோது, அதற்கேற்ப சித்ராலயா கோபு, ஸ்கிரிப்ட்டில் சில மாற்றங்களைச் செய்தார். ஆனந்தவிகடனில் வெளியான அந்தக் கதையைப் படித்து ரசிச்சிருக்கேன். அப்புறம் மேடையில் நாடகமாக நடிக்கப்பட்டபோது பார்த்து ரசிச்சிருக்கேன். நாடகத்தில் ஜானவாச காரையே மேடையில் கொண்டு வருவாங்க. அமெரிக்காவில் ஷூட்டிங்கிற்காக மடிசார் புடைவை கட்டிக்கொண்டு நான் நடந்தபோது, என்னை ஆச்சரியமாகப் பார்க்காதவர்கள் இல்லை. அதுல எனக்கு நடிக்க வாய்ப்பு கிடைத்தது பெரிய பாக்கியம்.



✱ 'ஆனந்த பவன்' சீரியலில்...

எனக்கு சின்னத்திரையில் பெரிய அளவில் பெயர் வாங்கிக் கொடுத்த இன்னொரு கேரக்டர், பாக்கியம் ராமசாமி உருவாக்கிய பிரபலமான (அப்புசாமி) சீதாபாட்டி கேரக்டர். அது டீ.வி சீரியலாக எடுக்கப்பட்டபோது அப்புசாமியாக வெண்ணிற ஆடை மூர்த்தி நடிக்க, நான் அவருக்கு ஜோடி. மற்ற குறிப்பிடத்தக்க சீரியல்களில் 'அலை ஓசை', 'இப்படிக்கு தென்றல்', 'ஆனந்த பவன்', 'மாண்புமிகு மாமியார்' போன்றவற்றுக்கும் இடமுண்டு.



சினிமாவில் என் மீது காமெடி முத்திரை அழுத்தமாகக் குத்தப்பட்டு வந்தாலும், சந்தர்ப்பம் கிடைத்தால் ஒரு சிறந்த குணச்சித்திர நடிகையாக என்னால் பரிமளிக்க முடியும்னு நிரூபிக்க எனக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்த சீரியல் 'மாண்புமிகு மாமியார்'. என் திறமைக்கு அங்கீகாரமாக எனக்கு இதுவரை பெரிய அளவில் பரிசுகள், விருதுகள் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால், மைலாப்பூர் அகாடமி, 'மாண்பு மிகு மாமியார்' தொடருக்காக எனக்கு 'சிறந்த நடிகை' விருது கொடுத்து கௌரவித்தது.

என் கடைசி மூச்சு உள்ளவரை என் நடிப்புத் திறமையைக் காட்டணும் என்பதுதான் என் ஆசை. என்னோட சினிமா, நாடக, டீ.வி, அனுபவங்களை 'மங்கையர் மலர்' மூலமா உங்களோட பகிர்ந்துகொண்டது என் மனசுக்கு ரொம்ப நிறைவா இருக்கு!''

(- அச்சுவெல்லம் நிறைந்தது.)

serene

Retire to begin life.

Covai Property Centre - A brand nar
synonymous with trust and quality

- For the past nine years, Covai Property Centre has developed over 750,000 sq.ft of residential and commercial properties in Coimbatore, one of the finest cities in Tamilnadu.
- Promoted by an ex-serviceman, Covai Property Centre is characterized by professionalism, credibility and transparency.
- The company has won the 'MOST ECO-FRIENDLY GATED COMMUNITY AWARD' for the past two years in succession.



Launching

Serene Pelican

- Pondicherry

Serene Pelican at Pondicherry is on the same concept of Serene Living projects. Located near Mahatma Gandhi Hospital on Cuddalore Road, the project will have 423 exquisitely designed villas for people above 50 years of age. Serene Pelican is designed to project cohesiveness of cross-cultural amalgamation of South Indian, French and Ashram Architecture.

Destination Serene Pelican

Designed for those who want to spend their retirement in the lap of nature with comfort and care

Spread over 18 acres with about 1.40 acres reserved for common amenities

Located close to Mahatma Gandhi Medical College and Hospital

Excellent Specifications with Special Building Codes to suit senior living

Design Options:

Multiple Options in Villas ranging from single, two and three bedrooms. Title is free hold, subject to certain condi

Plot size varies from 1200 to 2400 sq ft.

Villas vary from 517 sq ft to 1676 sq ft

Cost of villas range from Rs.16 to 46.50 lacs with outstanding infrastructure and amenities.*

For more details, visit ou

Senior Care Beyond Compare

SOUNDARYAM @ IDIGARAI

ur experience in creating and managing care of Senior Citizens in Coimbatore, has taken us to the next level. We nderstand the concept of senior care. We match care with service and our facilities are NOT OLD AGE HOMES.

▸▸▸ Project Highlights ▸▸▸

Soundaryam @ Idigarai in Coimbatore is spread over five acres and is 3 kms from Thudiyalur on Mettupalayam Road in Coimbatore.

Surrounded by hills in the distance, pristine and eco friendly atmosphere

Studio Apartment (583 sq ft) 2BHK (890 to 1000 sq ft), 3BHK (1429 sq ft) & Villas (1612 sq ft & 1676 sq ft)

Excellent infrastructure to include Roads, Walkways, Green Belt, Storm water drains, Street Lights, RO Water, Sewage Treatment Plant, Solar Water Heaters, Tree-lined avenues and Landscaped Gardens etc

Affordable cost of Rs.18.10 lacs, 37.60 lacs, 44.30 lacs, 55.15 lacs for Studio, 2BHK, 3BHK apartments and three bedroom villas respectively

Cost includes everything except registration and Service Tax

No Hidden Cost

▸▸▸ Facilities ▸▸▸

- Modern Club House with Lounge, Dining Room, Reading Room, Card & TV Room, Indoor Games, Kitchen, Pantry, Lift, Ramp, etc.
- Medical Centre with Ambulance
- Activity Centre
- Quarters for staff
- Guest Houses
- Resident Manager
- 24X7 Security
- Amenities include Open Air Theatre, Reading Room, access to Assisted Care Centre, Centre for Alzheimer being made available at Soundaryam Comfort Homes. Stand-by Generator for Common areas and lifts. UPS for Villas and apartments.



COVAI®
PROPERTY CENTRE
(INDIA) PRIVATE LIMITED

Covai Property Centre (India) Private Limited

727, Damu Nagar, Puliyakulam Main Road, Coimbatore - 641 045.
Phone : Coimbatore - 0422-2312367, 0422-6572625, 98943 17841
Chennai - 044-24463063 (Ms Gita Ramesh)

site : www.covaiprop.com



அது ஒரு முருகன் கோயில். சொற்பொழிவாளர் அன்பர் ஒருவர் கோயிலுக்குச் சென்றார். அர்ச்சகர் தீபாராதனை செய்ததும் அர்ச்சனைத் தட்டில் காசு போட்டார். தன் ஊர் திரும்பி விட்டார்.

என்ன ஆச்சர்யம்? அவர் அர்ச்சனைத் தட்டில் போட்ட காசு ஒரு சில தினங்கள் கழித்து மணியார்டரில் திரும்பி வந்துவிட்டது. அந்த அன்பருக்கோ ஒன்றும் புரியவில்லை. ஏன் திரும்பி வந்தது?

அந்த அன்பர் விசாரித்தார். அங்குள்ள ஆலய அர்ச்சகரின் கனவில் முருகன் வந்து ''தட்டில் போட்ட காசு போதும் என்று நினைத்தானா? அவன்தான் இந்த ஆலயத் திருப்பணியைச் செய்ய வேண்டும். காசைத் திருப்பி அனுப்பி விடுங்கள்'' என்று கூறியிருந்த விவரம் தெரிய வந்தது.

அந்தக் கோயில் எது, அந்த அன்பர் யார், என்று அறிய ஆவலாக இருக்கிறதா?

அந்தக் கோயில்தான் குமார வயலூர். அந்த அன்பர்தான் குமார வயலூருக்கும் பின்னாளில் ஏகப்பட்ட கோயில்களுக்கும் திருப்பணிகள் செய்த குகஸ்ரீ கிருபானந்த வாரியார் ஸ்வாமிகள்.

குமார வயலூர் குமரப் பெருமான், சாமான்ய தெய்வம் இல்லை. தன் கோயில் திருப்பணியை வாரியார் ஸ்வாமிகளைத் தேர்ந்தெடுத்துச் செய்து கொண்டவன்.

தன் கோயில் திருப்பணிதான் செய்யப்பட்டு விட்டதே என்றில்லாமல் வாரியார் ஸ்வாமிகளை பல கோயில்களுக்குத் திருப்பணிகளைச் செய்ய வைத்தவன் இந்த வயலூர் பெருமான்.

லக்ஷ்மி ராஜரத்னம்

அழகன்





கந்தவேள் பக்தி உலா... 6

முருகனிடம்...

ஐம்முகச் சிவனும், ஆறு முகச் சிவனும் ஒருங்கே அமைந்துள்ளது இத் தலத்தின் மகிமை. இத்தலத்தின் ராஜ கோபுரம் கம்பீரமாக ஐந்து நிலைகளுடன் நம்மை வரவேற்கிறது. நுழை வாயிலின் இடதுபுறம் வன்னி மரம், தல விருட்ச மாக பிரம்மாண்டமாகக் காணப்படுகிறது.

ராஜ கோபுரத்தை அடுத்த மண்டபத் தில் நந்தி, கொடி மரம், பலிபீடம் ஆகியவை இருக்கின்றன. வலதுபுறம் அன்னை ஆதிநாயகியின் சன்னிதி இருக்கிறது. அன்னை நின்ற கோலத்தில் அருள் பாலிப்பது கொள்ளை அழகு. அர்த்த மண்டபத்தைக் கடந்தால் கருவறை யில் ஆதிநாதர், லிங்கத் திருமேனியாகக் காட்சியளிக்கிறார்.

இந்த ஆதிநாதர் இங்கே கோயில் கொண்ட வரலாறு மிகவும் சுவையா னது.

சோழ மன்னர்களின் புராதன மான தலைநகரம் உறையூர் என்பது அனை வரும் அறிந்த விஷயம். உறையூருக்கு மேற்கே அமைந்துள்ள தற்போதைய வயலூர் பகுதி பெரிய காடாக இருந்தது.

அப்பொழுது காட்டு விலங்குகளால் பயிர்களுக்கும், மக்களுக்கும் துன்பம் ஏற் பட்டது. மக்களைக் காக்க மன்னன் விலங்குகளை வேட்டையாடினான். களைத்துப் போனான். சுற்றும் முற்றும் பார்த்தான். நன்றாக விளைந்த கரும்பு இருந்தது. அது மூன்று கிளைகளாகப் பிரிந்திருந்ததை மன்னன் கவனிக்க வில்லை.

நீர் வேட்கையால் அவசரமாகக் கரும்பை ஒடித்து, வாயில் வைத்துக் கடித் தான். கரும்புச் சாறல்லவா வர வேண்டும்? மாறாக இரத்தம் வழிந்தது. இதைக் கண்ட மன்னன் அலறினான். காவலர்களை அழைத்து கரும்பு வளர்ந்த இடத்தின் அடியில் தோண்டச் செய்தான்.

சிவலிங்கம் இருப்பதைக் கண்டான். முக்கிளையின் அடியில் முக்கண்ணன் இருப்பதைத் தாம் கவனிக்காமல் போனதை எண்ணி வருந்தினான். உடனே அங்கேயே ஆலயம் அமைக்க ஏற்பாடு செய்தான். இவர்தான் அக்னீஸ்வரர்.

அக்னீஸ்வரர் சன்னிதியைச் சுற்றியே பிராகாரம் செல்கிறது. இங்கு ஒரே ஒரு பிராகாரம்தான். அம்மையப்பரை வணங் கிய பின்னரே முருகனை வழிபட வேண்



டும் என்ற தத்துவத்தை உணர்த்துவது போல் அமைந்துள்ளது.அம்மையப்பருக்குப் பின்னால் குமாரப் பெருமான், தேவிகளுடன் கோயில் கொண்டுள்ளார். இது ஏன்?

உலகிற்கெல்லாம் ஓதுவிக்கிற சிவ பெருமானையே சீடனாக வைத்து உபதேசித்தவர் குமாரப் பெருமான், ஞான பண்டித ஸ்வாமி என்றாலும் தந்தையையே சீடனாக வைத்து உபதேசித்து விட்டோமே என்ற பழி தீர, அம்மையப்பரை வழிபட நினைத்து இத்தலத்துக்கு வந்தார்.

வேலாயுதத்தினால் தீர்த்தம் உண்டாக்கி தாய் - தந்தையரைக் கும்பிட்டார். இதன் காரணமாகவே முருக பக்தர்கள் இத்தலத்தை 'குமார வயலூர்' என்று அழைக்கிறார்கள்.

வயலூர் அருள்மிகு சுப்ரமண்ய ஸ்வாமி ஒரு முகத்துடன் நான்கு திருக்கரங்களுடன் வள்ளி - தெய்வயானை சமேதராகத் தரிசனம் தருகிறார். மயில் வாகனம் தெய்வயானையின் பக்கமாகத் திரும்பியுள்ளது ஒரு சிறப்பான அம்சம்.

சித்தர்கள் தேடி வந்து முக்தியடையும் இடம் வயலூர் முருகன் சன்னிதி. சூரியன், சந்திரன், அக்னி ஆகிய மூன்று சுடர்களும் இத்தல முருகனை வழிபட்டு பேறுகள் பெற்றதாக அருணகிரி நாதர் கூறுகிறார்.


ஆலயங்களில் குடி கொண்டிருக்கும் ஆண்டவனைத் தேடி பக்தர்கள் போவதுதான் வழக்கம். ஆனால் அடியவரை ஆண்டவனே தன் கோயிலுக்கு 'வா'வென்று அழைத்தது அற்புதச் செயல் அல்லவா! தனது புது அடியவரான அருணகிரிநாதரை வயலூர் ஆண்டவன் அழைத்து அற்புதம் நிகழ்த்தினான்.

''அருணகிரிநாத பெருமானுக்குத் திருவண்ணாமலையில் முருகன் 'முத்தைத் தரு' என்று திருப்புகழுக்கு அடி எடுத்துக் கொடுத்ததும், அருணகிரி நாதர் பாடி முடித்தார். முருக பெருமான், அருணகிரி நாதரின் முன்பு மீண்டும்தோன்றினார்.

''அருணகிரி, ஏன் இன்னும் திருப்புகழ் பாடவில்லை?'' என்று கேட்டார்.

திருப்புகழ் என்பது ஒரு பாடல் மட்டுமில்லை. பல பாடல்கள் கொண்டு தொடுக்கப்பட்ட மாலை. இதை அச்சமயம் அருணகிரிநாதர் அறியவில்லை.

''தாங்கள் அடி எடுத்துக் கொடுத்ததும்



ஆடி அழைக்குதே!

'ஆடி அழைக்கும்; தை துடைக்கும்!' இது என் மாமியார் சொல்லும் பழமொழி. இதன் பொருள் ஆடி பிறந்தது முதல் பண்டிகைகள் தொடங்கி விடும். மார்கழி முடிந்து, தை பிறந்ததும் மகர சங்கராந்தியுடன் அனைத்துப் பண்டிகைகளும் முடிந்துவிடும்.

- காயத்ரி ஆர். கார்த்திக், திருச்சி

ஸ்ரீ திருஷ்டிப் பிள்ளையார் துதி!



ஓங்கார ரூபம், மூஷிக வாகனப் பிரியம்!
பிரஸன்ன வதனம், வந்தே ஸித்தி விநாயகம்!!
விஸ்வக்சேனம், சங்கு - சக்கரம் தேவம்!
விஷ்ணு ரூபம் வரப்பிரஸாதிம்!!
சக்தி ஸ்வரூபம் சூலகஸ்தம், பாசாங்குசம்!
அபயஹஸ்தம் வந்தே விக்ன விநாயகம்!!
மேக வர்ணம் திரி நேத்ரம் சிவம்!
கதா ஹஸ்தம் பிரணமாமசயகம்!!

- வி.பூமாதேவி, பெங்களூரு

பாடி விட்டேன். மேலும் பாடும் தன்மையை அறியேன் ஐயனே'' என்றார்.

அன்றிரவே கந்த பெருமான் கனவில் வந்து, ''அருணகிரி, வயலூர் வா'' என்று பணித்தார்.

அருணகிரிநாதர் வயலூர் வந்தார். பொய்யா கணபதி முன்பு மீண்டும் திருப்புகழ் பாடல் மலர்ந்தது. ''வக்கரை விசித்ர மணி'' என்ற திருப்புகழில் -

''செய்பதியும் வைத்துயர்தி ருப்புகழ்வி ருப்பமொடு
செப்பென எனக்கருள்கை மறவேனே''

என்று தெரிவிக்கிறார்.

'கைத்தல நின்றகனி' என்ற விநாயகர் துதித் திருப்புகழ் பொய்யா கணபதியை வைத்து முதலில் பாடப் பெற்றது. இதன் பின்னரே அருணகிரி நாதர் மேலே நிறையத் திருப்புகழ் பாடல்களைப் பாடியுள்ளார்.

திருப்புகழில் அக்னீஸ்வரரையும், பொய்யாகணபதியையும் -

''அருளின் சீர்பொ யாத கணபதி
திருவக் கீசன் வாழும் வயலியி
னழகுக் கோயில் மீதில் மருவிய
பெருமாளே'' என்று குறிப்பிட்டுள்ளார்.

வயலூர் உற்சவர் பெயர் முத்துக் குமார ஸ்வாமி. இவர் மிகவும் அழகும், கலை நயமும் கொண்டவர்.

இத் தலத்து நவக்கிரக சன்னிதியில் ஸ்ரீ சூரியன், தனது தேவியர் உஷாதேவி, சாயாதேவியுடன் மேற்கு நோக்கிக் காணப்படுகிறார். மற்ற எட்டு கிரகங்களும் சூரிய மூர்த்தியை நோக்கியுள்ளனர். நவக்கிரக தோஷம் உள்ளவர்கள் பரிகாரம் செய்ய வேண்டி வருகிறார்கள்.

திருமண தோஷம் அகல முருகனுக்கு வள்ளி - தெய்வயானையுடன் திருக்கல்யாணம் செய்து வைக்கிறார்கள். இங்குள்ள தீர்த்தம் பிணி தீர்க்கும் சக்தியுடையது. இதன் வடபாகத்தில் உள்ள இரும்பினால் செய்யப்பட்டுள்ள குமர வேலுக்கு ஆராதனை செய்கிறார்கள்.

ஆறு கால பூஜை தினமும் நடைபெறுகிறது. காலை ஆறு மணி முதல் மதியம் 1 மணிவரையில் மாலை 3.30 மணி முதல் இரவு 9 மணி வரை சன்னிதி திறந்திருக்கும்.

தமிழ் புது வருடப் பிறப்பு, வைகாசி விசாகம் 12 நாட்கள், ஆடி கிருத்திகை, பௌர்ணமி, விநாயக சதுர்த்தி, கந்த ஷஷ்டி ஆறு தினங்கள், தைப்பூசம், பங்குனி உத்திரம் மற்றும் மாதாந்திர கிருத்திகை, ஷஷ்டி, பிரதோஷம் ஆகிய நாட்கள் விசேஷமானவை. வயலூர் சென்று வாழ்வில் வளம் பெறலாமே!

(வலம் வருவோம்)

தாண்டியா

நவராத்திரி விழாவை ஆடல் பாடல்களுடன் கோலாகலமாகக் கொண்டாடுவது குஜராத்தியர் வழக்கம். நாடெங்கும் பெருவிழா; வீசியெறிந்த வைரக் கற்கள், கதிரவனின் ஒளிபட்டு மின்னுவதுபோல வீதியெங்கும் வண்ண வண்ண விளக்குகள்; தெருவெங்கும் தென்றலாடும் தோரணங்கள்; ஆலயங்கள்தோறும் 'பளிச்'சென்ற வெளிச்சம் என குஜராத் பூமியெங்கும் கோலாகலமாகத் திகழும்.

பிரபலமான 'கார்பா', 'டிப்பாணி,', 'மதுக்கதி' போன்ற கிராமிய நடனங்களை, இந்த நவராத்திரி விழாவின்போது ஆடுவார்கள்.

குஜராத் மக்கள், நவராத்திரி விழாவை, 'அஸ்வினி மாதம்', 'அம்பாஜி பூஜை' என்று அழைப்பர். 'அம்பாஜி என்ற துர்க்கை வடிவினாளான பெண் தெய்வத்தைத் தங்களின் அன்னையாகக் கருதி, கடுமையான விரதமிருந்து, மதச் சடங்குகளின் அடிப்படையில் மரியாதை செலுத்தி, இரவு நேரங்களில் அருமையான ஆடலும், இனிமையான பாடலுமாக ஆடிப் பாடுவதை ஒரு சடங்காகச் செய்து வருகின்றனர்.

ஒரு சிறுமியை 'மாதாஜி' என்று அம்பாளாக முன் வைத்து, அவள் கையில் ஒரு தீபத்தைக் கொடுத்து ஓரிடத்தில் நிற்கச் செய்வார்கள். சிங்கார ரூபத்தின் விளக்கொளியில் அச் சிறு பெண்ணின் முகம், திருக்கோயில் தெய்வம் போல இருக்கும். பொட்டு வைத்து, பூ முடித்து பட்டாடை உடுத்திய அச்சிறு பெண் பட்டுப் பூச்சியாக பறந்தும், நெளிந்தும், வளைந்தும், சின்னச் சின்ன ஆட்டமொன்றை சிங்காரமாக ஆடும். இதுவே நவராத்திரி விழாவின் தொடக்கமாகக் கருதப்படும்.





ஆட்டமும் ஆட!



அச் சிறுமியைச் சுற்றிப் பெண்கள் வட்டமாகக் கூடி நின்று கோலாட்டம், கும்மியாட்டம் ஆடுவார்கள். இசையோடு இணைந்து ராகம், ராகத்தோடு சேர்ந்த தாளம், மிகவும் அற்புதமாக இருக்கும். பெண்கள் மட்டும் ஆடும் இந்த நடனம் முடிந்த பின்பே, ஆண்களும் கலந்து கொண்டு ஆடுவார்கள். 'டாண்டியா'





நடனமாடும் நவராத்திரி

என்ற தாள நடனமும், 'கர்பா' என்ற அற்புத நடனமும் பிரசித்தி பெற்றவை. இந்த நடனம் மெதுவாக ஆரம்பித்து, போகப் போக வேகம் அதிகரித்து உச்ச கட்டத்தில் அப்படியே நிறுத்தி விடுவார்கள். இந்த உச்சகட்ட ஆட்டம் நம்மை அப்படியே பிரமிக்க வைக்கும்.

பதின்மூன்றாவது நாள் இரவு, 'மாண்வி' என்ற கம்பீர நடனத்துடன், நடன நிகழ்ச்சி முடிவடையும். பதினான்காம் நாள் காலை, அம்பாளுக்கு ஆரத்தி எடுத்து, விழா இனிதே நிறைவு செய்யப்படும். ஆட்டம், பாட்டமோ, அமைதியான கொலு வழிபாடோ, எப்படியானாலும், நவராத்திரி நாட்களில் அம்பிகைப் பூஜிக்கப்படுவதும், அவள் அருள் வேண்டுவதும், மனமார்ந்ததாக இருந்தால் போதும். அம்பிகை அன்னையாய்க் காப்பாள்!

-கே. ஆனந்தவல்லி, சென்னை



பயத்தம் பருப்பு சுண்டல் குழையாமல் வர வேண்டுமா? பயத்தம் பருப்பை இரண்டு மணி நேரம் ஊற வைக்கவும். கொதிக்கும் வெந்நீரை கீழே இறக்கி ஊறிய பருப்பை போட்டு மூடி வைத்தால், பதினைந்து நிமிடத்தில் பூவாக மலர்ந்து விடும். பிறகு தாளித்தால் குழையாது. ஒன்றோடு ஒன்றும் ஒட்டாது.

- கே. ஆனந்தவல்லி, சென்னை



காலில் ஆணியா? அம்மாம் பச்சரிசி என்ற மூலிகையின் காம்புப் பகுதியை ஒடித்தால் பால் வரும். தினமும் இந்தப் பாலை இரவு படுக்கப் போகும் போது கால் ஆணியில் தடவி வந்தால், கால் ஆணி மிருதுவாகி நாளடைவில் மறைந்துவிடும்.

- ஜி.கே.எஸ். பரிமளாமூர்த்தி, கோபிசெட்டிபாளையம்

நொச்சி இலையை வதக்கி அதனுடன் உப்புத் தூவி, சூடு பொறுக்குமளவு நெற்றியில் பற்று போட்டால் தலைபாரம், தலை வலி போய்விடும்.

- கே.கவிதா, குரும்பாளையம்

பாகற்காயை நறுக்கி, அரிசி களைந்த நீரில் ஊற வைத்து, பிறகு சமைத்தால் துளியும் கசக்காது.

- ஆர்.பிரகாசம், நல்லாலம்

மாவு, மோர் இரண்டும் அதிகம் புளித்துவிட்டால், தண்ணீர் ஊற்றி கலக்கி, தெளியவிடவும். அரை மணி நேரம் கழித்து தெளிந்த நீரைக் கொட்டினால், மாவு அதிகம் புளிக்காமல் நன்றாக இருக்கும்.

- கே.ராகவி, வந்தவாசி

வீட்டில் பல்லிகள் பாடாய்ப் படுத்துகிறா? பல்லிகள், நடமாடும் இடங்களில் வெங்காயத்துண்டைபோட்டு வைத்தால், பல்லித் தொல்லை நீங்கி விடும்.

- ஆர்.கே.சுந்தரூபி, மேலகிருஷ்ணன்புதூர்

ஆவாரை இலைகளை நிழலில் உலர்த்தி, பொடி செய்து கொள்ளவும். தினமும் ஒரு டீஸ்பூன் வெந்நீரில் இந்தப் பொடியை கலந்து குடிக்க நீரிழிவு நோய் குணமடையும்.

சு. கண்ணகி, மிட்டூர்

சாத்துக்குடி ஜூஸ் செய்யும்போது சர்க்கரையுடன் சிறிது உப்பு சேர்த்தால் ருசி மிகுதியாக இருக்கும். தொண்டை கரகரப்பும் ஏற்படாது.

- பானு சுரேஷ், சென்னை

லஸ்ஸியில் இனிப்பு சேர்த்துதான் பருக வேண்டும் என்றில்லை. அதில் உப்பு, மிளகுத்தூள், இஞ்சி, கறிவேப்பிலை சேர்த்துப் பருகினால் ஜீரணத்துக்கு நல்லது.

- டி. உமாமகேஸ்வரி, திருவெண்காடு

இவை எல்லாமே ஆஹா 50 தான்!



செப்டெம்பர் மாதம் எப்படி?

துல்லியமான கணிப்புகளும், எளிய பரிகாரங்களும்!



கணித்து வழங்குபவர் :
சுவாமி கண்ணன் பட்டாச்சார்யா

குரு		சந்திரன்	கேது
	1.9.2010 அன்று ராசி கிரகநிலை		
			சூரியன் புதன்
ராகு		சுக்ரன்	சனி செவ்வாய்

கிரக நிலை

மேஷம்

(அஸ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)

இந்த மாதம் ராசி நாதன் செவ்வாய் அனுகூலமாக சஞ்சரித்தாலும் மறைமுக எதிர்ப்புகள் இருக்கக் கூடும்.



வழக்கமான புன்னகையுடன் நிதானமாக நடந்து கொண்டால் போதுமானது. தொழிற்பிரிவினர் உழைப்புக்கேற்ற ஊதியம் பெறுவதில் தடையேதும் இராது. கலைஞர்களுக்கு ஓரிரு புதிய வாய்ப்புகள் அமைந்தாலும் சக கலைஞர்களின் போட்டிகளையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றம், பதவி உயர்வு ஏற்படாது. உயர் அதிகாரிகளின் ஆதரவால் மறைமுக வருமானம் உண்டு. பிறமொழி பேசுபவர்களிடம் வெளிப்படையாக பேசுவதைத் தவிர்ப்பது அவசியம். நிதி நிறுவனங்களில் எதிர்பாராத கடன் உதவி கிடைக்கக்கூடும். மகளிருக்கு மகன் அல்லது மகளது திருமணப் பேச்சால், சிறு மனக்குழப்பம் ஏற்பட்டாலும் நிவர்த்தியாகும். மாணவமணிகளின் போக்கு அவர் தம் பெற்றோர்க்கு மகிழ்ச்சியைத் தரும்.

பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்னையில் சிக்கல் ஏற்படலாம் என்பதால் தகுதியான நபர்களிடமே வரவு, செலவு வைத்துக் கொள்வது நல்லது. வியாபாரம் நல்லபடியாகவே நடைபெற்று வரும். மாத இறுதியில் சுபச் செய்திகள் வரும்.

பரிகாரம்: செவ்வாய், வெள்ளிக்கிழமை தோறும் துர்க்கைக்கு தீபமேற்றி வழிபட்டு வாருங்கள். உங்கள் வாழ்வில் சுபிட்சம் ஏற்படும்.

ரிஷபம்

(கார்த்திகை, 2,3,4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிஷம் 1,2ஆம் பாதங்கள்)

இந்த மாதம் உங்களுக்கு சதுர்த்த கேந்திரத்தில் சூரியபுதன் சேர்ந்து சஞ்சரிப்பதால் கவலைகளிலிருந்து மீண்டு, உற்சாகமாக ஈடுபடுவீர்கள். வாடிக்கையாளர்களின் தொடர்பு பெருகி வியாபாரம் திருப்திகரமாகவே நடக்கும்.



தொழிற்பிரிவினர் போட்டிகள் இருந்தாலும் தொழிலாளர்களின் ஒத்துழைப்பால் அவற்றைச் சமாளித்து, வளர்ச்சிப் பாதையில் செல்வீர்கள். அரசியல்வாதிகள் வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தி வந்தால் போதுமானது. உத்தியோகஸ்தர்கள், சகப்பணியாளர்களின் ஒத்துழைப்பை வேண்டி, உங்கள் வேலைப் பளுவைக் குறைத்துக் கொள்ள முடியும்.

குழந்தைகளின் ஆயத்த ஆடைகள், மளிகைப் பொருள்கள் வியாபாரம் மிகுந்த லாபம் தரும். கூர்மையான ஆயுதங்கள், மின்சார உபகரணங்களின் தொகுப்பு ஆகியவற்றின் அருகில் பணியாற்றுவோர் மிகுந்த கவனத்துடன் இருப்பது நல்லது.

பெண்கள் மகிழ்ச்சியடைவார்கள். நோயால் அவதிப்படுபவர்கள் மருந்துகளை உட்கொள்வதில் அலட்சியம் காட்டாமல் கவனமாக இருந்து வருவது அவசியம்.

பரிகாரம்: நவக்கிரக சன்னிதியில் உள்ள அங்காரக பகவானை தினமும் வணங்கி வாருங்கள். உங்கள் வாழ்வில் வளமும் நலமும் பெருகும்.

மிதுனம்

(மிருகசீரிஷம் 3,4ஆம் பாதங்கள், திருவாதிரை புனர் பூசம் 1,2,3ஆம் பாதங்கள்)

இந்த மாதம் ராசிநாதன் புதனும் சூரியனும் மூன்றாம் இடத்திலும் மாத கடைசியில் புதன் உச்சம் பெற்று சஞ்சரிப்பதும் நற்பலன்களைப் பெருமளவில் கொண்டுவந்து சேர்க்கும். இடையில் ஓரிரு சங்கடங்களும் உண்டாகும். பிரிந்திருந்த தம்பதியர் சேர்ந்து வாழும் சந்தர்ப்பம் ஏற்படும். வெளிநாடுகளில் வேலை தேடும் முயற்சியில் ஈடுபட்டிருந்தவர்கள் சாதகமான நிலையை எதிர்பார்க்கலாம். பணம் கொடுக்கல், வாங்கலில் மிகவும் எச்சரிக்கையாக இருப்பது அவசியம். பெண்கள் சேமிப்பில் கவனம் செலுத்துவது அவசியம்.



நண்பர்களுடன் வீண் விவாதத்தில் ஈடுபட வேண்டாம். கடன் கொடுப்பதையும், கடனுக்கு ஜாமீன் கையெழுத்து போடுவதையும் அவசியம் தவிர்க்கவும். மாணவமணிகளுக்கு படிப்பில் ஈடுபாடு உண்டு. அதே நேரம் பொருள்களில் கவனம் தேவை. ஆசிரியர் பணி செய்வோருக்கு எதிர்பார்த்த உயர்வு உண்டு.

உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம், பதவி உயர்வு, போன்ற நன்மைகளை அடைந்து மகிழ்வார்கள். சிலர் குடியிருக்கும் வீட்டை மாற்ற நேரிடலாம். உறவினர் வருகையால் மனம் களிப்படையும்.

பரிகாரம்: நீங்கள் தினமும் ஸ்ரீராம ஜெயம் எழுதி வாருங்கள். அனுமன் ஸ்லோகங்களையும் சொல்லி வாருங்கள். உங்கள் வாழ்வில் சகல முன்னேற்றங்களும் உண்டாகும்.

கடகம்

(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயில்யம்)

இந்த மாதம் சதுர்த்த கேந்திரத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரனால் சிறு சிறு சங்கடங்களைச் சந்திக்க நேரும். பொறுமையாக இருந்தால் பெரும்பாலான சிக்கல்களைத் தவிர்த்து விட முடியும்.



கடுமையான முயற்சிகளை மேற்கொண்டால் அரசு வழியில் எதிர்பார்த்த சில நன்மைகளைப் பெற முடியும். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெற்று, பொருளாதார முன்னேற்றம் அடைவார்கள்.

மாணவ மணிகள் கல்வியில் அதிக ஈடுபாடு காட்டுவதோடு போட்டிகளிலும் வெற்றி பெறுவர். உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம், பதவி உயர்வு போன்றவற்றைப் பெறுவீர்கள்.

பெண்கள், குடும்ப நிர்வாகத்தைச் சாமர்த்தியமாக நடத்தி, குடும்பத்தில் குதூகலம் நிலவச் செய்வீர்கள். பிறமொழி பேசும் ஒருவர் உங்களுக்கு உதவ முன் வருவார். வியாபாரம் நல்ல முறையில் நடைபெற்று வரும். நெடுநாள் எதிர்பார்த்துக் காத்திருந்த நல்லதொரு செய்தி வந்து சேரும்.

வங்கிகளில் சேமிப்பு கூடும். அரசியல்வாதிகள் பொறுமையாய் இருப்பது நல்லது. வேறு சிந்தனைகளுக்கு இடம் தராதீர்கள்.

பரிகாரம்: வியாழக்கிழமை தோறும் தட்சிணாமூர்த்திக்கு, கொண்டைக் கடலை நைவேத்தியம் செய்து வழிபடுங்கள். தடைபட்ட சுபகாரியங்கள் விரும்பியபடி கைகூடும்.

சிம்மம்

(மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்)

இந்த மாதம் ராசி நாதன் சூர்ய பகவான் ஆட்சி பெற்று சஞ்சரிப்பதால் உங்கள் கவலைகள் படிப்படியாகக் குறையும். உத்தியோகஸ்தர்களின் விருப்பங்கள் நிறைவேறும். உங்கள் செல்வாக்கு கூடுவதோடு முன்னேற்றத்துக்கான சூழ்நிலைகளும் அமையும்.



அரசியல்வாதிகள், அரசு அதிகாரிகள் ஆகியோரது பாராட்டுகளைப் பெறுவீர்கள். சகோதர வழியில் ஒத்துழைப்பை எதிர்பார்க்கலாம்.

பெண்களுக்கு ஆடை, அணிமணி சேர்க்கை, பொன் நகை வாங்கி அணியும் யோகம் உண்டு. பயணத்தால் பயனுண்டு.


வியாபாரம் திருப்திகரமாகவே இருக்கும். விளையாட்டுப் பொருள்கள், ஆயத்த ஆடைகள் போன்றவை பெருமளவில் வியாபாரம் ஆகும். இரும்பு, சிமெண்ட், பெயிண்ட் போன்றவை கூடுதல் ஆதாயத்தைத் தரும். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெற்று, பொருளாதார முன்னேற்றம் அடைவார்கள். கை, முதுகுவலி தொல்லை தரக்கூடும். விருந்துகள், கேளிக்கைகள், உல்லாச சுற்றுலா போன்றவற்றை தவிர்ப்பது நல்லது. பெண்களால் சிலருக்கு நன்மை ஏற்பட வாய்ப்புண்டு. மகன்/மகள் வழியில் சந்தோஷ செய்தி வரும்.

பரிகாரம்: நவக்கிரக சன்னிதியிலுள்ள குருபகவானைத் தினமும் வணங்குங்கள். பதினொரு முறை குருபகவான் காயத்ரியையும் சொல்லி வந்தால், உங்கள் வாழ்வில் எதிர்பார்த்த மனமகிழ்ச்சி கட்டாயம் கிடைக்கும்.

கன்னி

(உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள் அஸ்தம், சித்திரை 1,2ஆம் பாதங்கள்)

இந்த மாதம் விரயஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சூரிய புத பகவான் அருளால் சுபவிரயங்கள் உண்டாகும். நன்மைகள் அதிகம் என்றாலும் செலவினங்களைச் சமாளிக்க, சிறு தடுமாற்றம் உண்டாகும். வயதானவர்களுக்கு மருத்துவ செலவு ஏற்படும். எனினும் பாதிப்பு அதிகம் இருக்காது.



மாணவமணிகள் விரும்பிய கல்விப் பிரிவில் இடம் கிடைத்து, உற்சாகம் கொள்வீர்கள். வெளிநாடுகளுக்குச் சென்று கல்வி பயில விரும்புபவர்கள் பொறுமையைக் கடைபிடிப்பது அவசியம்.

கலைஞர்களுக்குப் புதிய வாய்ப்புகள் உண்டு. குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடைபெறும். பெண்கள் மனமகிழ்ச்சியுடன் உலா வருவீர்கள்.

ஜவுளி, மளிகைப் பொருள் வியாபாரம் கூடுதலாகக் காணப்படும். தொழிற்பிரிவினர் முன்னேற்றமான சூழ்நிலையைக் காணலாம். பெண்களின் நீண்டநாள் அலுவலகப் பிரச்னைகள் தீரும். உத்தியோகஸ்தர்கள், மேலதிகாரிகளின் அபிமானத்தைப் பெற முயற்சி செய்வீர்கள். வடதிசையிலிருந்து வரும் செய்தி வந்து மன நிம்மதிக்கு வழிவகுக்கும்.

பரிகாரம்: செவ்வாய்க் கிழமை தோறும் துர்க்கா தேவிக்குத் தீபமேற்றி வணங்கி வாருங்கள். மங்களகரமான நிகழ்ச்சி ஒன்று உங்கள் மனையில் நிகழும்.

துலாம்

சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்



இந்த மாதம் ஜன்ம ராசியில் ஆட்சி பெற்று சஞ்சரிக்கும் சுக்ரன் அருளால் அறிவாற்றல், செயலாற்றல் ஆகியவற்றின் துணையால் எதிலும் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். தெய்வ பலம் துணையிருப்பதால் கவலைப்படத் தேவையில்லை.

தொழிற்பிரிவினர் சொந்தமாகத் தொழில் செய்வதே லாபகரமாக இருக்கும். கூட்டுத்தொழிலில் ஈடுபட வேண்டாம். புதிய கிளைகளைத் திறந்து தொழிலை விரிவுபடுத்தவும் இப்போது சந்தர்ப்பம் கூடி வரும்.

மூத்த சகோதர வழியில் இருந்து வந்த விரோதம் மறைந்து பூரணமான ஒத்துழைப்புகளை எதிர்பார்க்கலாம். நிலம், வீடு போன்ற அசையா சொத்துக்களை வாங்க நினைத்திருந்தவர்கள் வெற்றி பெறுவர். அரசு வழியில் சில நன்மைகளை எதிர்பார்க்கலாம்.

காண்ட்ராக்ட் பணிகளில் இருப்பவர்களுக்கு பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். நண்பர்கள், உறவினர் உதவிகளைக் கொண்டு சமாளித்து விடுவீர்கள். பெண்களுக்கு உடல் நலம் சிறப்பாக இருக்கும்.

பரிகாரம்: சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயருக்கு வெற்றிலை மாலையும் வெண்ணெயும் சாற்றி வழிபட்டு வாருங்கள். விரோதி பயம் விலகி எல்லா நன்மைகளும் உண்டாகும்.

விருச்சிகம்

(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)

இந்த மாதம் குருபகவான் அருளால் பலவகையான அனுகூலங்களைப் பெற்று மகிழக்கூடிய நிலை தென்படுகிறது. நீண்ட கால திட்டம் நிறைவேற வாய்ப்புண்டு. தொழிற்பிரிவினர் வளர்ச்சிப் பாதையைக் காண்பீர்கள். வருமானம் திருப்தி தருவதாக அமையும். வாடிக்கையாளரின் எண்ணிக்கை பெருகி, வியாபாரம் முன்னேற்றமடையும்.



அரசு வழியில் நன்மைகள் நடக்கும். திருமணம் தள்ளிப்போய் வந்த சில பெண்களுக்கு திடீரென்று திருமணம் கைகூடி வரும். பெண்கள், குடும்பத்தில் ஏற்படும் சிறு சச்சரவுகளை நல்ல முறையில் தீர்த்து நன்மதிப்பைப் பெறுவீர்கள். உங்கள் முன்கோபம் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் காணப்படுவதால் எல்லாரும் உங்களுக்கு மரியாதை செலுத்துவார்கள். கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவார்கள். அதனால் மனமகிழ்ச்சியும், பொருளாதார வசதியும் கிடைக்கும்.


எழுத்து, பத்திரிகை துறையில் உள்ளவர்கள் சிறப்பான முன்னேற்றத்தைக் காண்பீர்கள். புதிய பொருட்கள் வாங்க வாய்ப்புண்டு.

பரிகாரம்: தினமும் சண்முகக் கவசம் படிப்பதுடன், 'ஓம் சரவணபவ' என எழுதி முருகப் பெருமானை வணங்கி வருவதன் மூலம் எதிர்பாராத தடைகளும் விரோதங்களும் விலகும். நினைத்த காரியம் வெற்றிகரமாக நடக்கும்.

தனுசு

மூலம், பூராடம் உத்திராடம் 1ஆம் பாதம்

இந்த மாதம் ராசிநாதன் குருபகவானின் சஞ்சாரமும் செவ்வாய் சனி சேர்க்கையும் சிறுசிறு இடையூறுகளை ஏற்படுத்தும். மேலும் நன்மையும், தீமையும் கலந்த பலன்களையே எதிர்பார்க்கலாம்.



உத்தியோகஸ்தர்கள் தங்கள் பணிகளை விரைவுபடுத்தி, குறையில்லாமல் செய்து வருவது அவசியம். தொழிற்பிரிவினர் வளர்ச்சி நிலையையும், வருமானப் பெருக்கத்தையும் காண முடியும். மாணவ மணிகள் விளையாட்டுப் போக்கைக் குறைத்துக் கொள்வது அவசியம். அரசு வழி நண்பர்கள் மூலம் சில நன்மைகள் உண்டாகும்.

கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெற்று மகிழ்வீர்கள். வெளிநாட்டில் கலைநிகழ்ச்சிகளுக்கான அழைப்பும் கிடைக்கக்கூடிய நிலை உண்டு. குடும்ப நிர்வாகத்தில் பெண்களின் பங்கு மிகச்சிறப்பாக இருந்து வரும். குடும்பத்தில் அமைதி நிலவச் செய்வீர்கள். பிறமொழி பேசும் ஒருவரின் மூலம் சில நன்மைகள் கிடைக்க இடமுண்டு. தெய்விகப் பணிகளில் நாட்டம் மிகுதியாகும். பெண்கள் சிறு உடல் உபாதைகளுக்கு ஆளாகி குணம் அடைவீர்கள். எதிர்பாராத உறவினர் வருகையால் மனமகிழ்ச்சி உண்டாகும்.

பரிகாரம்: தினமும் சிவாலயம் சென்று சிவபெருமானை வணங்கி வருவதுடன், பிரதோஷ நாளன்று சிவனுக்குரிய அபிஷேகப் பொருள்களை வாங்கி தந்து வழிபாடு செய்யுங்கள். நீண்ட நாள் கோரிக்கைகள் நிறைவேறும்.

மகரம்

(உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள் திருவோணம் அவிட்டம் 1,2ம் பாதங்கள்)

இந்த மாதம் ஜீவனாதிபதி சுக்ர பகவான் ஆட்சி பெற்று சஞ்சரிப்பதால் பெரும்பாலும் நற்பலன்களை எதிர்பார்க்கலாம். தொல்லை கொடுக்க நினைத்தவர்கள் ஓடி ஒளிவார்கள். சிலருக்கு இருந்து வந்த திருமணத்தடங்கல்கள் நீங்கும். கடல் கடந்த நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தவர்களது முயற்சிகள் வெற்றி பெறும். மாணவர்கள், படிப்பில் சிறந்து விளங்குவார்கள். உங்களிடம் உதவி பெற்றவர்கள் உங்களுக்கு உதவ முன்வருவார்கள். உறவினர்களால் நன்மை உண்டு. கணக்கு, ஆடிட்டிங், நீதித்துறை போன்றவற்றில் உள்ளவர்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள்.



குழந்தைகளின் உடல் நலத்தில் அக்கறை செலுத்த நேரும். ஞாபகமறதித் தொல்லையால் சில குழப்பங்களுக்கு ஆளாவீர்கள். தொழிற் பிரிவினர் முன்னேற்றமான நிலையைக் காண்பீர்கள். பூமி, வீடு போன்றவற்றை விற்பதில் அவசரப்படாமல் பொறுமையாய் இருப்பது அவசியம். அதிர்ஷ்ட வாய்ப்புகளின் மூலம் சிலர் தனவரவைப் பெறக்கூடும். பெண்களுக்கு மகிழ்ச்சியூட்டும் நிகழ்ச்சிகள் அதிகமாகவே நடைபெறும்.

பரிகாரம்: விநாயகப் பெருமானுக்குரிய அபிஷேகப் பொருள்களை வாங்கித் தந்து தினந்தோறும் வணங்கி வாருங்கள். அனைத்து தடைகளும் விலகி சகல சௌபாக்கியங்களும் உண்டாகும்.

கும்பம்

(அவிட்டம் 3,4ஆம் பாதங்கள் சதயம்)

இந்த மாதம் பாக்கியஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சுக்ரபகவான் அருளால் உங்களுக்கு இருந்து வந்த தொல்லைகள் படிப்படியாக விலகிச் செல்லும். எனினும் பொறுமையாகச் செயல்படுவதன் மூலம் சிக்கல்களிலிருந்து விடுபடலாம். உங்களைச் சுற்றியுள்ள போலி மனிதர்களை விலக்கி வைப்பது நல்லது.



கலைஞர்கள் சக கலைஞர்களிடம் சுமுகமாகப் பழகி வருவது பலன் தரும். ஸ்டண்ட் கலைஞர்கள், பின்னணிப் பாடகர்கள் போன்றோர் கூடுதல் வாய்ப்புகளைப் பெறுவீர்கள்.

தொழிற்பிரிவினர் உழைப்புக்கேற்ற ஊதியத்தைப் பெறுவர். கூட்டுத் தொழில் செய்பவர்கள் கூட்டாளிகளை முழுமையாக நம்ப வேண்டாம். உடல்நலத்தில் சிறு உபாதைகள் ஏற்பட்டு நிவர்த்தியாகும். இரவு நேரங்களில் வாகனங்கள் ஓட்டிச் செல்வதைத் தவிர்ப்பது நல்லது. பெண்கள், ஆடை ஆபரண சேர்க்கை உண்டாவதால் மகிழ்ச்சி அடையக்கூடும்.

சகோதர வழியில் சிறு மனக்கலக்கம் ஏற்பட இடமுண்டு. நீரிழிவு வியாதி உள்ளவர்கள் சற்று கூடுதல் கவனத்துடன் இருப்பது அவசியம். பெண்களுக்கு ஏற்றமான சமயம் இது. பொன், பொருள் சேரும்.

பரிகாரம்: தினமும் 'கந்தசஷ்டி கவசம்' படித்து வருவதுடன், முருகப் பெருமான் ஆலயம் சென்று வாருங்கள். உங்கள் மனோதிடம் அதிகரிக்கும். உங்கள் வாழ்வில் வளமும் நலமும் சேரும்.

மீனம்

(பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி)

இந்த மாதம் செவ்வாய் சுக்ரன், சேர்ந்து எட்டாம் இடத்தில் சஞ்சரிப்பதால் எதிலும் நிதானமாகவும் பொறுமையாகவும் செயல்படுவது அவசியம். பண விரயம் ஏற்பட வாய்ப்புண்டு என்பதால் செலவுகளில் கவனமாக இருங்கள். பணப்புழக்கம் உள்ள பணிகளில் உள்ளவர்களும் எச்சரிக்கையாக செயல்படுதல் அவசியம்.



உத்தியோகஸ்தர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு உண்டு. மறைமுக வருமானங்கள் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும். சுபநிகழ்ச்சிகளில் கலந்து மகிழும் வாய்ப்புகள் உண்டாகும். உறவினர் வருகை மகிழ்ச்சி தரக்கூடும். மாணவமணிகள் படிப்பிலும், விளையாட்டிலும் உற்சாகமாக இருந்து வருவீர்கள். பழைய நண்பர்களைச் சந்திப்பதால் சில அனுகூலங்கள் உண்டு.

நீண்ட நாள் எதிர்பார்த்த ஒரு நல்ல செய்தி மனதுக்கு மகிழ்ச்சியை உண்டு செய்யும். செல்வந்தர்களின் தொடர்பு உண்டாகி மகிழ்ச்சி தரும்.

வியாபாரிகளுக்கு கறுப்பு, பொன் நிறப் பொருள்கள் திருப்திகரமான லாபத்தைத் தரும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளால் தனவரவு உண்டு.

பரிகாரம்: சிவாலயங்களுக்குச் சென்று, தினமும் சிவபெருமானை வழிபட்டு வருவதும், 'கோளாறு பதிகம்' படித்து வருவதும் உங்கள் வாழ்வில் முக்கிய திருப்பங்களை உண்டு செய்யும்.



1



தேவையான பொருள்கள்

பெரிய அகல் - 1, முப்பெரும் தேவியர் உருவச் சிலைகள், தெர்மாகோல் ஷீட் - கொஞ்சம் ஃபெவிகால், செயற்கை புற்கள், பச்சை நிற பெயிண்ட், பிரஷ், 3டி லைனர், குந்தன் கற்கள்

2



3



4





முப்பெரும் தேவியர் அகல்!

செய்முறை:

★ அகலின் வெளிப்புறத்தில் 3D லைனர் மூலம் டிஸைனை வரைந்து பெவிகால் உதவியுடன் குந்தன் கற்களை ஒட்டவும்.

★ அகலின் மேற்புறத்தில் தெர்மாகோல் ஷீட்டை ஒட்டி, அதன்மேல் தெர்மாகோல் துண்டுகளை ஃபெவிகால் உதவியுடன் ஒன்றன் மீது ஒன்றாக ஒட்டவும்.

★ நன்றாகக் காய்ந்ததும் பச்சை நிற வர்ணத்தைப் பிரஷ் மூலம் பூச வேண்டும்.

★ செயற்கைப் புற்களையும் பூக்களையும் ஆங்காங்கே ஒட்டவும்.

★ தேவியர் உருவச் சிலைகளைத் தெர்மாகோல் ஷீட்டின் மீது வைக்கவும்.

★ அகலின் உட்புறம் எண்ணெய் ஊற்றி திரி போட்டு தீபம் ஏற்ற நவராத்திரி ஸ்பெஷலாக ஒளி வீசும்.

- செ.கலைவாணி, சென்னை



ஒற்றைக் காதணி!

ஆள் நடமாட்டமில்லா சாலையில்...
அழகாய்க் கிடந்தது ஒற்றைக் காதணி!
அவசரமாய் எடுத்து மறைத்தேன்
என் கையினுள்!

ஒரு வினாடி
சந்தோஷப்பட்டது மனம்...
மறு வினாடி
உறுத்தியது.

எந்தக் குழந்தை
தொலைத்துவிட்டு அழுகிறதோ?
எந்த இளம்பெண்
பதறியபடி தேடுகிறாளோ?
எந்தப் பேரிளம்பெண்
பெருமூச்சு விட்டு நிற்கிறாளோ?

சலனபட்ட மனது
சங்கடப்பட்ட நேரம்...
தங்கமா... பித்தளையா...
பட்டிமன்றம் மனதினுள்!

தங்கம் என்றார் தட்டான்...
எப்போதோ நான் தொலைத்த
ஒற்றைக் கொலுசும்...
வாங்கிய வசவும் நினைவில் வர...
கனத்தது மனசு!

சு. ஹேமலதா, பொள்ளாச்சி



கண்ணனின் குழலிசை கேட்டதுதான் தாமதம். கோபியர்கள், அவிழ்ந்த கூந்தல், கலைந்த உடை என்பதையெல்லாம் கூடப் பாராட்டாமல் குழலின் நாதம் வந்த திசை நோக்கி விரைந்தனர். கண்ணனையும், ராதையையும் சுற்றி, கோபியர்களும் நடனமாடத் தொடங்கினர்.

'குழலூதி மனமெல்லாம் கொள்ளை
கொண்ட பின்னும்
குறையேதும் நமக்கேதடீ?-தோழி'

அந்தி மயங்கும் நேரம். பிருந்தாவனமே மயிற்தோகை மணிவண்ணனின் ராஸ லீலை மகோற்சவத்தைக் காணும் ஆவலில் இருந்தது.

பிருந்தாவனமே என்றதும் அந்த க்ஷேத்திர வாழ் மக்கள் என நினைக்க வேண்டாம். புல்லிலிருந்து, புள்ளினம், பக்ஷிகளுக்குமேதான் அங்கு முதலிடம். நிச்சயமாக அந்நிய ஆடவர் எவருக்கும் அங்கு அனுமதியில்லை.

அடர்ந்த பசுமையான புல்வெளியின் நடுவில் நீலமேகச் சியாமளன் தன் கொவ்வைச் செவ்வாயில், குழலை வைத்து இசைத்துக்கொண்டே, ராதையை இடப்புறத்தில் அணைத்தவாறு நடனமாடத் தொடங்கினார்.

கண்ணனின் குழலிசை கேட்டதுதான் தாமதம். கோபியர்கள், அவிழ்ந்த கூந்தல், கலைந்த உடை என்பதையெல்லாம் கூடப் பாராட்டாமல் குழலின் நாதம் வந்த திசை நோக்கி விரைந்தனர்.

கண்ணனையும், ராதையையும் சுற்றி, கோபியர்களும் நடனமாடத் தொடங்கினர்.

இந்த சுகானுபாவத்தை சர்வேஸ்வரன் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார். தானும் கண்ணனுடன் நடனமாட வேண்டும்; கோபியர்கள் பெறுகின்ற பாக்கியத்தைத் தானும் அனுபவிக்க வேண்டும் என்று எண்ணினார்.

தத்துவம்

ராஸ



ஆனால், அந்நிய புருஷர் எவருக்குமே அனுமதியில்லாத இப்பொழுது தான் மட்டும் எவ்வாறு நடனத்தில் பங்கேற்க முடியும் என எண்ணினார்.

நடனத்தின் வேகம் அதிகரித்தது. என்ன ஆச்சர்யம்? ராதையுடன் நடனமாடிய சர்வாலங்கார பூஷிதனான கௌஸ்துபமணி மார்பினானவன், அதே கோலத்தில் ஒவ்வொரு கோபியருடனும் தனித்தனியே குழலூதியபடி கால் சதங்கைகள் ஒலிக்க நடனமாடினான்.

சிவபெருமானுக்கு அதற்கு மேலும் ரசித்துக்கொண்டு வெறுமனே நிற்க பொறுமையில்லை. தன்னை ஓர் ஆயர் குலப் பெண்ணைப் போல் உருமாற்றிக் கொண்டார். பெண்ணுருவில் இருந்த சிவபெருமானுடனும் ஒரு கார்மேனி செங்கண்ணன் நடனமாடத் தொடங்கினான்.



லீலை!



இதைக் கண்ட ராதையும், கண்ணனும் சிரித்துக்கொண்டனர். வந்தவர் யார் என்பதை அவர்களிருவரும் அறியாதவர்களல்லவே!

ராதையும், கிருஷ்ணனும் மற்றும் கோபியர் எல்லோரும் சிவபெருமானை, வில்வதளங்களால் வணங்கி விடை கொடுத்து அனுப்பினார்கள்.

ராஸ லீலையில் வரும் ஒரு சிறுகதை இது. ராஸலீலை என்றால் விரக தாபத்தினால் உண்டாகும் ஒரு மயக்கம் என்று பலர் தவறான அபிப்பிராயம் கொண்டுள்ளனர். இதில் விரசபாவம் எதுவுமே இல்லை.

மாறாக மகோன்னதமானதொரு தத்துவத்தை உணர்த்த உண்டானதே ராஸலீலை.

பிருந்தாவனம் என்பது இந்தப் பிரபஞ்சம். கண்ணன்தான் ஸ்ரீமந் நாராயணன். அவரது குழல் நாதத்தால் எல்லோரையும், அவர், மோக்ஷப் பிராப்திக்கு வழி கூற அழைக்கின்றார் என்று பொருள். நாதம் கேட்டு விரைந்தோடும் யாதவக் குலப் பெண்களானவர்கள், இந்தப் பிரபஞ்சத்தில் வாழும் உயிரினங்கள் என்று உணர்ந்து கொள்ள வேண்டும்.

அது மட்டுமல்ல ஸ்ரீமத் பகவத் கீதையில் ஐம்பத்து ஏழாவது சுலோகமானது:

''சேதஸா ஸர்வகர்மாணி மயி ஸன்யஸ்ய மத்பர:|
புத்தியோக முபாச்ரித்ய மச்சித்த: ஸததம்பவ||''

''எல்லா கர்மங்களையும் பகுத்தறிவு கொண்டு என்னிடம் வைத்து, வேறொன்றையும் உயர்வாகக் கருதாமல், என்னையே கருத்தில் கொண்டு, புத்தியோகத்தினால் எப்பொழுதுமே என்னில் சித்தத்தை நிறுத்தி நிலை பெறுவாய்''


ஸ்ரீமத் பகவத் கீதையானது குருக்ஷேத்திர மகா பூமியில், ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவால், அர்ஜுனனுக்கு உபதேசிக்கப்பட்டது என்று கொள்ளாமல் ஸ்ரீ பகவான், இறைவனை அணுக வேண்டிய பாதையை எல்லோருக்குமே கற்பித்ததாகத்தான் கொள்ள வேண்டும்.

-மாலதி சந்திரசேகரன், சென்னை

● சிறப்புச் சிறுகதை

கொலுவில் ஒரு

புனே-தாதர் ரயிலின் பெண்கள் வண்டியில் நான் ஏறியபோது மணி பகல் பன்னிரண்டு. என்னருகில் - மூன்று இளம் பெண்கள், கலகலப்பாக பேசிக் கொண்டிருந்தனர். நிஷா தான் முதலில் தன்னை



அறிமுகப்படுத்திக்கொண்டாள். உதட்டருகில் அழகிய பெரிய மச்சத்துடனிருந்தாள் ஊர்மிளா; அவள் தோழி ஜெயந்தி. என்னுடன் விரைவில் ஒட்டிக் கொண்டு விட்டனர். ஊர்மிளா, ''மௌசீ, நாங்க பக்கத்து பக்கத்து வீடு என்ற பெயரே தவிர, ஜெயந்தி என் வீட்டில் தானிருப்பாள். ஒரே பள்ளி, இப்போ ஒரே கல்லூரி'' என்றாள் ஊர்மிளா.


தொடர்ந்து ஜெயந்தி ''எனக்கு ரெண்டு தம்பி, இரண்டு தங்கைகள், வீட்டில் படிக்க வசதியில்லை என்று இவள் வீட்டுக்கு வந்து விடுவேன். பாடத்தைவிட பேச்சுதான் அதிகமிருக்கும். எனக்கு வெளி உலகம் தெரியாது. இவளோ தனியாக அடிக்கடி மும்பையிலுள்ள அவ அக்கா வீட்டுக்கு வருவா. இந்த தடவை என்னைக் கட்டாயப்படுத்தி அழைச்சுட்டு வந்திருக்கா'' என்றாள். இருவரும் பாடிக்கொண்டும், ஜோக்கடித்துக் கொண்டும் வந்தனர்.

சில்லென்று வீசிய காற்று; பச்சைக்



உடையாத பொம்மை!

ராஜி சுப்ரமண்யம்




கம்பளம் போர்த்தியிருந்த மேற்கு மலைத் தொடர்ச்சியின் இயற்கை அழகு ; ஆங் காங்கே வெள்ளிக்கம்பி போல வீழ்ந்த நீர் வீழ்ச்சி - இவற்றை நாங்கள் ரசித்துக் கொண்டு வந்தபோது, வண்டி 'மங்கி ஹில்' என்ற இடத்தில் நின்றுவிட்டது. முன்சென்ற வண்டி தடம் புரண்டதால், எங்கள் வண்டி மேலே செல்ல வழி யில்லை. மழை வேறு ஆரம்பித்து விட் டதால், சீர்ப்படுத்தும் வேலை வெகுவாக பாதிக்கப்பட்டது. நேரமாக ஆக, பசி, பயம், கவலை கலந்த ஒரு பதற்ற நிலை பரவ ஆரம்பித்தது. ஒருவரையொருவர் அவர்கள் போகுமிடம் பற்றி விசாரிக்கத் துவங்கினர்.

''சயான் போகிறவர்கள் என் காரில் வரலாம்'' என்று ஒரு பெண்மணி கூறிய வுடன், ஊர்மிளா அவளுடன் போகத் தயாராகி என்னையும் கூப்பிட்டாள். நான் நிஷாவுடன் தாதர் ஸ்டேஷன் எதிரிலிருந்த அவள் மாமா வீட்டுக்கு வருவதாகக் கூறி யிருந்தேன். சாயந்திரம் ஐந்து மணிக்கு வர வேண்டிய வண்டி, இரவு இரண்டு மணிக்கு தாதர் வந்தது. பிரியா விடை பெற்று ஊர்மிளாவும் ஜெயந்தியும் அந்தப் பெண்மணியுடன் செல்ல, நான் நிஷாவின் மாமா வீட்டில் தங்கி, காலையில் மட்டுங்கா வந்தேன்.

இது நடந்து ஐந்து வருடங்களாகி விட்டன. ஆடிப் பண்டிகை சமயத் தில், ஒரு ஸ்திரீ நல நிறுவனத்தில், அபலைப் பெண்கள் செய்த கைவினைப் பொருள்களை வாங்கச் சென்றிருந்தேன். அங்கு ஊர்மிளாவைச் சந்திப்பேன் என்று எதிர்பார்க்கவே இல்லை. என்னை அடை யாளம் கண்டு அவள் சைகை காட்டினாள். என்னைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு, வேண்டிய பொருள்களை வாங்கிக்கொண்டேன். சாதாரணமாக விசாரிப்பது போல, ஊர்மிளாவைப் பற்றிக் கேட்டபோது, ''இவள் பெயர் சரண்யா, சிவப்பு விளக்குப் பகுதி யிலிருந்து மீட்கப்பட்டவள்'' என்ற தக வல் கிடைத்தது. ''நாளை காலை பத்து மணிக்கு எதிரிலிருக்கும் கோயிலில் சந்திக்கலாம் ஊர்மி.'' என்று எழுதப்பட்ட சிறு சீட்டு ஒன்றை, என் கையில் வைத் தாள் ஊர்மிளா.

இரவு முழுதும் தூங்காது, ஒன்பது மணிக்கே கோயில் வாசலில் பழி கிடந் தேன். ஊர்மிளாவின் அழகு சொட்டிய முகம் களையிழந்து சோகையாக, சோக மாக இருந்தது. என்னைக் கட்டிக்கொண்டு விக்கி விக்கி அழுதாள். அழுகை ஓயும் வரை காத்திருந்தேன். என்ன பயங்கரம்!



விக்கல் எடுக்கும் போது, நாலைந்து புதினா இலை களை வாயில் போட்டு மென்றால் விக்கல் உடனடியாக நின்று விடும்!

- எஸ். சந்திரமுகி,
அவ்வையார்பாளையம்





ஆனந்த அமிர்தம்!

என் அக்காவின் மருமகளுக்குத் தலைப் பிரசவம் ஆனது. அதுவும் சுகப் பிரசவம். இதில் ஒன்றும் ஆச்சர்யமில்லைதான். ஆனால் இதில் ஒரு சுவாரஸ்யமான விஷயம் அடங்கி உள்ளது. பிறந்த குழந்தையின் கொள்ளுத் தாத்தா, தாத்தா, அப்பா, பிறந்த குழந்தை ஆகிய நான்கு பேருடைய பிறந்த தேதிகளும் ஒன்றே. அதாவது 'மே மாதம் 16-ஆம் தேதி!' இந்த நான்கு தலைமுறையினருமே சுகப்பிரசவத்தில் பிறந்த குழந்தைகள்தாம். கொள்ளுத் தாத்தாவின் பிறந்த தேதி மட்டுமல்ல, அவருடைய நட்சத்திரமான மிருக சீரிஷத்தில் பேரனும் பிறந்தது எல்லோரையும் மேலும் வியக்க வைத்தது.

- பா. கிரிஜா, ஓசூர்

அன்று அவர்களை அழைத்துச் சென்றவள், அவர்களை ஓர் அறையில் அடைத்து வைத்திருக்கிறாள். ஜெயந்தியைப் பற்றித் தெரியவேயில்லை.

''மயக்க நிலையில் எனக்கு அலங்காரம் செய்து, கண்ணைக் கட்டி, காரில் ஒரு லாட்ஜுக்கு அழைத்துச் செல்வார்கள். அதேபோல (கண்ணைக் கட்டி) திரும்பி அந்த அறையில் அடைத்துவிடுவார்கள். வாடிக்கையாளர்களிடமிருந்து, காகிதம், பேனா வாங்கி, 'இங்கு விபசாரம் நடக்கிறது' என்று எழுதி, ஜன்னல்கள் வழியாக நாலு பக்கமும் எறிந்துகொண்டேயிருந்ததில் ஒரு பலன். சீக்கிரமே போலீஸ் ரெய்ட் ஆகி என்னை மீட்டு விட்டனர்'' என்றாள் ஊர்மிளா.

''உன் பெற்றோர்களைப் பார்த்து பேசுகிறேன். அவர்கள் கட்டாயம் உன்னை ஏற்றுக்கொள்வார்கள்'' என்றேன்.

''நிஜம்தான்; ஆனால் ஜெயந்தியைப் பற்றிக் கேட்டால் நான் என்ன சொல்வேன்? என்ன சமாதானம் செய்வேன் என்று யோசித்துதான் நான் திரும்பவில்லை. இதை இத்துடன் விடுங்கள். மாதம் ஒருமுறை என்னைச் சந்தியுங்கள் போதும்'' என்றாள்.

விடைபெற்ற என் மனத்தில் குற்ற உணர்ச்சி. அவர்கள் என்னை வற்புறுத்தியதுபோல, நானும் அவர்களைக் கட்டாயப்படுத்தி என்னுடன் அழைத்துப் போயிருக்கணும்.

குஷியும் கும்மாளமுமாக இருந்த இரு சிட்டுக் குருவிகள் அலங்கோலமாக நான் காரணமாகி விட்டேனோ! என் மனம் தவித்து அழுதது.

சுமங்கலிகளுக்கு மங்களச் சின்னங்கள், கன்னிப் பெண்களுக்கு விருந்து - ஏற்பாடு செய்து கொண்டிருக்கும்போதே மனத்தில் ஒரு கீற்று, இவர்களுக்கு இடைப்பட்ட நிலையிலிருந்த என் ஊர்மிளாவுக்கு ஏன் ஒரு நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுக்கக்கூடாது? மனத்தில் எழுந்த நல்லெண்ணம் 'கிடுகிடு' என்று விசுவரூபம் எடுக்க, கணவரின் அனுமதியுடன் சந்திக்க வேண்டியவர்களைச் சந்தித்து, முக்கியப் படிவங்களில் கையெழுத்திட்டு, அவளுக்கு மருத்துவ பரிசோதனைகள் செய்து, நவராத்திரிக்கு முன் ஊர்மிளா, வீட்டுமகளாக வந்து விட்டாள் நிரந்தரமாகவே!


எனக்கு உண்மையாகவே 'தேவி உபாசனை' செய்த திருப்தி ஏற்பட்டது. •

வண்ணக்



13 புள்ளி - 7வரை
(இடைப்புள்ளி)
கே. அனுசுயா, குலுமணி

15 - 8 வரை
(இடைப்புள்ளி)
எஸ். பத்மாவதி சுப்பையன்,
பாபநாசம்





17 புள்ளி - 9 வரை
(இடைப்புள்ளி)
பவானி கிருஷ்ணா,
பெங்களூரு


கோலங்கள்!

வாசல் அழகு





நிர்மலா
கோபாலகிருஷ்ணன்,
பெங்களூரு



19 புள்ளி- 10வரை
(இடைப்புள்ளி)
கோமதி,
கோபிசெட்டிபாளையம்



கவிதா சங்கர்,
விருதுநகர்

பாயசம்! காலம் காலமாக இந்திய இல்லங்களில் தயாரிக்கப்படும் ஓர் இளக்கமான இனிப்பு வகை. இதைக் கிண்ணத்தில் ஊற்றிப் பருகலாம் அல்லது இலை மேல் ஊற்றி ஓட ஓட விரட்டலாம். குருவிக் கதை யானாலும் சரி, குட்டிப் பண்டிகையானாலும் சரி, பாயசத்துக்கே முதலிடம்!



பாயச

அப்பீ பாயசம் : தொன்மையான அப்பீ பாயசத்துக்கு அபயமளிக்க ஆளில்லாமல் போனதால், இக்காலத்து சமையல் பட்டியலிலிருந்து காணாமல் போய்விட்டது; அந்தோ பரிதாபம். கோதுமை நொய்யை (அதாங்க, கோதுமை ரவை) பால் தெளித்து, கெட்டியாகப் பிசைந்து, மெத்தென உரலில் இடித்து, அப்பளங்களாக இட்டு, பொரித்து, ஒடித்து, சுண்டக் காய்ச்சிய பாலில் போட்டு, பாதாம் மற்றும் கசகசாவை வறுத்துப் போட்டு செய்யப்படும் அற்புதப் பாயசம்.

ஆனால் என்ன, ஒரு பாயசத்தை தயாரிப்பதிலேயே முழு நாளும் 'அபேஸ்வாஹா!' ஆகிவிடும்.

அடைப் பிரதமன்: செய்ய வேண்டிய முறையில் இழுத்துப் போட்டு செய்தால், இது முதுகைப் புடைக்க வைக்கும் ஆயாச பாயசம். மையாக அரைத்த அரிசியை இலையில் தடவி,

அகராதி!

சுஜாதா கௌரி சங்கர்

வேக வைத்து, துண்டு போட்டு, சுண்டக் காய்ந்த பாலில் ஒரு சேரக் கொதிக்க விட்டு... அட, அட, அட... 'ஆஹா' என்று மேலும், மேலும் கேட்க வைக்கும். இப்போதெல்லாம் ரெடிமேட் அடை கிடைக்கிறதாம். கோவை கோமளாவின் கூற்றுப்படி, 'பாக்கெட்டை கிழித்துப் போட்டு கொதிக்க விட வேண்டியதுதான்!' மெனக்கெடாமல் மெகா ஹிட் பாயசமா? கிழிஞ்சது போங்க!

இன்ஸ்டன்ட் பாயசம்: கன்டன்ஸ்டு மில்க் ஊற்றிய காலம் போய், விலைவாசி உயர்வின் உபயத்தால், கடலை மாவு கரைத்துவிடும் அளவுக்கு வந்துள்ள திடீர், 'கண்டேன் தலையை, மொண்டேன் பாயசத்தை' ரகம். வாசனை சரக்கான ஏலமே இதற்கு வாழ்வு கொடுக்கும். தேவைக்கேற்ப, ஓடும் ரகமாக ஊற்றி கிண்ணத்திலும், நிற்கும் ரகமாக மாற்றி, இலையிலும் சுவைக்கலாம்.

இடியாப்ப பாயசம் : நீங்கள் தயாரித்த இடியாப்பம் தடியாப்பமாகியதா? மேலும் வேகவில்லையா, விறைத்துவிட்டதா, வழ வழ அல்வா ஆயிற்றா அல்லது வற்றாத கஞ்சி போலாயிற்றா? கவலையை விடுங்கள்! பால், சர்க்கரை போட்டுக் கொதிக்க விட்டால், இடியாப்ப பாயசம் 'அடியாத்தி!' போட வைக்கும்.

இனிப்புப் பாயசம்: எல்லா பாயசமுமே இனிப்புதானே என்கிறீர்களா? கரெக்ட்! ஆனால் இது இனிப்புக்களை (ஷ்ஷ்ஷ்...! அதாங்க... மிச்சம் மீதி...) வைத்தே தயாரிக்கப்பட வேண்டியது. மைசூர் பாகு, பாதுஷா, லட்டு, மைதா கேக், தேங்காய் பர்ஃபி என்ற உருவம் மாறி தூள் மயமாகிவிட்ட சகலவித இனிப்புகளை ஒன்று சேர்த்து கலந்தடித்து, பாலுடன் அடுப்பேற்றினால் பளிச்சென்ற பாயசம் ரெடியாகிவிடும். உங்கள் வீட்டு பட்சண சம்புடமும் காலியாகிவிடும்!

'கண்டுபிடி' பாயசம்: இதில் தவளைக் குஞ்சையும் தம்பட்டங்காயையும் தவிர, எது வேண்டுமானாலும் இருக்கலாம். பொட்டுக்கடலை, பீன்ஸ், கமலா ஆரஞ்சு, சோயா உருண்டை, வாழைக்காய், மக்காச்சோளம், ஏன் (முழு) பூசணியேகூட பாயசத்தில் மறைந்திருக்கலாம். கண்டதையெல்லாம் போட்டு தயாரித்து, 'கண்டுபிடி' என்று சாலஞ்ச் செய்வதால் இந்தப் பெயர் வந்தது.

'ரெயின்போ' பாயசம்: எனக்குத் தெரிந்த ஒரு பெண்மணி, வெனிலா, ஸ்ட்ராபெர்ரி, ராஸ்பெர்ரி, பனானா, சாக்லெட், மேங்கோ என்று வகைக்கு ஒன்றாக கஸ்டர்ட் பவுடர்களை மாதாந்திர லிஸ்டில் வாங்கி விடுவார். அப்புறமென்ன, தலையைக் கண்டால் தளதளக்கும் பாயசம்தான். நவராத்திரியின் ஒன்பது நாட்களுக்கும்கூட சுண்டலுக்குப் பதிலாக கலர் கலரான பாயசம்தானாக்கும்.



கொழுக்கட்டை பாயசம்: கொழுக்கட்டை மாவை சீடைகள் போல் உருட்டி, பாலில் கொதிக்க வைப்பதே கொழுக்கட்டை பாயசம். மாவு சரியாகக் கிளறப்படா விட்டால், பாலைக்

கண்ட கோலிகள், கோந்தாக கரைந்து விடும் அபாயம் உண்டு.

சக்கப் பிரதமன்: பலாப்பழ பூரணத்தை ஸ்டாக் வைத்துக்கொண்டால் போதும். தினம் தினம் தேங்காயைச் சக்கையாகப் பிழிந்து பாலெடுத்து, சக்கப்போடு போட லாம். இதன் கூடுதல் டேஸ்ட்டே, மேலே மிதக்கும். நெய்யில் வறுக்கப்பட்ட தேங்காய் துண்டுகள்தான்.

பருப்பு பாயசம்: முழித்துப் பார்க்கும் கடலைப் பருப்பும் முக்கால்வாசி வெல் லமும் கொண்ட, வெரி சிம்பிள் பாயசம். கோயில்களில் அன்னதானத்தில் இடம் பெறும் ஏழைகள் பாயசம்.

பயத்தம் பருப்பு பாயசம்: முந்திரியின் ஜோடனை இருந்தால் பாயசம். இல்லா விட்டால் விரதம் இருந்து குடிக்கும் 'பயற்றங் கஞ்சி'

பாதாம் கீர் நெ.1: பாதாம் பருப்பை வஞ்சனையில்லாமல் போட்டுச் செய்யப் படும் பாயசம். ஜில்லென்று குடித்தால் சுகமோ சுகம். ஆனால் ஜில் ஆவதற்கு யார் விடுவார்கள்? சூடாக இருந்தாலும், 'அப்படியே குடிச்சிடுவேன்!'

பாதாம் கீர் நெ.2 : அண்டா கணக்கில் தயாரித்து, மொண்டு மூழ்கிக் குடிக்க லாம். கொஞ்சம் கடலைப் பருப்பை வறுத்து, மைய அரைத்து, கொதிக்க விட்டு, பால், சர்க்கரை, கலர், பாதாம் எசன்ஸ் சேர்த்துப் பாருங்கள். அட, அசலைவிட அசத்துங்க இந்தப் போலியின் டேஸ்ட்!

பாட்டிமார் பாயசம்: குருவிக்காக இல்லாமல் குட்டிப் பேரப்பிள்ளையை ஏமாற்ற, பாட்டிகள் செய்யும் பாயசம். பால் சாதத்தின் மறுபெயரே பாட்டிமார் பாயசம்.

பூண்டு பாயசம்: ஏதோ ராஜா காலத்துப் பாயசமாம்! நான் செய்து பார்த்தேன். நான் செய்த தப்பை, நீங்களும் செய்யா திருக்க இது ஓர் எச்சரிக்கை. சின்ன வயதில் அழுத்திப் பிடித்து வாயில் ஊற்று வாங்களே கஷாயம்? அதுபோல இருக் கும். விருந்தாளிகள் திரும்பிப் பார்க்காமல் ஓட வேண்டுமானால், ரிஸ்க் எடுத்துத் தயாரிக்கலாம்.

மாம்பழ பாயசம்: வெளியே ஆற வைத்தால் அது பாயசம். பிரிட்ஜில் ஏற வைத்தால் அது மில்க் ஷேக். அதேபோல் முந்திரி சேர்த்தால் பாயசம். சாரைப் பருப் பைச் சேர்த்தாலும், சேர்க்காவிட்டாலும் அது மில்க்ஷேக்.

இத்துடன் ஆதிகாலம் முதல் இந்தக் காலம்வரை, இல்லத்தரசிகள் செய்த, செய்கிற, செய்யப் போகும் பாயச வகைகளைத் தொகுத்தளிக்கும் அகராதி முடிவடைகிறது. இப் பட்டியலைப் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டால், கையில் வசமாக மாட்டும் கைவச சாமான்களை வைத்து, பாயசம் தயாரித்து அதிரடியாக அசத்தலாம்.



உளுந்து வடைக்கு அரைத்தவுடன் நீர்த்திருந்தால் ஒருகைப் பிடி அளவு பயத்தம் பருப்பைப் போட்டு மூடி வைக்கவும். நீரெல்லாம் உறிஞ்சப் பட்டு, பதமாகிவிடும். பருப்பெல்லாம் பொரிந்து வடையும் பிரமாதமாக இருக் கும்.



\- ஹேமா ஜகநாதன், கொல்கத்தா

பஞ்சாப் சிங்: ஏன் கிருஷ்ணா எங்களை மாதிரி நீயும் டான்ஸ் ஆடக்கூடாது?

கிருஷ்ணர்: ஆடலாம். ஆனா ராதா மனசு வைக்கணுமே. அவங்க இஷ்டம் இல்லாம என்னால எதுவும் செய்ய முடியாதே.

ராதா: என் மேல் அவ்வளவு மரியாதையா? தேங்க்ஸ் கிருஷ்ணா!

கிருஷ்ணா: அடி அப்பாவி ராதா, நான் சொன்னது ராதா கிருஷ்ண மூர்த்தி ராவ் பற்றி...





காட்டன் கிருஷ்ணா, லவ்லி ராதா!

அந்த வீட்டின் வரவேற்பறை அலமாரியின் கண்ணாடிகளுக்குள் இடம் பிடித்திருக்கின்றன கிருஷ்ணா ராதா பொம்மைகள், பாங்ரா ஆடும் பஞ்சாபித் தம்பதி, கையில் குடையுடன் ஜப்பானியப் பெண், டிப்பிகல் மகாராஷ்டிரிய மங்கை... இன்னும் பல... அந்தப் பொம்மைகளைப் பார்க்கையில் நாமும் ஒரு பொம்மையாக மாறி சில நொடிகள் நின்று விட்டோம். அந்தச் சில நொடிகளில் பொம்மைகளின் மொழியும் நமக்கு கைவரப் பெற்றதன் விளைவுதான் மேலே கண்ட உரையாடல்.

கலைநாயகி

பண்டிகை ஸ்பெஷல்-2

என்பது வயது என்று அவராகச் சொல்லிக் கொண்டால்தான் தெரிகிறது. அவ்வளவு சுறுசுறுப்பாக இருக்கிறார் ராதா கிருஷ்ணமூர்த்தி ராவ். பிறந்தது மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள தட்வால் கிராமம்.

'நான் கிராமத்திலேயே பள்ளிப் படிப்புவரை முடிச்சேன். திருமணமான பிறகு கணவர், குழந்தைகள்னு பிஸியாயிட்டேன். பசங்க எல்லாம் வளர்ந்து பெரியவங்களாகி காலேஜ் போக ஆரம்பிச்ச சமயம், என் கணவருக்கு வேலை மாற்றலாகி அவரும் கொல்கத்தா போயிட்டார். ஓய்வு நேரம் நிறைய இருந்தது. சும்மா இருக்கப் பிடிக்காம பொம்மைகள் செய்ய கத்துக்க ஆரம்பிச்சேன். அப்ப என் வயது, அதிகமில்லை, ஐம்பத்தைந்துதான்.

'தினமும் ரெண்டு மணி நேரம் க்ளாஸ். டோம்பிவிலியிலிருந்து மாதுங்கா வரை ட்ரெய்ன்ல போவேன். ரெண்டு வருஷம் கத்துக்கிட்டேன். எங்க டீச்சர் பேரு சுடிகர். அப்புறம் நானே இதை ஒரு ஹாபியா செய்ய ஆரம்பிச்சுட்டேன். என் கற்பனையில நானாகவே புதுசு புதுசா நிறைய செய்ய ஆரம்பிச்சேன். அதற்காக தாதர், புலேஷ்வர் பகுதிகளில் ரா மெட்டீரியல் வாங்க அலைந்துத் திரிவதும், சிறிய தம்புரா, கூடைகள் போன்றவற்றைச் செய்ய தச்சர், கூடை முடைவோர் இவர்களைச் சந்திக்கச் செல்வதும் என எப்போதும் அந்த நினைப்பாகவே அலைவேன்'' என்று பழைய நினைவுகளில் மூழ்கினார் ராதா.





அப்படி என்னதான் ஸ்பெஷல் இந்தப் பொம்மைகளில் என்கிறீர்களா...? எல்லாமே முழுக்க முழுக்க காட்டன் ஸ்டஃப் செய்யப்பட்டவை. கை, கால், தலை போன்ற உறுப்புகளில் காட்டன் ஸ்டஃப் செய்து அவற்றை இணைத்து, பிறகு அலங்காரம் செய்கிறார். இந்தச் சின்னச் சின்ன ஆடைகள், நகைகள் போன்றவையும் பெரும்பாலும் இவர் கைவண்ணத்தில் உருவானவையே.

''அம்மா, இருபது வருஷம் இந்தப் பொம்மை செய்ய ஆர்வம் உள்ளவங்களுக்கு க்ளாஸ் எடுத்தாங்க. உடல்நலம் இல்லாம ஆன பிறகு டாக்டர்ஸ் ஸ்ட்ரெஸ் கூடாதுன்னு சொல்லிட்டாங்க. அப்புறம் நாங்கதான் க்ளாஸ் எடுத்தது போதும்; கொஞ்சம் ஓய்வு எடுங்கன்னு நிறுத்த வெச்சோம்'' என்கிறார் அவரது இளைய மகன் ராகவேந்திரா.

ராதா பாட்டியின் கை வண்ணங்களை, பெருமைகளை இணையத்தில் ஏற்ற வேண்டுமென்பது இவரது பேரன்களின் விருப்பமாம்.

- கார்த்திகா ரஞ்சன்,
பெங்களூரு

அயல் நாட்டில் நவராத்திரி!

நான் சென்ற வருடம் (2009) நவராத்திரி சமயத்தில் அமெரிக்காவில் இருந்தேன். நவராத்திரியின்போது ஒன்பது நாட்களும் ஒவ்வொருத்தர் வீட்டில் பூஜை. சுமார் 50லிருந்து 75 பேர் வரை அழைத்து, மாலை வேளை களில் பஜனை, நாமாவளி என எல்லோரும் சேர்ந்து பாடி ஆரத்தி எடுக்கிறார்கள். இரவு டின்னரில் சுண்டல் கண்டிப் பாக இடம் பெறுகிறது. அதன் பிறகு, வெற்றி லைப் பாக்கு, மஞ்சள், ரவிக்கைத் துண்டு அல்லது ஏதாவது பரிசுப் பொருள் வைத்து தாம் பூலம் தருகிறார்கள். அவர்கள் வசிக்கும் இடத்தில் கிடைக்காத பொருள்களை, இந்தியா வரும் சமயம் வாங்கிச் செல்கிறார்கள். வெற்றிலையை மட்டும், நவராத்திரி சமயம் அங்குள்ள 'இந்தியன் ஸ்டோர்ஸ்'களில் வரவழைத்துத் தருகிறார்கள். கொலு வைக்க தேவையான பொம்மைகளைக் கூட இங்கிருந்து எடுத்துச் செல்கி றார்கள் என்பது உண்மையிலேயே வியக்கத்தக்கது.



தமிழ்நாட்டில்கூட சில இடங் களில் நவராத்திரி என்றால் என்ன வென்றே தெரியாத பகுதியும் உள்ளது. அந்தக் காலம் போல, வீடு தவறாமல் நவராத்திரியைக் கொண்டாடுவது குறைந்து வருகிறது என்பதே உண்மை. அப்படியிருக்க ஆணும், பெண்ணும் அவசியம் வேலைப் பார்த்தே ஆக வேண்டிய கட்டாயம் உள்ள அயல் நாட்டில், இத்தனை அக்கறையாக நவராத்திரியைக் கொண்டாடுவது போற்றத்தக்கது தானே?

-பங்கஜம் ராமச்சந்திரன், சேலம்



ஜெயஸ்ரீ ராஜ்

நினைவுச் சிறுகதைப் போட்டி - 2010ல் ரூ.2000/- பரிசு பெறும் பிரசுரத்துக்குத் தேர்வான சிறுகதைகள்!

1. கண்டவன்
வெ.பாலசரசுவதி,
கோயமுத்தூர் - 641 041

2. அருகில் இருந்தும் அந்நியராய்...
உஷா ஸ்ரீநிவாசன்,
சென்னை - 600 004

3. உன்னைப் போல் ஒருத்தி...
வி.லக்ஷ்மி,
சென்னை - 600 116


4. கம்பீரம்
ர.கிருஷ்ணவேணி
சென்னை

5. ஈற்றடி
வே.தீபப்ரியா,
தஞ்சாவூர் - 613 006

வாழ்த்துக்கள் தோழியரே!

(ஆர்)

"கொலுவுக்கு வர்றவங்களைக் கட்டுப்படுத்திட்டியா... எப்படி?"
"பாட்டு பாடினாதான் சுண்டல்னு சொல்லிட்டேன்"



கல கல கொலு!

"அந்த வீட்டு கொலுவை பார்க்க கூட்டம் அலை மோதுதே... ஏன்?"
"கொலுவுக்கு முன்னால் குளம் வெட்டி, அதில் ஆக்டோபஸ்ஸை விட்டிருக்காங்க!"


- பட்டு ஸ்ரீகிருஷ்ணன்,
பெங்களூரு





காகர் புங்னே!

மகாராஷ்டிராவில் நவராத்திரியின் ஆரம்ப நாளன்று நவதானியங்களை மண் கிண்ணங்களில் பயிரிட்டு முளைப் பாரியாக்கி ஒன்பது நாட்களும் வணங்குவர். விஜயதசமியன்று முளைப்பாரியை அருகிலுள்ள ஆறுகளில் கரைப்பர். இந் நிகழ்ச்சிக்கு 'காகர் புங்னே' என்று பெயர்.



நவராத்திரி டிட் பிட்ஸ்...



புடைவையில் கிருஷ்ணர்

உடுப்பி கிருஷ்ணருக்கு நவராத்திரியின் ஒன்பது நாட்களும் புடவை உடுத்துகிறார்கள். இவை மைசூர் மகாராஜாவின் கைங்கர்யம்.

கெடாத தேங்காய்!

நவராத்திரி சமயத்தில் நெமிலி திரிபுரசுந்தரி கோயிலில் கலசத்தில் வைக்கப்படும் தேங்காய் அடுத்த வருடம்வரை கெடாமலிருக்கும். அந்தத் தேங்காயை மறு வருட நவராத்திரியின் போது உடைத்துப் பக்தர்களுக்கு, பிரசாதமாக விநியோகிக் கின்றனர்.





புதர் வடிவில் சரஸ்வதி

கேரளாவிலுள்ள பனச்சிக்காடு சரஸ்வதிக் கோயிலில் பள்ளமாய் உள்ள இடத்தில் புதர் போல் செடி கொடிகள் மண்டி இருக்கும். இந்தப் பகுதியைத்தான் சரஸ்வதியாக வழிபடுகின்றனர்.

அஷ்டபுய துர்க்கை

கந்தாசிரமத்தில் எட்டுத் திருக்கரங்களும் கூடிய அட்டபுய துர்க்கை நின்ற கோலத்தில் மிகப் பெரிய திருமேனியுடன் காட்சியளிக்கிறாள். எதிரே வல்லபவிநாயகர், கந்த குருநாதன், ஐயப்பன் ஆகிய மூன்று புதல்வர்களும் காட்சியளிக்கின்றனர்.



வளையல் அணியும் சரஸ்வதி

நாகை மாவட்டம் கடலங்குடி சிவாலயத்தில் சரஸ்வதி வளையல்கள், கொலுசுகள், முத்துச் சரங்கள், நெற்றிப் பட்டம், கிரீடம் ஆகியவற்றுடன் சகல ஆபரண பூஷணியாகக் காட்சியளிக்கிறாள்.

தொகுப்பு: **நெ.இராமன், சென்னை**



பராசக்தி உருவங்கள்

ஸ்ருஷ்டி கர்த்ரீ (ப்ரஹ்ம ரூபா) - படைப்பவள்

கோப்த்ரீ (கோவிந்த ரூபிணி) - காப்பவள்

ஸம்ஹாரிணீ (ருத்ர ரூபா) - அழிப்பவள்.

...லலிதா சஹஸ்ரநாமம்

- டி.ஜோதிபாய், காஞ்சிபுரம்



ரூ.300/- பரிசு பெறும் ரெஸிபிகள்!

குக்கரி

கலக்கல் கொழுக்கட்டை

மலாய் பனீர் கலக்கல் கொழுக்கட்டை

தேவையானவை:

பனீர் - 100 கிராம், உருளைக்கிழங்கு வேகவைத்தது சிறியது - 2, மிளகுத் தூள் - 2 டீஸ்பூன், கொத்துமல்லி - சிறிதளவு, கேரட் - ஒன்று, பச்சை பட்டாணி (வேக வைத்து மசிக்க வேண்டும்) - கால் கப், மைதா மாவு அல்லது சோள மாவு - தலா 2 டேபிள் ஸ்பூன், பதப்படுத்திய அரிசி மாவு - ஒன்றரை கப், உப்பு - தேவைக்கேற்ப

கிரேவிக்கு: பெரிய வெங்காயம் - ஒன்று, இஞ்சி-பூண்டு விழுது - ½ டேபிள் ஸ்பூன், பச்சை மிளகாய் - 2, கசகசா, வெள்ளரி விதை - 1 டீஸ்பூன் (தேவையானால்), தயிர் - 1 ½ கப், முந்திரி - 10 (வெந்நீரில் முதலிலே ஊறவைக்க வேண்டும்), ஏலக்காய் - 3, உப்பு - சிறிதளவு, சோம்பு - ½ டீஸ்பூன், உலர்ந்த திராட்சை - 6

செய்முறை: வேக வைத்த உருளைக்கிழங்கு, துருவிய பனீர், கேரட், பட்டாணி மசித்துக் கொள்ளவும். தேவையான அளவு உப்பு, மிளகுத்தூள், கொத்து





க்வீன்

...ான்செப்ட் சமையல் போட்டி

குக்கரி க்வீன் போட்டிக்கு வந்து குவிந்த சமையல் குறிப்புகளைப் பொறுமையாக அலசி, சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்துத் தந்த உஷா இளங்கோவனுக்கு நன்றி!



...மல்லி, சோளமாவு (அல்லது) வறுத்த மைதா மாவு சேர்த்துப் பிசைந்து, சிறு உருண்டைகளாகத் தயார் செய்யவும்.

வாணலியில் ஒன்றரை கப் தண்ணீரைக் கொதிக்கவிட்டு, சிறிதளவு உப்பு போட்டு, பதப்படுத்திய அரிசி மாவை சிறிது, சிறிதாகக் கட்டி தட்டாமல், கிளறவும். மாவு நல்ல பந்து மாதிரி வந்துவிடும். அதை மெல்லிய துணியில் ஈர பதத்தோடு மூடி வைக்கவும். அரை மணி நேரம் கழித்து, சொப்பு செய்து, உள்ளே பனீர் கலவையை வைத்து, இட்லி பானையில் பத்து நிமிடம் வேக வைக்கவும்.



கிரேவி செய்முறை:

வெங்காயம், இஞ்சி - பூண்டு விழுது, பச்சை மிளகாய், திராட்சை, கசகசா, முந்திரி, ஏலக்காய், சோம்பு எல்லாவற்றையும் வெந்நீரில் சிறிது நேரம் ஊற







வைத்து, மிக்ஸியில் போட்டு நன்கு அரைத்து கொள்ளவும். வாணலியில் சிறிதளவு எண்ணெய் விட்டு கிரேவியை பச்சை வாசனை போக இலேசாக புரட்டவும். அதனுடன் ஒன்றரை கப் கெட்டித் தயிர், சிறிதளவு உப்பு போட்டு கலக்கவும். வேகவைத்த கொழுக்கட்டைகளை உடையாமல் தட்டில் வைத்து, மேலே இந்தக் கிரேவி கலவையை மெதுவாக ஊற்றவும். மேலும் இந்தக் கொழுக்கட்டைக்கு சுவைகூட்ட மில்க் க்ரீம் போட்டுத் தூவிப் பரிமாறலாம்.

- உஷா ரவிசங்கர், சென்னை

ப்ரெட் கோவா இனிப்பு கொழுக்கட்டை

தேவையான பொருள்கள்:

இனிப்பு பிரெட் துண்டுகள் - 4, தேங்காய்த் துருவல் - ¼ கப், சர்க்கரை- 200 கிராம், சர்க்கரை போடாத கோவா- 100 கிராம், வறுத்த முந்திரிப் பருப்பு - 2 டேபிள் ஸ்பூன், நெய் - 1 டீஸ்பூன், பதப்படுத்திய அரிசி மாவு - 1 கப், எண்ணெய் - 2 டீஸ்பூன், உப்பு, ஏலக்காய்த் தூள் தேவையான அளவு

செய்முறை:

வாணலியில் தண்ணீரை விட்டுச் சூடாக்கி உப்பு, எண்ணெய் விடவும். தண்ணீர் நன்கு கொதித்தவுடன் அரிசி மாவைக் கொட்டிக் கிளறவும். மாவு, கட்டி தட்டாமல் நன்கு கிளறி இறக்கி வைக்கவும். ஆறிய பிறகு நன்றாகப் பிசைந்து ஈரத் துணியில் போட்டு மூடி வைக்கவும். இது கொழுக்கட்டை மேல் மாவு.

ப்ரெட் ஸ்லைஸ்களை ஓரம் நீக்கி விட்டு மிக்ஸியில் போட்டுத் தூளாக்கவும். சர்க்கரையும் பொடிக்கவும். கோவாவை நன்கு உதிர்த்துக்கொள்ளவும். தேங்காய்த் துருவலையும், ப்ரெட் தூளையும் வெறும் வாணலியில் போட்டு இலேசாக வறுக்கவும்.

இதனுடன் ஏலக்காய்த் தூள், உதிர்த்த கோவா, பொடித்த சர்க்கரை, நெய்யில் வறுத்த முந்திரிப் பருப்பு சேர்த்து எல்லாவற்றையும் ஒன்றாகக் கலக்கவும். இது பூரணம்.

கிளறி வைத்துள்ள மேல் மாவைத் தட்டி, அதன் உள்ளே பூரணம் வைத்து ஐந்து நிமிடம் வேக வைத்து எடுக்கவும். ப்ரெட் பூரணம் செய்வது மிகவும் எளிது. அதிகம் செலவில்லாதது. வித்தியாசமான சுவையுடன் இருக்கும்.

- ஆர்.விஜயலக்ஷ்மி, சென்னை

சேமியா (கலக்கல்) கொழுக்கட்டை

சேமியா - 100 கிராம், பதப்படுத்தப்

பட்ட பச்சரிசி மாவு - 100 கிராம், ஓட்ஸ், அவல், சம்பா கோதுமை ரவை - தலா 25 கிராம் (தனித்தனியே வறுத்து மிக்ஸியில் மாவாக்கவும்.), பலாச்சுளை - 5 (சிறு துண்டு களாக நறுக்கி நெய்யில் வதக்கியது), முந் திரிப் பருப்பு-10 (சிறு துண்டுகளாக்கி நெய் யில் வறுத்தது.), டூட்டி ஃப்ரூட்டி துண்டு கள், வறுத்த எள், நெய்யில் வதக்கிய தேங்காய்த் துருவல் - தலா 2 டீஸ்பூன், வெல்லம் - 500 கிராம், ஏலக்காய் - 2 டீஸ்பூன், நெய் - தேவையான அளவு.

செய்முறை:

வாணலியில் நெய்விட்டு சேமியாவை இலேசாக வறுக்கவும். கொதிக்க வைத்த தண்ணீரில் சேமியாவைப் போட்டு, ஐந்து நிமிடம் வேக வைத்து நீரை வடிக்கவும். வெல்லத்தைக் கொதிக்க வைத்து, மண் போக வடிகட்டவும். சேமியா, பச்சரிசி மாவு, ஓட்ஸ், அவல் மாவு, பலாச்சுளை துண்டுகள், டூட்டி, ஃப்ரூட்டி, தேங்காய்த் துருவல், முந்திரி, எள், ஏலக்காய்ப் பொடி அனைத்தையும் சேர்த்து கெட்டியாகப் பிசையவும். உருண்டை களாகவோ, பிடி கொழுக் கட்டைகளாகவோ பிடித்து ஆவியில் வேக வைத்து எடுத்தால், பழ வாசனை யுடன் கலக்கல் கொழுக் கட்டை தயார்.

- எஸ்.என். கமலா,
மதுரை

முக்கனி கொழுக்கட்டை

தேவையான பொருள்கள்:


பச்சரிசி - ½ கிலோ, வெல்லம் - ¼ கிலோ, தேங்காய்த் துருவல் - ½ கப், உப்பு - சிறிதளவு, மாம்பழம் - 1, பலாச்சுளை - 10, வாழைப்பழம் - 2, எண்ணெய் - சிறி தளவு

செய்முறை:

பச்சரிசியை இடித்து மாவாக்கிக் கொள்ளவும். அதனுடன் தேவையான உப்பு, எண்ணெய் சிறிது விட்டு நன்றாக பிசைந்துக் கொள்ளவும். சுடு தண்ணீர் ஊற்றி கொழுக்கட்டை பிடிக்கும் விதத் தில் பிசைந்துக் கொள்ள வேண்டும்.

வாழைப்பழம், மாம்பழத்தின் தோலை நீக்கி சிறிய துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். பலாச் சுளையின் விதையை எடுத்துவிட்டு சிறிதாக நறுக் கவும்.

நறுக்கிய பழத்துண்டுகளை இரண்டு தம்ளர் தண்ணீர் விட்டு, இரண்டு நிமிடம் கொதிக்க விடவும். அதனுடன் துருவிய தேங்காயையும், நுணுக்கி வைத்துள்ள வெல்லத்தையும் போட்டுக் கிளறி,



தண்ணீர் வற்றியதும் இறக்க வேண்டும். பிசைந்து வைத்த மாவினை தட்டையாகச் செய்து அதில் இந்த முக்கனி பழக் கலவையை நடுவில் வைத்து கொழுக் கட்டைகளாக செய்து வேக வைத்து எடுக்கவும். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் பிடித்த சத்தான கொழுக்கட்டை ஆகும்.

- எஸ். அபிராமி, திருச்சி - 10

கிரீன் சத்து கொழுக்கட்டை

மேல் மாவு செய்ய:

பச்சரிசி - 1 கப்

ஒரு கப் பச்சரிசிக்கு ஒரு கப் தண்ணீர் ஊற்றி இரண்டு மணி நேரம் ஊற வைத்து நைசாக அரைத்துக் கொள்ளவும். ஒரு கப் தண்ணீரை ஒரு பாத்திரத்தில் ஊற்றி உப்பு எண்ணெய் சேர்த்து, கொதி வரும் நேரம், மிதமானத் தீயில் அரைத்த மாவை சேர்த்துக் கிளறவும். ஒரு சில நிமிடங்களில் மாவு வெந்து பளபளப்பாக வந்து விடும். மாவை இறக்கி, ஆறவிட்டு நன்றாகப் பிசைந்துக் கொள்ளவும். இந்த முறையில் செய்தால் கொழுக்கட்டை கட்டிந் தட்டாது; உடையாது.

பூரணம் செய்யத் தேவையான பொருள்கள்:

முளைக்கீரை + சிறு கீரை - 1 கப், மிளகாய் - 4, தேங்காய் - ½ மூடி, ஊறிய கடலைப் பருப்பு - ½ கப், கடுகு, உளுத்தம் பருப்பு - தலா ½ டீஸ்பூன், பெருங்காயம் - 2 சிட்டிகை, சீரகம் - 1 தேக்கரண்டி, உப்பு - தேவையான அளவு

செய்முறை:



கீரை வகைகளை நன்கு அலசி சிறியதாக நறுக்கிக் கொள்ளவும். தேங்காய், மிளகாய், சீரகம் கரகரப்பாக அரைத்து, உப்பு, ஊறிய கடலைப் பருப்பு, கீரை வகைகளைச் சேர்த்துக் கொள்ளவும்.

வாணலியில் எண்ணெய் விட்டு, கடுகு, உளுத்தம் பருப்பு, பெருங்காயம் போட்டு அரைத்த விழுதை சேர்த்து வதக்கவும். விழுதை ஆறவைத்து உருட்டிக் கொள்ளவும். கொழுக்கட்டை மாவில் சொப்பு செய்து பூரணம் வைத்து, ஆவியில் பத்து நிமிடம் வேகவைத்து எடுக்கவும்.

இது மிகவும் இரும்புச் சத்து உள்ள கொழுக்கட்டை. கீரை சாப்பிட அடம் பிடிக்கும் குழந்தைகளும் பெரியவர்களும் விரும்பிச் சாப்பிடுவார்கள்.

- மாலா விஸ்வநாதன், சேலம் 15

இறைவனிடம் கையேந்துங்கள்!

செப்டெம்பர் - 10ம் தேதி ரம்ஜான் திருநாள். ரம்ஜான் கொண்டாடும் முஸ்லிம் சகோதர சகோதரிகளுக்கு இனிய நல்வாழ்த்துகள்!



திருகுர் ஆன் - இப் புனித நூலில் இருந்து:-

குழந்தைகளுக்குப் பாலூட்டுவது என்பது வாழ்க்கையுடன் இணைந்தது. தலாக் (விவாகரத்து) தவிர்க்க முடியாததாகி விட்டால்கூட பிறந்த குழந்தைக்குப் பாலூட்ட ஏற்பாடுகள் செய்ய வேண்டியது தந்தை (அ) அவரைச் சேர்ந்தவருக்குப் பொறுப்பாகும். (திரு குர் ஆன் பக்கம் - 37) இறந்துவிட்ட பெற்றோரோ, உறவினரோ விட்டுச் சென்ற சொத்தில் இருந்து, ஆண்களுக்கு பாகம் இருக்கிறது. பெண்களுக்கும் பாகம் இருக்கிறது என்று பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னரே பெண் இனத்துக்கு நீதி வழங்கியது இஸ்லாம் மதம்.

பெண் குழந்தை பிறப்பானது, பல நாடுகளிலும் வெறுக்கத்தக்கதாக முன்பு இருந்தது. இந்தச் சூழலில், பெண் குழந்தை பிறப்பதை நற்செய்தி எனக் கூறுகிறது குர் ஆன். அதுவும் தலைச்சன் குழந்தை பெண் என்றால் பரக்கத்-பாக்கியம் ஆகும் என பெருமானார் (ஸல்) கூறியுள்ளார். ''பெண் குழந்தைகளை வெறுக்காதீர்கள். நான் பெண் குழந்தைகளின் தந்தை'' என்கிறார்.

'தாயிடம் அன்பு காட்டி நல்லது செய்யுங்கள்' என தாயை மாத்திரம் அல்லாஹ் பிரத்யேகமாகக் குறிப்பிடுவதிலிருந்து தாய்க்கு நாம் ஆற்ற வேண்டிய கடமைகள் அதிகம் எனப் புரிகிறதல்லவா?

-மாலதி மணியன்,
புதுச்சேரி

படு ஸ்மார்ட் அம்மாக்கள்!

பிறந்தவுடன் குழந்தை அழுவது மகிழ்ச்சி. ஆனால், குழந்தைகள் வளர வளர அழுகை, அடம் அதிகமாகும். சில சமயம் கைக் குழந்தைகள் விடாமல் அழும்பொழுது, வீட்டிலுள்ளவர்கள் ஆளுக்கொரு வைத்தியமும், அட்வைஸும் கொடுப்பார்கள்.

''சட்டையை அவிழ்த்துப் பார், எறும்பு கடிச்சுடுச்சோ?''

''தூக்கும் சமயம் கையோ, கழுத்தோ சுளிக்கிடுச்சோ?

''பால் குடிக்க மாட்டேங்குதா? வயிற்று வலியோ என்னமோ, நீ மருந்துக் காரம் கொஞ்சம் அதிகமா சாப்பிடு. எதுக்கும் டாக்டரிடம் காண்பி'' என பெரியவர்களேயே ஆட்டிப் படைக்கும் குழந்தையின் அழுகை...

அது அந்தக் காலம், அதுவும் எங்கக் காலம். கர்ப்ப சமயத்தில் அப்பொழுது நாங்கள் ரொம்ப அசட்டையாக இருந்துவிட்டோம். அறியாமை மட்டுமல்ல, இப்ப மாதிரி டெக்னாலஜியும் வளரவில்லை. அது மட்டுமல்ல, கூட்டுக் குடும்பம் என்பதால் மற்றவர்களைச் சார்ந்தே இருந்துவிட்டோம்.

ஆனால், இந்தக் காலத்து அம்மாக்கள் ரொம்ப புத்திசாலிகள். தன்னையும் கவனித்துக்கொண்டு வயிற்றில் வளரும் குழந்தையின் ஆரோக்கியத்திலும் அக்கறை எடுத்துக் கொள்கிறார்கள். ஏதாவது தெரியலையா, சந்தேகமா? அதான் இருக்கவே இருக்கே இன்டர்நெட்!

இன்ஜினியரிங் முடித்து ஆஃபீஸ் வேலை, அரட்டை, தூக்கம் என வெகு செல்லமாக வளர்ந்த என் மச்சினர் மகள், திருமணம் திடீரென செட்டிலாகி அமெரிக்காவில் குடித்தனம். 'எப்படித்தான் சமாளிப்பாளோ? குழந்தை மாதிரி அவள், எதுவுமே தெரியாதே' என நாங்கள் குழம்ப, அந்தக் குழந்தைக்கு இப்ப ஒரு குழந்தையும் பிறந்துள்ளது. குழந்தை வளர்ப்பு, ஆஃபீஸ் வேலை, வீட்டு வேலை, வித விதச் சமையல் என கலக்குகிறாள்.

மிகச் சூடான நீர், குழந்தையின் சருமத்துக்கு நல்லதல்ல; முகத்துக்குப் போடும் அந்த அளவுச் சூடே, தலைக்குக் குளிக்க வைக்கும் பொழுது போதுமானது.'



'குழந்தை கீழ் உதட்டை அடிக்கடி கடித்துக்கொண்டால், பயப்பட வேண்டாம், குழந்தையின் கீழ் வரிசைப் பல் வரும் இடம் கெட்டியாகிறது, அதனால் நெருடலாகி கடித்துக் கொள்கிறது' என இதுபோன்ற ஏராளமான தகவல்களை இன்டர்நெட் தருவதால் இளம் அம்மாக்கள் படு ஸ்மார்ட் அம்மாக்களாகி விட்டனர்.

- ராதா நரசிம்மன், பெங்களூர்

ஹாய், காலேஜ் பாய்ஸ் அண்ட் கேர்ள்ஸ்!

போட்டிக்குத் தயாரா?

யூத் எடிஷன் பக்கங்கள்

உங்களுக்குக் 'கடி'க்கத் தெரியுமா? 'கடி'ன்னா சும்மா வெடி மாதிரி அதிர வைக்கணும். அடுத்த இதழ் தீபாவளிச் சிறப்பிதழ். அதனால சிரிப்பு வெடியைக் கொளுத்திப் போடுங்க...

படபடவென வெடிக்கிற 'டாப் டென்' கடிகளுக்கு தீபாவளிச் சிறப்புப் பரிசாக ரூபாய் 250/- வழங்கப்படும்.

உங்க படைப்புகளை 77080 60341 என்ற எண்ணுக்கு எஸ்.எம்.எஸ் மூலமாகவும் mangayarmalar@kalkiweekly.com என்ற ஈமெயில் ஐடிக்கும் அனுப்பலாம். இங்கு கொடுக்கப்பட்டுள்ள (short code) 562632 என்ற எண்ணுக்கும் அனுப்பலாம்.

கடைசித் தேதி 15.9.2010

ஹாய் ஃப்ரெண்ட்ஸ், இனிமே நீங்க MMPCL (space) உங்கள் கவிதை, ஜோக்ஸ், மொக்கை (space) உங்கள் பெயர் இவற்றை டைப் செய்து 562632 என்ற எண்ணுக்கு எஸ்.எம்.எஸ் அனுப்புங்க.



புதுசா ஒரு சிம் ரிலீஸ் பண்ணியிருக்காங்கப்பா. அதுபேரு கூட... ஸ்பேஸ் டெல். சிம் கார்டு 59 ரூபா. 999 ரூபாய்க்கு பேசிக்கலாமாம். கால்ரேட் 10 பைசா தானாம். மாசம் 12,000 எஸ்.எம்.எஸ் ஃப்ரீயாம். லைஃப் டைம் வேலிடிட்டி வேற... ஆனா ஒரே ஒரு கண்டிஷன்பா.. டவர் நீங்கதான் நட்டுக்கணும்... ஹி...ஹி...

(உன்னதான் தேடிட்டிருக்கேன்.)

-பி. கணேஷ்வரி,பி.இ. இறுதியாண்டு, சேது தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம், கரியப்பட்டி, விருதுநகர்

ஹாய்... என்னை இன்னும் ஒரு மாசத்துக்கு நீங்க பார்க்க முடியாது. ஏன்னா நான் அமெரிக்கா போறேன். வேற ஒண்ணுமில்ல. வெள்ளை மாளிகைக்கான வாடகை பணம் இரண்டு மாசமா வரலை. அதான் கலெக்ஷனுக்குப் போறேன்.

(பயபுள்ள... படு தைரியமா இப்படி ஒரு மெசேஜ் அனுப்பியிருக்கேன்னு பாத்தா பேரே அனுப்பல!)



பூஞ்சாரல் பக்கங்கள்



''அவரு ரொம்ப சின்சிய ரான போலீஸ் ஆச்சே. ஏன் சஸ்பெண்ட் செஞ்சாங்க.''

''அவசரமா போன ஆம்பு லன்ஸை நிறுத்தி ஆயிரம் ரூபா அபராதம் போட்டுட் டாராம்.''

- ஆர். அம்பிகா, பி.இ. இறுதியாண்டு, தியாகராஜர் பொறியியல் கல்லூரி, மதுரை



''Tea'க்கும் 'Coffee' -க்கும் என்ன வித்தியாசம்?''

''தெரியலியே...''

''Tea'- -ல ஒரு 'e' இருக்கும். 'Coffee'-ல இரண்டு 'e' இருக்கும். அதனால பார்த்துக் குடியுங்க... ஓ.கே...''

(ஹி...ஹி.... நாங்க எப்பவுமே பருத்திப்பால்தான்...)

- ஷர்மிளா மைத்ரேயி, பி.எஸ்ஸி, இறுதியாண்டு, டபிள்யு. சி.சி. பெண்கள் கிறித்துவக் கல்லூரி, சென்னை



''என்ன சார், என் பொண்ணு கிளாமரா வரலேன்னு திட்டினீங் களாமே?'

''நாசமா போச்சு. நான் அவளுக்கு கிராமர் வரலேன்னு திட்டினேன்.''

-மணிகண்டன் பிரபு, எம்.பி.ஏ, பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சி



''நீங்க மணிக்கு எத்தனை கிலோமீட்டர் வேகத்துல கார் ஓட்டுவீங்க!''

''யார் அது மணி? அவனுக் கெல்லாம் நான் கார் ஓட்றதில்லே.''

- சிந்து, ஏழாம் வகுப்பு, ஸ்ரீவில்லிபுத்தூர்



ஒரு ஊர்ல அப்படி, இப்படின்னு இரண்டு பேரு. ஒருநாள் அப்படி ''எப்படி இருக்கீங்க''ன்னு கேட்டார்.



இப்படி, ''எப்படியோ இருக்கேன்னாரு.'' ''இப்படி சொன்னா எப்படி! அப்படி இருக்கேன். இல்ல இப்படி இருக்கேன்னு'' சொல்லுங்கன்னாரு.

உடனே இப்படிக்கு அப்படி ஒரு கோபம். ''நான் எப்படி இருந்தா உனக்கென்ன. அப்படி... அப்படி நான் இருக்கேன்னு சொல்ல நினைச்சாலும் நீ எப்படி கேட்ப?''

இது எப்புடி? (செம்..........ம கடி...)



அப்படி... இப்படி... எப்புடி?



''சுரேஷ்... ஐ'ம் கோயிங்' அப்படின்னா என்னடா?''

''நான் போறேன்.''

''டேய்...டேய்... ப்ளீஸ்டா... கொஞ்சம் மீனிங் மட்டும் சொல்லிட்டு போடா...ப்ளீஸ்...''

–ஏ. பவானி சங்கீதா, பி.சி.ஏ மூன்றாமாண்டு, இஸ்லாமியா பெண்கள் கல்லூரி, வாணியம்பாடி



குண்டூசி எவ்வளவு ஒல்லியா இருக்கு. அப்புறம் ஏன் அதை குண்டூசின்னு சொல்றோம். யோசிங்க நீங்களும் அறிவாளி ஆகலாம்.

(கல்யாண மண்டபத்துல கல்யாணம் நடக்கும். காந்தி மண்டபத்துல காந்தி நடப்பாரா? ஹி...ஹி... எங்களுக்கும் தெரியுமில்ல)

- ஆர். ரேவதி, பி.இ. மூன்றாமாண்டு, அரசு பொறியியல் கல்லூரி, கும்பகோணம்


'A' 'B'க்கும் போரடிச்சா என்ன செய்யும்?
'CD' போட்டு பார்க்கும்.
'E' 'F' க்கும் உடம்பு சரியலன்னா?
'GH'க்குப் போகும்.

-எஸ்.எம். தங்கம், பிபிஏ முதல் வருடம், உதயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கன்யாகுமரி



எங்கு பார்த்தாலும்
காதலர்கள்...
என்னைதான் காதலிக்க
யாருமில்லை...
திரும்பினால்...
அட, என்னையும்
காதலிக்கிறதே...
என் நிழல்...

- காயத்ரி, பி.காம், இரண்டாமாண்டு, என்.ஜி.எம். கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பொள்ளாச்சி





இனிய இரவில்
ஜில்லென்ற
பனிக் காற்றில்
நீ உறங்கும் நேரம்
கொசு கடித்தால்
நான் என்ன செய்ய முடியும்...
ஸோ... சொறிஞ்சுட்டு
தூங்குங்க.
(நான் தூங்கவேயில்ல!)

- ம.ஹரிகிருஷ்ணன், பி.காம், இரண்டாமாண்டு, முகம்மது சதக் கல்லூரி, சோழிங்கநல்லூர்

தத்துவமும்... பித்துவமும்!



"1000 கிலோ ஒரு டன். 3000 கிலோ த்தனை டன்? சொல்லு..."

"தெரியலே..."


"டன்...டனா...டன்..."

-எஸ். பிருந்தா,
மூன்றாமாண்டு பி.காம், எல்.டி.என்.பி.
வைஷ்ணவ் கல்லூரி, சென்னை



உலகத்துல
உனக்கென யாரும்
இல்லாம இருக்கலாம்.
ஆனா யாரோ
ஒருவருக்கு நீயே
உலகமா இருக்கலாம்.
(அதனால என்ன சொல்ல வர்றீங்க?)

- வி.கே. பத்மப்ரியா, எம்.எஸ்ஸி,
கணிதம், திரு.வி.க. அரசு கலை
கல்லூரி, திருவாரூர்



கடவுளுக்கும் மரணம் வரும்...
மனிதனுக்குத் தன்னம்பிக்கை பிறக்கும்போது.

- பெரியார்

- சரண்ராஜ், பி.எஸ்ஸி,
மூன்றாமாண்டு,
நேதாஜி சுபாஷ்
சந்திரபோஸ் கலை மற்றும்
அறிவியல் கல்லூரி,
மூத்தமங்கலம்,
திருவாரூர்



முள்ளின் திறமையைப் பார்
காலால் மிதித்தவனை
கையால் எடுக்க வைக்கிறது.
(ஓ...இதான் பஞ்ச் டயலாக்கா...?)

- கௌஷிக்,
முதலாமாண்டு பி.இ, கே.சி.ஜி
தொழில்நுட்பக் கல்லூரி, சென்னை



''ஐ டோண்ட் நோ!

கோபு, பாபு இரண்டு பேருக்கும் ஆங்கிலம் தெரியாது. ஒருநாள் அவங்க டூர் போனாங்க. முதல்ல தாஜ்மஹாலுக்குப் போய் பார்த்தாங்க. அங்க நின்னுக்கிட்டு ''ஸார்... இத யாரு கட்டினது?''ன்னு பாபு, அங்க இருந்த வெளிநாட்டுக் காரர்கிட்ட தமிழ்ல கேட்டான். அவர் அதுக்கு ''ஐ டோண்ட் நோ''ன்னு சொல்லிட்டுப் போயிட்டாரு.

அடுத்து, மைசூர் அரண்மனைக்குப் போனாங்க. ''டேய் பாபு, சூப்பரா கட்டி யிருக்காங்கடா... ஆனா கட்டினது யார்னு தெரியல''ன்னு சொல்லிட்டே அங்க இருக்கற ஆங்கிலேயன் கிட்ட கேட்டான். அவருக்கிட்டேயிருந்தும் ''ஐ டோண்ட் நோ'ன்னு பதில் வந்தது.

''டேய், அந்த 'ஐ டோண்ட் நோ' ரொம்ப சூப்பரா கட்டியிருக்கான்டா''ன்னு பேசிக்கிட்டாங்க. வழியில ஒரு சாவு ஊர்வலம் போய்ட்டிருந்தது. அதைப் பாத்து இரண்டு பேரும் அங்க இருக்கற ஜனங்கள்ல ஒருத்தன்கிட்ட, ''செத்துப் போனது யாரு?''ன்னு கேட்டான். அவங்க தமிழ் அவனுக்குப் புரியல. அவனும் 'ஐ டோண்ட் நோ'ன்னு சொன்னான். இதைக் கேட்ட இவங்க, ''டேய் பாவம், அந்த 'ஐ டோண்ட் நோ' எல்லாத்தையும் அழகா கட்டிட்டு இப்படி செத்துட்டான்பா''ன்னு சொல்லி வருத்தப் பட்டாங்களாம். இந்த மாதிரி உங்க ஏரியா வுல யார்னா இருக்காங்களா?

(ஐ டோண்ட் நோ!)

- ஜி.ஐஸ்வர்யா, பி.எஸ்ஸி, முதலாமாண்டு,
கம்ப்யூட்டர் சயின்ஸ்,
சோகா இகேடா மகளிர் கலைக் கல்லூரி,
புழல், சென்னை



''அம்மா, அந்த சிவப்பு கலர் வெடியை வெடிச்சா நல்லா சத்தம் வருமா?''

''அட அசட்டுப் பயலே! அது கேஸ் சிலிண்டருடா!''

- சுரேஷ் குமார், டி.எம்.இ,
இரண்டாமாண்டு, ஸ்ரீ ரெங்கேஸ்வரா
பாலிடெக்னிக் கல்லூரி, பொட்டி
ரெட்டிப்பட்டி, நாமக்கல்

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

திருமண மலர்





கொழுக்கட்டை செய்யும்போது வெல்லப்பூரணம் சற்றுத் தளர இருந்தால்,ஒரு கை அரிசி மாவு போட்டு கலந்துவிட்டால் பூரணம் இறுகி விடும்.

- பி.பாலாஜிகணேஷ், கோவிலாம்பூண்டி

இப்பொழுது வரும் ஐந்து ரூபாய் நாணயம் ஐம்பது காசு நாணயம் போல் மெல்லியதாக இருக்கிறது. இதனால் வயதானவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். காசின் அளவைப் பெரிதாக்கலாம். அல்லது எழுத்தாவது சரியாகத் தெரியும்படி அச்சடிக்கலாம். செய்யுமா வங்கி நிர்வாகம்?

- பிரேமா சாந்தாராம், சென்னை

சுத்தமான நல்லெண்ணெய் இரண்டு சொட்டு மூக்கில் விட்டுக் கொண்டால், மூக்கடைப்பு போய்விடும். முதல் சொட்டு விட்ட பிறகு, சிறிது நேரம் கழித்து பின் இரண்டாவது சொட்டினை விடவும்.

- காசிதாசன், வந்தவாசி

ஒரு கப் வெந்தயக் கீரையை, நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சவும். அதைத் தலையில் தேய்த்து ஊறி, சீயக்காய்த்தூள் போட்டு அலச, வழவழப்பான கருங்கூந்தல் அமையும்.

- சரஸ்வதி, ஈரோடு

பாயசத்துக்கு திராட்சைக்குப் பதிலாக, பேரீச்சம் பழத்தை நறுக்கிப் போட்டால், சுவை வித்தியாசமாக இருப்பதோடு சத்தும் நிறைந்திருக்கும்.

- வசந்தி மதிவாணன், அரூர்

மிளகாய்த் தூளில் சிறிது கல் உப்பைப் போட்டு வைத்தால், விரைவில் கெட்டுப் போகாது.

- டி. நிர்மலா தேவி, மதுரை

கடுகு எண்ணெயில் கறுப்பு உப்பு கலந்து, கால் பாதத்தில் சூடு பறக்கத் தேய்த்தால், கால் வலி, கால் கடுப்பு உடனடியாகக் குறையும்.

- எஸ். விஜயலக்ஷ்மி, இந்தோர்

இட்லிப்பொடி காரமாகி விட்டதா? ஒரு கைப்பிடி பொட்டுக்கடலையை அரைத்துச் சேர்த்தால், காரம் குறையும்.

- சங்கீதா சுந்தர், தேனி

பிளாஸ்டிக் பூக்களைக் கழுவும்போது நீரில் இரண்டு சொட்டு ஷாம்பு விட்டு, பூக்களைக் கழுவினால் வாசம் பிரமாதமாக இருக்கும்.

- கி. மஞ்சுளா, திருவாரூர்

இவை எல்லாமே ஆஹா 50 தான்!


Sri Karpagambal
Catering Services
QUALITY & DELICIOUS VEG FOOD
Specialist in South Indian, North Indian & Chinese
Video & Photograph in broadcast Quality
Sp.Cofee, Tea, Tiffin, Lunch Varieties, Seer for Bride & Grooms, Beetle Leaves, Rashiklal Beetle Nuts, Beeda, Aarti, Pachaipudi Arrangements, Kasi Yatra, Bridal Mat, Groom Seer Items
Kolam, Grush, Vaidega, Angumani, Musical Insttruments Garlands & Loose Flower Bridal Make-up "Thanks" Bags & Gifts
We arrange Kalyana Mandapam also
Contact: R.MADHUSUDANAN
156, (old # 79), R.K. Mutt road, Chennai - 600 028 (Opp BSS Hospital)
E-mail : always_mathan@yahoo.co.in | www.srikarpagambalcatering.com
Mobile : +91 98412 66844 Tel : + 91 44 24641110



1. தேஜஸ், கீர்த்தி முதலியன
2. பசு, சேவகர் முதலியன
3. பகையழிவு
4. கல்வி
5. ஐஸ்வரிய விருந்தி
6. நிலையான செல்வம்
7. குபேரன் ஆசி
8. தரித்திரம் நீங்கும்
9. தான்ய விருத்தி
10. வாக்கு சாதுர்யம்
11. வம்சம் செழிக்கும்.
12. பதவி உயர்வு கிடைக்கும்.

சகலமும் தரும் ஸ்ரீ ஸூக்தம்!


நவராத்திரி என்றாலே தேவியின் மங்களகரமான உருவம் எல்லோர் மனதிலும் நிறைந்து நிற்கிறது. நவராத்திரி நன்னாளில் லலிதா ஸஹஸ்ரநாமம், ஸ்ரீ சௌந்தரிய லஹரி மற்றும் த்ரிசதி, மகாலக்ஷ்மி அஷ்டோத்ரம் முதலியவை சொல்வதும், விளக்குப் பூஜை செய்வதும் மிகப் பெரிய மனநிறைவை அளிக்கும். ஸ்ரீஸூக்தம் என்பது மகாலக்ஷ்மியின் அனுக்கிரஹத்தைப் பெறக்கூடிய அற்புதமான ஸ்தோத்திர மாகும். இதை நவராத்திரி வேளையிலும் தினந்தோறும் பாரா யணம் செய்து வந்தால் சகல சௌபாக்யங்களும் பெற்று வாழலாம்!

ஸ்ரீ ஸூக்தத்தில் உள்ள ஒவ்வொரு ரிக்கும் ஒவ்வொரு பலனைக் கொடுக்கும். பதினைந்து ரிக்குகளுக்கான பலன்கள் இதோ:-

13. வாகன யோகம்.
14. ராஜயோகம் வந்து சேரும்.
15. கல்வி முதலிய செல்வங்கள்

--கீதா கோபாலகிருஷ்ணன், பூனே

குரு கிருபா



அசத்தலான உயர்தர திருமண சமையலுக்கு

SCS

சரஸ்வதி கேட்டரிங்



SREE SAI DHARSHINI MAHAL

New Kalyana Mandapam fully Airconditioned

Booking open

Hall - 300 Dining - 100

91A, Abu Sali St, Saligramam, Ch-93.

044-23765490, 9840054900



EXIT FROM TENSION
ENJOY THE FUNCTION

Ungalukkagawae Naanga Irukom

SARASWATHI CATERING SERVICE

Insuvai Vendan G. Subramani Iyer

No.65, (old no. 30), Subramanian St., West Mambalam, Chennai - 33.
Off: 24742433 / 23719535 Cell: 98400 54900 Tele Fax: 24742433
Branch off: Coimbatore Ph: (0422) 2343710
E- Mail: insuvaivendhan@yahoo.com www.saraswathicateringservice.com

We undertake Marriage Catering all over India

மணமகன் தேவை



V.S.RAAMAKRISHNAN, B.Tech

◆◆ Iyer, Brahacharanam, Athreyam, Anusham, 28/169 Cms, B.Tech, Siemens Co. 25,000/- p.m, slightly attacked Polio Left leg, boy seeks graduate Brahmin girl, professionally employed. Sub-sect no bar. Contact: 9942926778/ 9841404510. Box No. 17040

R.HARISH, B.E.,



◆◆ Iyer, Vadamal, Bharadwajam, Magam, 28.06.1979/165 cms, 55 Kgs, fair, B.E., Computer (MBA), MNC Bank, 6 Lakhs per annum, clean habits, owns flat, seeks suitable employed/employable bride. 044-2472 1667. Box No. 17042



SHYAM, M.B.A,

◆◆ Bharadwaja, Uthirattadi, Vadama, Subsect no bar, 165 cm, DOB 10.04.75, Insulin Dependent Type 2, MBA, Newzealand resident, Canada employed-Editor, Legal Publication-Toronto. Well to do, seeks bride, any south Indian Brahmin, healthy, cultured, educated, willing to go abroad, born not later than 1981. Horoscope optional, simple marriage. Ph: 044-24363439, email:subkalyan@gmail.com, response from professionals, qualified Nurses and Teachers welcome. Box No. 17073

◆ Iyer, Brahacharanam, Shadamarshanam, Mrigaseerisham, Padam-2, Rishabam, 5'8", 26.06.1976, M.C.A, Senior Analyst, MNC, Chennai, Rs.70,000/- p.m, fair, needs suitable fair alliance, PG/Prof qualified, employed or not, age dif 4-6 years, sub-sect no bar. Contact: 04362-279030. Cell:9500608366. Box No. 17021

◆ Iyer, Brahacharanam, Bharatwajam, Punarpoosam, Nov'77, 185 cms, CA(Inter), IT, MNC, Hyderabad, 7 Lakhs P/A seeks suitable alliance. Contact: Balasubramanian - 040-27719561. Box No. 17022

◆ Iyer, Ashtasahasram, Vadoolam, Moolam, 32/5'11", CA, ICWA, ACS, working MNC, 12 L p.a, having own house, seeks homely educated, employed/unemployed girl. Subsect no bar. Ph:9884398109/24511943. Box No. 17023

◆ ஐயர், வடமாள், கௌண்டின்யம், உத்திரட்டாதி, 41, 6'0", 10,000/-pm, மணமாகாத வரனுக்கு, வேலைக்குச் செல்லும் மணமாகாத 35 வயதுக்குள் பெண் தேவை. போன்: 9940544005, 044-24612466. பெட்டி எண்: 17024

◆◆ குறியிட்ட திருமண விளம்பரங்களை மங்கையர் மலரின் இணையதளத்திலும் காணலாம். இதனுடன் சேர்த்து இணையதளத்திலும் வெளியிட கூடுதல் கட்டணம் ரூ.100 மட்டுமே.

Our Website:www.mangayarmalaronline.com

◆ Wanted homely Brahmin girl, plus 2/Graduate for Delhi, Iyer boy, aged 42, earning two lakhs forty thousand yearly. Contact: 09899367639, 01242360070. Box No. 17025

◆ Vadakalai, Iyengar, Srivathsam, Rohini, September 1984, fair, 6'2", B.E (Mech), employed, TVS, Hosur, Sr.Er, 5 Lakhs/Annum seeks suitable bride B.E/PG, employed. Ph: 0431-2481571; srikamalsaran@yahoo.co.in Box No. 17026

◆ Iyer boy seeks suitable bride preferably working, 30 to 33, height 5.3' to 5.5', Vadamal, Srivatsa, Tiruvonam, 37, height 5'7", M.Com, Accountant Pvt.Co, Rs.15,000/- p.m, at Nagpur 0712-2220595. Box No. 17027

◆ Iyer, Vadamal, Srivathsa, Bharani, 25 years, 5'9", BE (E.C.E), Software Engineer, Bangalore, Rs.30,000/- p.m, seeks bride above 5'3", Engineer/Professional. Contact: 9843123357. Box No. 17028

◆◆ Iyer, Ashtasahasram, Koundinyam, Moolam, 1984 born, 5'8", B.E., SW Engineer, WIPRO, Bangalore, seeks good looking graduate bride from good family. Subsect no bar. Contact: 09994821408. ssmatri:92977. Box No. 17029

◆ Ashtasahasram, Kasyapa, Punarpoosam, Jan '79, MCA, MPhil, Deputy IT Officer reputed concern, 16,000 p.m, seeks graduate employed/non employed girl 3-4 years difference god-fearing decent family. Subsect no bar. Box No. 17030

◆ Iyer, Vadamal, Garga, Kettai-1, 33, 5'11", Plus two, ITI electrician, private company, Chennai, 10,000 p.m, own house seeks any Brahmin SSLC bride. No expectations, simple marriage. Contact: 044-24760057. Box No. 17031

◆ Saiva Vellala groom, 27 years, 6 feet, M.Pharm, Research Scientist, MNC, Pharma Company, Bangalore, 3.8 lakhs p.a, star Avittam seeks smart bride from decent family. Contact: 09381029427. Box No. 17032

◆ Iyer, Vadama, Srivatsa, fair, 29 (Maham), 5.11", B.Sc/MBA, FLSMIDTH (MNC), 5 lakhs p.a, no expectations seeks degree any Brahmin girl. Refer ID.M/1809580/80, 0431-3206870, 9345149918. Box No. 17033

◆ Madhwa Desistha, Kashyapa Gothram, Nov 1977, Uthrattadhi, 165 cms, M.Sc, self employed, 17,000 p.m. sub-sect acceptable seeks suitable bride. Cell: 9444892568. Box No. 17034

◆ Madhwa Desistha, Kashyapa Gothram, Aug 1970, Moolam, 160 cms, Plus Two, movement clerk, 12,000/- p.m. Sub-sect acceptable seeks suitable bride. 9444892568. Box No. 17035

◆ Tamil Iyer, Vadamal, Koundinyam, Poosam, 31/180. B.Sc, CCNA, 2.5L/p.a, seeks Vadamal, graduate (BA, B.Sc, B.Com) girl from good family. No expectations. Contact: 044-24611053. Box No. 17036

◆ Srivathsam, Thengalai Iyengar, Punarpoosam-4, 33, V.F, 5'8", M.Com, SAP FICO employed in MNC, Chennai, salary 25,000/- seeks graduate, employed or unemployed bride. Subsect no bar. Contact: 22273200. Box No. 17037

◆ Iyer, Brahacharanam, Srivatsam, Kettai (1), April 75, 170 cms, M.Sc, M.Phil, Group Leader Pharma R&D, 20,000/-p.m, seeks graduate Iyer girl, any subsect, employment optional, contact: Padmanabhan 26379048. Box No. 17038

◆தேவாங்க செட்டியார், கொசனம், பாங்க் ஆபீஸர், நட்சத்திரம் மூலம், 29 வயது, நல்ல குடும்பப்பாங்கான பெண் 24-27 வயது. தொடர்புக்கு: 98940- 25228. பெட்டி எண்: 17039

◆ Kerala Iyer, Vadama, Koundinyam, Krithigai (3), 34/160, B.Sc Computer/Information and Communication Technology, CEO in IT firm, monthly 30,000/- only son, clean habits, excellent family background seeks suitable simple bride, Iyer/Iyengar, Simple marriage, no demand. Contact: 044-24933409. Box No. 17041

◆ Iyer, Vadamal, Srivathsa Gothram, 26,5'10", Uthradam, Magaram, B.Tech, S/W. Engineer, Finland, seeks graduate pleasant looking homely girl. Ph:09884023794. Box No. 17043

◆ Iyer boy, Vadamal, Haritham, Revathi, 30/171, M.Com, MBA, working Bombay Rayon,

திருமண மலர் - விளம்பரக் கட்டண அறிவிப்பு

திருமண மலர் விளம்பரக் கட்டணம் முதல் 30 வார்த்தைகளுக்கு ரூ.500/-
அதிகப்படியான வார்த்தை ஒவ்வொன்றுக்கும் ரூ.15/- வண்ணத்தில்
'ஹைலைட்' செய்ய ரூ. 100/- கூடுதலாக அனுப்பவும்.
வண்ணப் புகைப்படத்துடன் (1'X1") வெளியிட ரூ.800/- இத்துடன்,
www.mangayarmalaronline.com
என்கிற மங்கையர் மலரின் இணையதளத்திலும் சேர்த்து
விளம்பரம் வெளியிட, கூடுதல் கட்டணம் ரூ.100/-

Bangalore, very fair, seeks any Brahmin girl from respectable family. Mob:09980559829, e.mail:pks45@sify.com Box No. 17044

◆ Iyer, Brahacharanam, Shadamarshanam, Poorattadhi, 37, B.Com, B.Ed, Business in Trichy. Monthly income Rs. 15,000/- to 20,000/-, seels suitable bride. Ph: 954333-261029, 9443996458. Box No. 17045

◆ Iyer, Vadama, Srivatsam, Poosam(2), fair, 1983/6'/M.Com PGDBA, TCS, 3.5 lakhs p.a, own house at Chennai seeks traditional, orthodox graduate employed/ unemployed, tall, good looking girl having brother. Subsect acceptable, refer TM ID.M.1769856. Contact: (044)24936142/9840817682. Box No. 17046

◆◆ Madhwa Kannada Brahmin, Bharadwaja, Thiruvonam, 5'9"/29/fair, B.Sc, MCA, working MNC, Boston, USA, monthly salary Rs.3 lakhs seeks graduate, p.G, employed/ unemployed girl. Contact: 0462 - 2339673, 9486963831. Box No. 17047

◆◆ Iyer, Vadamal, Maham, Koundinyam, 34, B.Com, D.C.A, (MBA), Dy.Manager, HDFC Bank, Chennai, Salary Rs.40,000/- p.m, seeks suitable educated, employed, bride. Contact: 044-65446849. Web:www.ssmatri.com, ID.93616/76. Box No. 17048

◆ V.G.Karthik, B.Com, Iyer, Brahacharanam, Sankruthi gothram, Thiruvadirai, 1980, 180 cms, HSBC, BPO, Hyderabad, 25,000/-p.m, seeks graduate from good family. Ph:040-23830554, Cell:09866285312. Box No. 17049

◆◆ Iyer, Brahacharanam, Baradhwajam, C.A, Poosam, 175 cms, fair, Nov 1971, belonging to a respectable family, working as Director- Finance in MNC in Dubai, seeks homely girl, working/non working from good family. Phone: 044-24311995. Box No. 17050

◆ Iyer, Brahacharanam, Sadamarshanam, Thiruvonam, MBA, 33 years, 160 cm (Slim), L&T, Chennai, 3.2 lakhs p.a, seeks alliance from employed/unemployed girls. Cont: 9940267783, 9840384813. (Having own house in Porur). Box No. 17051

◆ Iyer, Vadamal, Kashyaba, Thiruvathirai, 36 years, tall and fair, DME, MNC, Chennai, salary 3 lakh p.a seeks suitable girl. Cont: 9486633654, 9444447487. Box No. 17052

◆ஐயர், வடமாள், கௌசிக, புனர்பூசம், 32/5'5", பி.எஸ்ஸி, தனியார், 20,000/-, எந்தக் குறையும், எந்த எதிர்பார்ப்புகளும் இல்லாத அழகான பையனுக்கு மணப் பெண் தேவை. தொடர்புக்கு: 99629 - 97319, 9791144854. பெட்டி எண்: 17053

◆தஞ்சாவூர் சைவப்பிள்ளை, வயது 27, அவிட்டம், மகர ராசி, BE (ECE), MNC வேலை, பெங்களூர், நன்கு படித்த நல்ல வேலையில் உள்ள நல்ல குடும்பப்பாங்கான மணமகள் (சைவம்) தேவை. Cell:9600972433, Landline: 0427-2387127 பெட்டி எண்: 17054

◆ Iyer, Haritham, Thiruvonam, Brahacharanam, 31/176, B.Tech (IIT), MS(USA), Employed Boston presently will settle in India, seeks qlfd. girl TM M1999712. Contact: 09831396247/anandiyer_79@yahoo.com Box No. 17055

◆ஐய்யர் (பாலக்காடு), BA 1974/185, அழகும், பண்பும் உள்ளவர். சென்னையில் சார்டர்டு பாங்கில் ஆபீசர், 8 லட்சம், பட்டதாரி பிராமண மணமகள் தேவை. Tamil Matrimony M 1986597/ssmatrimony.com 91818174. Ph: (044) 22238818/ 9841843484. Box No. 17056

◆ Iyengar, Thenkalai, Vadhoolam, Pooradam-2, Oct '1979, 177cms, B.A (CS), MBA, Asst.Manager, Reliance General Insurance, Rs.36,000/-p.m, seeks Gr/PG employed girl. Cell: (0)9962006668 Ph:044-28444597. Box No. 17057

◆ Iyer, Vadamal, Koundinyam, Kettai, 6.2', born Jan 1981, C.A, Executive Public Ltd Company, drawing very good salary seeks suitable tall girl employed/unemployed.

இந்த இதழில் பிரசுரமாகும் பெட்டி எண் விளம்பரதாரருக்கு பதில்கள் அனுப்ப கடைசி தேதி: 10.10.2010. பதில்கள் அனுப்ப வேண்டிய முகவரி: பெட்டி எண்:................ C/o மங்கையர் மலர், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.

Subsect no bar. N.Ganapathy, 044-22533745, 9840680632. Box No. 17058

◆◆ Iyer, Brahacharanam, Bharadwaj, Ashwini, 28, MCA, 161 cms, Chennai, S/W Engr, 3.5 lakhs, seeks professionally qualified, employed girl, Contact:9940631041/9840456604, ssmatri-93102, TM ID:M1924294. Box No. 17059

◆ Tirunelveli Saiva Pillai, settled in Mumbai, Jan '76, MBA, 180 cms, One lakh p.m, Avittam, Kumbam, contact: 9841939448. Box No. 17060

◆◆ Iyer, Srivatsa, Ayilyam 4, Mars in 8, 30/164, DEE, B.Sc, Good looking, well employed, Chennai based seeks bride. Contact: Ramakrishnan N, Ph: 0427-2403106, 9443240332 email:rushramkis@gmail.com Box No. 17061

◆ Vathimal, Srivatsam, Moolam, Nov 72/180/50,000/- p.m, B.Com, Executive Secretary Bhavan's group, Muscat (family accomodation), own flat, Chennai, no parents. Vijayalakshmi - 044-23651230, 9840127542 (or Panchapakesan 9840330531) web:www.ssmatri.com ID94554. Box No. 17062

◆ Vadamal, Bharathwaj, Visagam (2), MCA, Business Consultant, MNC, Chennai, Aug '80/5.10"/40,000/- p.m, Radhakrishnan, 0431-6546987, 9994354896 (or Panchapakesan 9840330531) web:www.ssmatri.com ID94306. Box No. 17064

◆ Vadamal, Kashyapam, Kettai, July 82/177, B.Com, ACA, DISA (Gold Medalist, both), own practice, Chennai, 1.5 lakh p.m. sub-sect no bar. Balasubramanyan, 044- 42061886, 9444021886 (or Panchapakesan 9840330531) web:www.ssmatri.com ID 94559. Box No. 17065

◆ Vadamal, Kousigam, Pooradam, March 74/170/1 lakh p.m, well-to-do family, B.Com, CPA, (From USA + Australia) Senior Manager, MNC, Chennai unencumbered divorcee. Brief marriage (6 M) seeks Brahmin bride, divorcee without issue also acceptable. Latha Natarajan - 044-43042816, 9940549513 (or Panchapakesan 9840330531) web:www.ssmatri.com ID 1378. Box No. 17066

◆ Vadamal, Koundinyam, Uthradam (1), May '83/165/BE,SWE, Belgium (on deputation) seeks Iyer professional, Venkatasubramanian, 044-64626326, 9841132519 (or Panchapakesan 9840330531) web:www.ssmatri.com ID 94104. Box No. 17067

◆ Vadamal, Athreyam, Avittam (3), June '73/169/30,000/- p.m, M.Com, PGDCA, PGDMMM Pvt, firm, Chennai, own flat, seeks graduate Iyer bride. Subramanian - 044-22240391, 9442986735 (or Panchapakesan 9840330531) web:www.ssmatri.com ID 94099. Box No. 17068

◆ Brahacharanam, Shadamarshanam, Punarpoosam (3), July

'81/161/65,000/- p.m, B.E, Software Analyst, MNC, Chennai. S.Ramamirtham, 044-42812494, 9940186168 (or Panchapakesan 9840330531) web:www.ssmatri.com ID.92546. Box No. 17069

◆ Vadamal, Kousigam, Uthirattadhi, Sep '78/175/65,000/- p.m, B.Com, GNIIT (MCA), Ramco Systems Chennai, own house. Sub-sect no bar. Natarajan - 044-26541122, 9445421122 (or Panchapakesan 9840330531) web:www.ssmatri.com ID.93147. Box No. 17070

◆ Brahacharanam, Sankrithi, Kettai (2), Apl 81/5'8"/ B.E, M.S (USA), Software, Architect, Ketucky USA, clean habits, Mother only, own house seeks Iyer professional Mrs. Janaki - 044-24730491, 9500066085 (or Panchapakesan 9840330531) web:www.ssmatri.com ID.94564. Box No. 17071

◆◆ தஞ்சாவூர், வசதியான வடமாள் ஆத்ரேயம், சுவாதி 25/172, BECS, நேர்முகத் தேர்வில் மானேஜர், தேசிய வங்கி, சென்னை, சொந்த வீடு. தாயார், சகோதர, சகோதரிகள் இல்லை. தகப்பனார் AGM தேசிய வங்கி, வேலைக்குச் செல்லாத பட்டதாரி பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். 9884072273/ 9884026538 பெட்டி எண்: 17072

◆ Iyer, Vadamal, Haritham, Poorattadi (3), Oct '74, B.Com, MBA, Accts Officer, Also Mridangist, 25,000/- p.m, own house, seeks Brahmin girl from decent family. Sub-sect no bar. Ph: 044-22412369, 9282241131. Box No. 17074

திருமண மலர் பகுதியில் இடம் பெறும் விளம்பரங்கள் அனைத்தும் விளம்பரம் செய்பவர்களின் கையொப்பத்துடன் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. மணமகள் அல்லது மணமகன் பற்றிய வயது, வருமானம், அந்தஸ்து உள்ளிட்ட இதர விவரங்கள் விளம்பரதாரர் தரும் குறிப்புகளின் அடிப்படையில் பிரசுரிக்கப்படுகின்றன. இந்த விவரங்களைக் கொண்டு தொடர்பு கொள்ளும் பெற்றோர்கள் அவை சரியான விவரங்களா என்று தனிப்பட்ட முறையில் விசாரித்து உறுதி செய்து கொள்வது நல்லது. மேலும் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும்பொழுதே மருத்துவப் பரிசோதனையும் மேற்கொண்டால் பிறவிக் குறைபாடுகளுடன் குழந்தைகள் பிறப்பதைத் தடுக்கலாமே! - *பதிப்பாளர், மங்கையர் மலர், சென்னை 600 032*

◆◆ஸ்மார்த்த கன்னட பிராமின், காசிப, சுவாதி, 34/183, B.Com, PGDCA, Accounts Executive in TVS Group, Chennai, Rs.13,000/- seeks graduate girl from good family. Contact: 9283207127, 9444489333. பெட்டி எண்: 17075

